24 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும்
(Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



FREE
Real Estate
Classes start
every week
Call:416.321.6969



நதி 24 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2014


# ஐ.நா. மனித உரிமை பேரவையில் அமெரிக்காவின் பிரேரணை

மார்ச் 03, 2014 இல் ஆரம்பமான மனித உரிமைகள் சபையின் 25ஆவது மாநாட்டில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையின் முன்வரைவில் உள்ள சில விடயங்கள் பின்வருமாறு.

இலங்கை அரசு செய்துவரும் கட்டிட நிர்மாணவேலைகளையும், கண்ணிவெடி அகற்றும் வேலைகளையும், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் வேலைகளையும் வரவேற்பதுடன் நீதித்துறையிலும், இராணுவக்குறைப்பிலும், சிறுபான்மையினரின் பிரதிநிதிகளின் கருத்துக்களை மதிப்பளிப்பதிலும், இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு திரும்ப வைப்பதிலும் இன்னும் பல முன்னேற்றங்கள் செய்ய வேண்டியிருப்பதை சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையில் செப்ரெம்பர் 21, 2013 இல் திறம்பட நடைபெற்ற மாகாணசபை தேர்தல்களையும் குறிப்பாக அதில் அதிகளவு வாக்காளர்கள் பங்குபற்றியதை வரவேற்பதுடன் அந்த தேர்தல்களில் நடைபெற்ற அத்துமீறல்கள் மற்றும் வேட்பாளர்களை அச்சுறுத்திய சம்பவங்கள் பற்றி கரிசனையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கை அரசு கடந்த ஓகஸ்ட் 2013 இல் ஐ.நா. உயர் ஆணையாளரின் விஜயத்தை சுமூகமாக நடைபெற செய்தமைக்கு நன்றியை தெரிவிப்பதோடு அவரின் பயணத்தைத் தொடர்ந்து அவரைச் சந்தித்த பொதுமக்களை பயமுறுத்தியது மற்றும் அவரை சந்தித்த அரசியல் வாதிகளை அச்சுறுத்திய சம்பவங்களை பற்றி மிகுந்த கரிசனையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், தொடரும் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் கொலைகள், குறிப்பாக சிறுபான்மை மதங்களைச் சேர்ந்த இந்து, முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் பற்றி மிகவும் அதீத கரிசனையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கை அரசு தான் நடத்திய LLRC ஆணைக்குழு அறிக்கையில் தெரிவித்த பரிந்துரைகளை பூரணமாக நடைமுறைப்படுத்த மீண்டும் அறிவுறுத்துகின்றது.

ஐ.நா. மனித உரிமை சபையின் அதி உயர் ஆணையாளரது செப்ரெம்பர் 25, 2013 இல் சமர்ப்பித்த வாய்மூல அறிக்கையையும் பெப்ரவரி 24, 2014 இல் சமர்ப்பித்த எழுத்து மூல அறிக்கையையும் வரவேற்பதுடன் இலங்கை அரசை மனித உரிமை மீறல்கள் பற்றி சுயாதீனமான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்குவதுடன் இவ் அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றது.

ஐ.நா. மனித உரிமையாளரின் பரிந்துரைகளையும் அவருடைய ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணை நடைபெறவேண்டும் என்ற முடிவையும் வரவேற்பதுடன், ஐ.நா. மனித உரிமை சபையின் அதி உயர் ஆணையாளரது அலுவலகத்தை இலங்கை அரசின் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைகள், இலங்கை அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை பற்றி பேசுவோர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் என்பவற்றை ஆராய்ந்து மீண்டும் ஒரு வாய்மூல அறிக்கையை மனித உரிமை சபையின் 27 ஆவது மாநாட்டிலும் (செப்ரெம்பர் 25, 2014) எழுத்து மூலமான அறிக்கையை மனித உரிமை சபையின் 28 ஆவது மாநாட்டிலும் (மார்ச் 2015) சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றது.


தொடர்ச்சி 02ஆம் பக்கம்


# நடுவானில் மாயமான மலேசிய விமானம்

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங்குக்கு புறப்பட்ட விமானம், கடந்த 7ம் திகதி நள்ளிரவு மாயமானது. இதில் பயணம் செய்த 239 நபர்களின் நிலை என்ன ஆனது என்று தெரியவில்லை. மாயமான விமானத்தை கண்டுபிடிக்க மலேசியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட 12 நாடுகள் 39 விமானங்கள் மற்றும் 42 கப்பல்களை தேடும் பணியில் ஈடுபடுத்தியுள்ளன.



விமானம் வியட்நாம் வான் பகுதியில் தெற்கு சீன கடலில் விழுந்திருக்கலாம் என முதலில் சந்தேகிக்கப்பட்டது. பின்னர் மலாக்கா


தொடர்ச்சி 13ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214



இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON

☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022



THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate of 1% per month.
Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# ஐ.நா....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கை அரசை ஐ.நா. மனித உரிமை சபையின் உயர் ஆணையாளரது அலுவலகம் மேற்கூறிய நடவடிக்கைகளை எடுக்க ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றது.



தற்போதைய மனித உரிமை சபையின் அதி உயர் ஆணையாளரான நவனீதம்பிள்ளையின் பதவிக்காலம் ஒகஸ்ட் 31, 2014 இல் அதாவது மனித உரிமை சபையின் 27ஆவது மாநாட்டிற்கு முன்னர் முடிவடைவது குறிப்பிடத்தக்கது. இவர் செப்ரம்பர் 01, 2008 ஆம் ஆண்டில் இருந்து இப்பதவி வகித்து வருகிறார். சாதாரணமாக இப்பதவி ஒருவருக்கு 4 வருடகாலம் வழங்கப்படும். நவனீதம் பிள்ளையின் பதவிக்காலம் செப்ரெம்பர் 01, 2012 இல் மேலதிகமாக 2 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.

இவ்வறிக்கை தொடர்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர், இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல் பீரிஸ், மொறிஷியஸ் வெளியுறவு அமைச்சர் அர்வின் பூலெல் ஆகியோர் பிபிசி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு.

போர்க்கால குற்றங்கள் பற்றி விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணை கோரப்படும் என்று சர்வதேச சமூகம் முன்னெடுத்துவந்த பிரச்சாரங்கள் பொய்த்துப் போயிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். இலங்கையில் ஆட்சி மாற்றத்தை மட்டும் சர்வதேச சமூகம் விரும்புகிறதே ஒழிய, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கமே அதற்கு இல்லை என்றும் கூறினார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் அரசியல் கைதிகளுக்கும் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் நீதி வழங்க சர்வதேச சமூகம் தவறிவிட்டதாகக் கூறினார். தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை இலங்கை அரசாங்கம் தொடர்வதற்கு சாதகமாகவே அமெரிக்காவின் முன்னெடுப்பில் தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25-வது அமர்வில் உரையாற்றிய இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று கடந்த மாதம் கூறிய மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கையை கடிந்து பேசினார். இலங்கையில் கடந்த 12 மாதங்களில் நல்லிணக்க நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் காணாமல் போனவர்கள் பற்றி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரித்து வருவதாகவும் ஜீ.எல் பீரிஸ் கூறினார்.

கடந்த 30 ஆண்டுகால போர்க்கால இழப்புகள் பற்றி கணக்கெடுப்பு நடந்துள்ளதாகவும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சுமார் 75 ஆயிரம் முஸ்லிம்களை மீள குடியமர்த்தும் வேலைகள் நடந்துவருவதாகவும் வெளியுறவு அமைச்சர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்தார். முன்னாள் போர்ப் பிரதேசங்களிலிருந்து இராணுவம் படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாகவும் மக்களின் சிவில் வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடுகள் எதுவும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார். இனப்பிரச்சினைக்கு நிரந்த தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பங்கெடுக்க மறுத்து வருவதாகவும் கூறிய ஜீ.எல் பீரிஸ், வடக்குப் பிரதேசங்களில் இன விகிதாசாரத்தை சிதைக்கும் முயற்சிகள் நடப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துப் பேசினார்.




ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அண்மைய அறிக்கை, அவருக்குள்ள ஆணை - அதிகாரங்களுக்கு அப்பால் சென்றுள்ளது. அந்த அறிக்கையில் உள்ள பல பரிந்துரைகள் ஒருதலைப்பட்சமானதும் அநாவசியமாக மூக்கை நுழைப்பதும் அரசியல் நோக்கம் கொண்டதுமான பரிந்துரைகளாக உள்ளன என்றார் ஜீ.எல்.பீரிஸ். நவநீதம்பிள்ளையின் அறிக்கை இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் சமூகங்களை மேலும் பிளவுபடுத்தும் என்றும் இலங்கை அமைச்சர் ஐ.நா.வில் கூறினார்.

அமெரிக்கா, பிரிட்டன், மொன்டநேக்ரோ, மசெடோனியா ஆகிய நாடுகளுடன் மொரிஷியஸும் சேர்ந்து முன்மொழிந்து கொண்டு வருகின்ற தீர்மானம் இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயல் என்றும் உள்நாட்டு விவகாரத்தில் அத்துமீறி நுழையும் நடவடிக்கை என்றும் ஜெனீவாவிலுள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவும் கூறியுள்ளார்.

பிபிசி தமிழோசையிடம் கருத்து வெளியிட்ட மொரிஷியஸ் வெளியுறவு அமைச்சர் அர்வின் பூலெல், "மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக குரல்கொடுக்கும் தங்கள் அரசின் நிலைப்பாடு" காரணமாகவே இலங்கை மீதான பிரேரணையை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் சேர்ந்து கொண்டு வருவதாகக் கூறினார். "ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முடிவுகளின் படியும் கொமன்வெல்த் மாநாட்டின் இறுதி முடிவுகளின் அடிப்படையிலுமே நாங்கள் இந்த பிரேரணைக்கு அனுசரணை வழங்குகிறோம்" என்றார் அர்வின் பூலெல். கொமன்வெல்த் சாசனம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் ஆகிய ஏற்பாடுகளுடன் முற்று முழுதாக இசைந்து நடக்க வேண்டும் என்ற தங்களின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

தற்போது விவாத மட்டத்தில் இருக்கும் இலங்கை மீதான தீர்மானத்தின் முன்வரைவில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்றாலும் மனித உரிமை விழுமியங்களைப் பாதுகாத்தல் என்ற முக்கிய கட்டப்பாட்டில் கருத்தொற்றுமை ஏற்படும் என்றும் மொரிஷியஸ் வெளியுறவு அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். இலங்கையில் சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் சில முக்கிய மனித உரிமை விவகாரங்கள் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தினாலேயே இலங்கை மீதான தீர்மானத்தை முன்னின்று கொண்டு வருவதாக மொரிஷியஸ் வெளியுறவு அமைச்சர் அர்வின் பூலெல் பிபிசியிடம் தெரிவித்தார்.

மொரிஷியஸ் எந்தவொரு நாட்டின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com www.tamilvanakkam.com*

# அமெரிக்க பிரேரணையின் இறுதி வடிவம் எவ்வாறு அமையப்போகின்றது?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணை குறித்து பல்வேறு விமர்சனங்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. தமிழர் தரப்பில், குறித்த பிரேரணை போதாமைகளைக் கொண்டுள்ளது என விமர்சிக்கப்படு கின்றது. அமெரிக்கா ஏமாற்றிவிட்டதென்றும் தீவிரமான குரல்கள் ஒலிக்கின்றன. அமெரிக்கா இலங்கைக்கு எதிராக பிரேரணை யொன்றை முன்வைத்துள்ள போதிலும் அதில் சர்வதேச பொறிமுறைக்கான முன்மொழிவுகள் காணப்படவில்லை எனவும், உள்நாட்டு விசாரணை ஒன்றையே அது வலியுறுத்துவதாகவும், இதேவேளை - இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கும் நோக்கில் பிரேரணை அமைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணை மட்டுமல்லாது, இன்று பல வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல்போனோரின் பிரச்சினைக்கான தீர்வு குறித்ததெல்லாம் அமெரிக்கப்பிரேரணையில் உறுதியான வலியுறுத்தல்களை தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அதாவது, இம்முறை ஜெனீவா கூட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டு வரப்போவதாக அறிவிக்கப்பட்ட பிரேரணை குறித்து அதீதமான எதிர்பார்ப்புகள் தமிழர் தரப்பிடம் காணப்பட்டன. தமிழ் ஊடகங்களும் இது குறித்து தமிழ் மக்களை அதீத கற்பனைக்கு தூண்டி விட்டதையும் குறிப்பிடத்தான் வேண்டும். 'இம்முறை நடைபெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையினால் இலங்கைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்படலாம் என சில அரசியல் விமர்சகர்கள் கூறி வந்தாலும் கூட, பாரதூரமாக எதுவுமே நடந்து விடப்போவதில்லை என்பதுதான் உண்மை. கடந்த கூட்டத் தொடர்கள் ஆரம்பமாவதற்கு முன்னரும் கூட இவ்வாறான பரபரப்புகள் இருக்கத்தான் செய்தன. இத்தடவை சர்வதேச அழுத்தம் முன்னரை விடவும் சற்று அதிகமாக பிரயோகிக்கப்படலாமே தவிர, பெரிதாக எதுவும் நடந்து விடப்போவதில்லை' என கடந்த 15-02-2014 விளம்பரம் இதழில் 'ஜெனீவா பிரேணையும் அரசிற்கு அதிகரித்து வரும் சிங்கள மக்களின் ஆதரவும்' என்ற தலைப்பிலான கட்டுரையில் நாம் குறிப்பிட்டிருந்தோம் என்பதையும் இங்கு நினைவு கொள்ளலாம்.

உண்மையில் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளும் நகர்வுகள் அந்நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இடம்பெறும் என்பதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு விளங்கிக் கொண்டால் மட்டுமே ஏமாற்றங்களைத் தவிர்த்துக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகர முடியும். இப்போது, அமெரிக்கப் பிரேரணை இலங்கை யின் இறைமைக்கு அச்சுறுத்தலானது என இலங்கை அரசதரப்பிலிருந்து கடுமையான விமர்சனங்கள் வந்த வண்ணமுள்ளன. தீவிரவாத சிங்களத் தரப்புகள் இப்பிரேரணையை மேலும் மோசமாக கண்டித்து வருகின்றன. இது அரசாங்கத்திற்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கினையே அதிகரிக்கும். நடைபெறவிருக்கும் தென்மாகாண, மேல் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளில் இதனை எதிர்பார்க்கலாம். எனவே, சிங்களத் தரப்பு சில விடயங்களில் மிக தந்திரோபாயமாக நகர்வுகளை மேற்கொள்கின்றமையினை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். அமெரிக்கப் பிரேரணையை விடவும் ஐ.நா மனிதஉரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை இலங்கைக்கு மிக அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ள தை இங்கு குறிப்பிடலாம். சர்வதேச விசாரணையே அவசியம் என்பதை அவர் அழுத்தம் திருத்தமாக அவரது அறிக்கையில் குறிப்பிடுகின்றார்.



இந்நிலையில், இலங்கை மீதான அமெரிக்கப் பிரேரணை மீது தமிழர் தரப்பில் வெளியிடப்படுகின்ற விமர்சனங்களால் தமிழருக்கு எற்படும் பாதிப்பு குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் சிலவற்றை தெளிவுபடுத்தியுள்ளமை இங்கு கவனிக்கத் தக்கதாகும். ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் கொண்டு வரப்படுகின்ற இலங்கை தொடர்பான தீர்மானம் சர்வதேச விசாரணையைக் கோருவதையே நோக்காகக் கொண்டது என்றும், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் மிகவும் நிதானமாகவும், அவதான மாகவும் நடந்துகொள்ள வேண்டிய கடமைப்பாடு தங்களுக்கு இருக்கின்றதென்றும் அவர் குறிப்பிடுகின்றார். அமெரிக்கத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் எதிர்க்கின்ற நிலையில், தாங்களும் அதனை எதிர்த்தால் சர்வதேச சமூகம் தமிழர் பிரச்சினையை இலகுவாக கைகழுவி விட்டுவிடும் வாய்ப்பிருக்கிறது என்றும் சம்பந்தன் சுட்டிக் காட்டுகின்றார். அமெரிக்கத் தீர்மானத்தின் முன்வரைவு கடந்த வாரம் வெளியானதும் அந்தத் தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கும் நோக்குடன் கொண்டுவரப்படவில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியிருந்தார்.

அமெரிக்கத் தீர்மானம் தமிழர்களை ஏமாற்றி விட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனும் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு தருணத்திலேயே சம்பந்தனின் கருத்து வெளிப்படுத்தப் பட்டுள்ளது. சர்வதேச விசாரணை என்கின்ற சொற்பதம் அந்தப் பிரேரணையின் முன் வரைவில் இல்லை என்பதற்காக, அதனை பொறுப்பற்ற முறையில் எதிர்க்க முடியாது என்றும், ஜெனீவா பிரேரணையின் முன்வரைவில் அடங்கியுள்ள விசாரணை கோரிக்கைகள் தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதை நோக்காகக் கொண்டது என்றும், அந்த நோக்கத்தை அடைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். அமெரிக்கப் பிரேணையை தமிழர் தரப்பு எதிர்க்கக் கூடாது என்று கூறுகின்ற அவர், பிரேரணை தொடர்பில் சில யோசனை களையும் முன்வைத்திருக்கின்றார். தமிழ் மக்களுக்குத் தேவையான அரசியல் தீர்வு, வடக்கு கிழக்கில் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீட்டல் போன்ற விடயங்களை எட்டக்கூடிய விதத்தில் இந்த தீர்மானத்தில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இலங்கையில் உள்ளக விசாரணை நடைபெறவேண்டும், அதனை ஐ.நா மனித உரிமைகள் பேரவை கண்காணிக்க வேண்டும் என்ற ஏற்பாடுகளுக்கு மேலதிக மாக, 'மனித உரிமைகள் உயர் ஆணையர் தனியான விசாரணை நடத்த வேண்டும்' என்று தீர்மானத்தின் முன்வரைவு கூறுகின்றமை யினையும் சம்பந்தன் சுட்டிக்காட்டுகின்றார்.

இதனால், ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் நடத்துகின்ற விசாரணை, சர்வதேச விசாரணையாகவே இருக்க முடியும் என்றும், சர்வதேச விசாரணை என்ற சொற்பதம் இல்லை என்பதற்காக அதனை தாங்கள் எதிர்க்க முடியாது என்றும் அவர் சொல்கின்றார். எது எப்படியாயினும், போராட்டத்திற்குப் பிந்திய, அல்லது போருக்குப் பிந்திய தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள் வெறும் உணர்ச்சி வசப்பட்டதாக இல்லாமல் முழுவதும் அறிவு சார்ந்ததாகவும், இராஜதந்திர ரீதியிலானதாகவும் அமைய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஜெனீவாவில் கடந்த மார்ச் 3ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள ஐ.நா மனித உரிமை-கள் பேரவையின் 25வது கூட்டத் தொடர் இம்மாதம் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. தற்போது அமெரிக்கப் பிரேரணை தொடர்பில் உறுப்பு நாடுகள் மத்தியில் கலந்துரையாடல்கள், விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. உறுப்பு நாடுகளுக்கிடையில் நடைபெற்ற அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தைகளின்போது வாத - விவாதங்களும் இடம்பெற்றுள்ளன.

**- விகிர்தன் -**

இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ள பாகிஸ்தான், சீனா, கியூபா, ரஸ்யா உள்ளிட்ட நாடுகள் இலங்கை மீது விசாரணை நடத்துவதற்கு ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையருக்கு அதிகாரங்கள் இல்லை என்றும், அதற்காக ஆணையத்திடம் நிதிவளம் இல்லை என்றும் வாதிட்டுள்ளன. எனினும், நவநீதம்பிள்ளை யின் அறிக்கை இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசி யம் என்பதை வலியுறுத்துகின்ற நிலையில், அந்த விதமான ஏற்பாடுகள் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் வாதிட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் விசாரணை நடத்துவதற்கான பொறிமுறை பற்றிய ஏற்பாடுகள் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்படலாம், இலங்கைக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டு விட்டது, மேலும் அவகாசம் கொடுப்பது போர்க்குற்ற ஆதாரங்களை அழித்து விடுவதற்கு வழிவகுக்கும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச்சபை அங்கு சுட்டிக் காட்டியுள்ளது. அமெரிக்கா கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கின்ற மற்றும், அந்தத் தீர்மானத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் என்று கோருகின்ற நாடுகளின் கருத்துக்களே சபையில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# ‘ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கியம் வளமான வாழ்வையே விரும்புகிறார், உள்நிலையிலும் வெளிப்புறத்திலும் இயற்கையோடு இயைந்திருப்பதே உண்மையான ஆரோக்கியத்தின் அடிப்படையான விளக்கம்’

‘அற்புதமான அனுபவம்! இங்கிருக்கும் ஒருங்கிணைப்பாளர்களும் தன்னார்வ தொண்டர்களும் மசாஜ் செய்வோரும் இப்படியொரு மகத்தான அனுபவத்தை எனக்கு வழங்கியுள்ளனர். இங்கு எனக்கு அடிப்படையான யோக ஆசனங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும் என் வாழ்க்கை முறையால் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகும் எனக்கு அமைதியான தியானமும் தரப்பட்டது. இந்த அனுபவம் மிகமிக அற்புதமாக இருந்தது. எழில் கொஞ்சும் பசுமையான சூழ்நிலை, தியான மண்டபங்கள் மேலும் அங்கு நடத்தப்பட்ட வகுப்பு என அனைத்துமே மிக அற்புதம்’, என்பவர் இளம் வயதுக்காரரான திரு. சுனில் முரளிதரன், பெங்களூரைச் சேர்ந்த இன்ஜினியர்.

அப்படி எங்குதான் சென்றார் திரு. சுனில்? யோகா செய்ய வேண்டுமென்றால் குருவை தேடிச் செல்ல வேண்டும், மசாஜ் செய்ய வேண்டுமென்றால் கேரளத்திற்கு டிக்கெட் போட வேண்டும். இரண்டும் ஒரு சேர அதுவும் தன்னார்வ தொண்டர்களுடன் என்று பார்கையில் ‘ஈஷா யோகா மையம்’ என திட்டவட்டமாக புரிகிறது. கண்களில் உற்சாகத்துடன் புத்துணர்வோடு பேசும் சுனிலிடம் தென்படுவதோ ஆரோக்கியப் புன்னகை.

‘எனக்கு இருதய பிரச்சினை இருந்தது. அச்சமயத்தில்தான் நான் ஈஷா மையம் சென்றேன், அப்போது என்னால் சிறிது தூரம் கூட நடக்க இயலவில்லை. நான் மையத்தில் தொடர்ந்து நான்கு வாரங்கள் தங்கி சில யோகாப் பயிற்சிகள் மற்றும் சில வைத்திய முறைகளை கடைப்பிடித்தேன். அதன் மூலம் பை-பாஸ் அறுவை சிகிச்சையை தவிர்த்துவிட்டேன். 6 கி.மீ மலையேற்றம் செல்லும் அளவிற்கு உடல் நலம் தேறியது. எனக்கு அளிக்கப்பட்ட மருத்துவத்தினால் மட்டும் இது சாத்திய மில்லை. மையத்தின் சூழ்நிலை, உணவு, மக்களின் அன்பு, அரவணைப்பு இவையே நான் முழுவதுமாக நிவாரணம் பெற துணையாயிருந்தது’ என தான் மறுவாழ்வு பெற்ற அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்பவர் ஈரோட்டை சேர்ந்த தொழிலதிபர், திரு. சதாசிவம் அவர்கள்.

திரு. சதாசிவம் அவர்களுக்கு சத்குருவின் வழிகாட்டுதலோடு சித்தா, ஆயுர்வேதா, சிறிதளவு நேச்சுரோபதி, யோகா இவற்றின் சீரான கலவையாய் கோவை ஈஷா யோகா மையத்தில் அமைந்துள்ள ரெஜீவினேஷன் சென்டரில் (Rejuvenation Center) சிகிச்சை வழங்கப்பட்டது.

இவர்களுக்கு மட்டுமல்ல நாள்தோறும் ரெஜீவினேஷன் சென்டருக்கு வந்து செல்வோர் பலரின் அனுபவங்களும் இவ்வாறே அமைந்துள்ளது. 20 வருடங்களாய் இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டவர்களும் இன்சுலின் தேவையின்றி போன கதையும் இங்குண்டு. ஒரு சிலருக்கு மறுவாழ்வு கொடுப்பதாயும் மற்றும் சிலருக்கு புத்துணவூட்டுவதாயும் விளங்கும் ரெஜீவினேஷன் சென்டரை பற்றி சத்குருவின் வார்த்தைகளில், ‘இங்கு உடலின் முழு அமைப்புமே முற்றிலும் புதிய விதத்தில் கையாளப்படுகிறது. உங்களுடைய உடல் அணுக்களையும் வளர்சிதை மாற்றத்தையும் தூண்டிவிடுவதன் மூலம் உங்கள் உடலே அதனை திருத்தி அமைத்துக்கொள்ளச் செய்யப்படுகிறது. நீங்கள் எம் மாதிரியான மருந்து உட்கொண்டாலும் உங்கள் உடல்தான் தன்னை தானே திருத்திக் கொள்கிறது. மருந்தல்ல, அதனால் இங்கு சரிவிகிதமான உணவின் மூலமும், சரியான உடற்பயிற்சியுடன் உடலிற்கு தேவையான காலமும் கொடுத்து குறிப்பிட்ட சில வகையான மூலிகைகள் மற்றும் சில பொருட்களின் உதவியுடன் உங்கள் உடல் இயக்கத்தை பெரிய அளவில் புத்துணர் வூட்ட முடியும். இன்றைக்கு வயோதிகம் என்றால் மருந்து, மாத்திரை, ஆஸ்பத்திரி என்றாகி விட்டது. உங்கள் உடலில் செயல்படும் புத்துணர்ச்சி முறை சரியாக தூண்டப்படுமானால் வயோதிகம் என்பது இம்சையாக இருக்காது’ என்னும் சத்குரு அவர்கள், ‘இந்த ரெஜீவினேஷன் சென்டர் ஒரு அழகியல் கூடத்தை (SPA) காட்டிலும் பல விதங்களில் வித்தியாசமானது’ என்றும் சொல்கிறார்.

ஈஷா யோகா மையம் தொடங்கிய புதிதில் இங்கு வந்து செல்வோருக்கு உதவும் விதமாய் தொடங்கப்பட்ட யோகா மருத்துவமனையின் தேவை பெருகவே 6 ஆண்டுகளுக்கு முன்னர் ரெஜீவினேஷன் சென்டராய் புது வடிவம் பெற்றது. இங்கு சித்த மருத்துவ முறை, ஆயுர்வேத மற்றும் ஸ்விடிஷ் மஸாஜ் முறைகள் குறிப்பிட்ட வகையான நேச்சுரோபதி சிகிச்சைகள், பழங்கால யோக முறைகளோடு சில அரிய மூலிகைகளை பயன்படுத்தியும் தேவைக் கேற்ப சிகிச்சை வழங்கப்படுகிறது. இங்கு வழங்கப்படும் ஒவ்வொரு சிகிச்சை முறைக் கும் அத்துறையை சேர்ந்த கை தேர்ந்த நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

பாரம்பரியமான ஆயுர்வேத சிகிச்சை முறையில் சிகிச்சை அளித்து வருபவர் களால் இங்கு மசாஜ் செய்யப்படுகிறது. இவர்கள் பிரத்யேகமாக கேரளத்திலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர். நேச்சுரோபதிக் கும் ஸ்விடிஷ் மசாஜிற்கும் அம்முறைகளில் கை தேர்ந்தவர்கள் உள்ளனர். சித்த மருத்துவத்திலும் ஆங்கில மருத்துவத்திலும் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் மையத்திலேயே உள்ளனர். அனைத்திற்கும் முத்தாய்ப்பாக சத்குரு அவர்களால் இவ்வுடல் குறித்து பயிற்சியளிக்கப்பட்ட பிரமச்சாரிகள் இச்சிகிச்சைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

புத்துணர்வு என்றால்! பெரும்பாலான அழகியல் கூடங்கள் ஒருவருக்கு இனிமை யான இளைப்பாறலையே வழங்குகின்றன. ஆனால் அவர்களுக்கு உண்மையில் புத்துணர்வு என்பதை பற்றி தெரிந்திருக்க வில்லை. இந்த அழகியல் கூடங்கள் நமக்கு ஒரு நிலையில் வேலை செய்யத்தான் செய்கின்றன. ஆனால் நாம் இங்கு புத்துணர்வு என்பதை முற்றிலும் மாறுபட்ட ஒரு பரிமாணத்தில் அணுகுகிறோம். ஆரோக்கியம் என்பது தனியொருவர் தன் உடலை எவ்வாறு பயன்படுத்தி அல்லது துஷ்பிரயோகப்படுத்தி இருக்கிறார். எவ்வாறான வாழ்க்கை முறையை கடைப் பிடிக்கிறார் என்பவற்றைப் பொறுத்து தனியொருவருடைய உடல் மாறுபடுகிறது. நீங்கள் யோகப் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வருகையில் எல்லா விதத்திலும் ஐந்து வயதாவது நீங்கள் குறைந்துள்ளதை கவனிக்க முடியும். இப்பயிற்சிகள் உங்கள் சக்திநிலையிலும் உங்கள் உடலின் உயிரோட்டத்திலும் பெரிய அளவில் தாக்கம் ஏற்படுத்துவதால் உங்கள் வயதை நீங்களே மறந்து போகும் அளவிற்கு இப்பயிற்சிகள் உங்களை மாற்றி அமைக்கிறது. இதுவே ரெஜீவினேஷன் சென்டரின் மையநோக்கமும் கூட.

ரெஜீவினேஷன் சென்டரில் இருவகையாய் ஒருவரின் உடலில் ஏற்படும் இடர் அணுகப்படுகிறது. திரு. சதாசிவம் அவர்கள் மேற்கொண்டது ‘யோகா மார்கா’ என்னும் 21 நாள் சிகிச்சை நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட எல்லாவகையான நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படு கிறது. அதில் சர்க்கரை நோய், பைல்ஸ், தலைவலி, உடற்பருமன், சைனஸ், முட்டு வலி, ஹைப்பர் டென்ஷன், இருதயம் சம்பந்தமான பிரச்சினைகளும் உள்ளடக்கம். இவ்வகையான நோய்களுக்கு முன்னர் குறிப்பிட்டபடி சித்த மருத்துவம், ஆயுர்வேத தெரபிகள் போன்ற மாற்று மருந்துகளின்



சத்குரு வாசுதேவ்

தனித்துவமான கலவை வழங்கப்படுகிறது. இவ்வகுப்பு செய்வதற்கு ஈஷா யோகா அடிப் படை வகுப்பை செய்திருக்க வேண்டும். ஏனெனில் மார்கா நிகழ்ச்சியை பிணைக்கும் நூலிழையாய் யோகா விளங்குகிறது.

சத்குரு அவர்களால் இம்முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ள ஈஷா பிரமசாரி களான மா உஜ்ஜ்வலாவும் மா சமபுத்தியும் இது பற்றி பேசும் போது ‘நாம் இங்கு அவர்களுக்கு சரியான சூழ்நிலையை உருவாக்கி, அவர்களுடைய ஆரோக்கியத் திற்கு தேவையான ஸ்திரமான அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறோம். அவர்கள் வீட்டிற்கு சென்றாலும் தன் வாழ்க்கை சூழ்நிலையை எவ்வாறு உருவாக்கி உன்னதமான ஆரோக்கியத்தை உணரலாம் என்பதற்கும் இங்கு முன்மாதிரி அமைத்துக் கொடுக்கிறோம். அத்தோடு அல்லாமல் இங்கு வருவோருக்கு அடிப்படையான, ஆனால் மிக சக்திவாய்ந்த யோகப் பயிற்சி களும் கற்றுத் தருகிறோம்’ என்கின்றனர்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

ரெஜீவினேஷன் சென்டரில் 6 வருட அனுபவம் கொண்ட இருவரும் இங்கு வகுப்புகள் நடக்கும்பொழுது நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி சிகிச்சை அளித்து வருகின்றர்.

சிகிச்சை அளித்து நல்வாழ்வு வழங்கும் சிகிச்சை வகுப்புகள் ஒருபுறமிருக்க புத்துணர்வூட்டும் புத்துணர்வு நிகழ்ச்சிகளும் மறுபுறம் நடந்து கொண்டிருக்கிறது. திரு. சுனில் அவர்கள் மேற்கொண்டது ஆயுர் ரசாயனா எனப்படும் ஒரு புத்துணர்வு நிகழ்ச்சியைத் தான் சரி, வயோதிகத்தில் தான் சிகிச்சை என்றால் இளமையில் என்ன என்று இவரை பார்த்து நீங்கள் கேட்கலாம். இன்றைய பரபரப்பான வாழ்க்கை சூழலில் வயது வேறுபாடின்றி நோய் என்பது எல்லா தரப்பினருக்கும் பொதுவாகி போய்விட்டது. மன அழுத்தம், அதனால் ஏற்படும் உளைச்சல், உடல் சோர்வு, விளைவு...உடல் மற்றும் மன சூழலில் சிக்குண்டு, துவண்டுப் போய்விட்டனர்.

இன்றைய இளைஞர்கள். இன்றைய கம்யூட்டர் யுவதிகளுக்காக திரு. சுனில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# மோட்கேஜ் கிளினிக்

- ⇨ நல்ல ரேட்ல மோட்கேஜ் எடுக்க வேணும்..
- ⇨ லைன் ஒப் கிறெடிட் எடுக்க வேணும்..
- ⇨ ரீபைனான்ஸ் செய்ய வேணும்..
- ⇨ எல்லா கடனையும் ஒரே பேமென்டா மாத்த வேணும்..
- ⇨ 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்..
- ⇨ பாங்க்ரப்சில இருக்கிறன், ஆனாலும் மோட்கேஜ் தேவை..
- ⇨ மோட்கேஜ் கட்டாமல் வீடு பவர் ஒப் சேலுக்கும் போகப்போகுது..
- ⇨ வீட்டை அல்லது பேஸ்மென்ட்டையாவது வாடகைக்கு விட வேணும்..

இந்த பிரச்சினைக்கெல்லாம்
இப்பிடியே
யோசிச்சுக்கொண்டிருக்காமல் ,
ஒருக்கா கோல் பண்ணுவம் !!!





தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**



ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-816-9011 / 416-644-3555 /416-259-2002

rapid realty inc.

# விளையாட்டுத் தகவல்கள் 359

## ஐந்தாவது முறையாக ஆசியக் கோப்பையை வென்ற இலங்கை!

வங்கதேசத்தில் நடைபெற்ற ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி போட்டியில் நடப்பு சாம்பியனாக இருந்த பாகிஸ்தானை வீழ்த்தி இலங்கை அணி ஐந்தாவது முறையாக ஆசியக் கோப்பையை வென்றுள்ளது. ஐந்து நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் வங்கதேசத்தில் நடைபெற்றது. இந்தியா, ஆப்கானிஸ்தான், வங்கதேச அணிகள், லீக் போட்டியுடன் திரும்பின. நடை-பெற்ற இறுதிச் சுற்றில் ‘நடப்பு சாம்பியன்’ பாகிஸ்தான் அணி, இலங்கையுடன் மோதியது. இலங்கை அணியில் அஜந்தா மெண்டிசிற்குப் பதில், வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா சேர்க்கப்பட்டார். இடுப்பு பகுதியில் உள்ள வலியை பொருட்படுத்தாமல், அப்ரிடி களமிறங்கினார். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களமிறங்கி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 260 ஓட்டங்கள் எடுத்தது.



## சிறப்பாக செயல்பட்டு வரும் மலிங்கா!

மலிங்கா வீசிய முதல் ஓவரில் இரண்டு அபாரமான பவுண்டரி-களை விளாசிய இடது கை வீரர் ஷர்ஜீல் கான் கடைசிய-ில் அதே ஓவரில் மலிங்கா பந்தை சிம்பிள் கேட்ச் கொடுத்து வெளியேறினார். மலிங்காவின் 3வது ஓவரின் கடைசி பந்தில் ஷேஜாத் 5 ரன்னில் அவுட் ஆனார். ஓ.்.ப் ஸைட் பந்தை பேக்.்.புட் பன்ச் செய்ய முயன்று எட்ஜ் செய்தார் சங்கா கேட்ச் பிடித்தார். மொகமது ஹபீஸ் 3 ரன் எடுத்திருந்தபோது மலிங்காவின் அவுட் ஸ்விங்கரை கால்களை நகர்த்தாமல் தொட்டு சங்காவிடம் கேட்ச் கொடுத்தார். இதனையடுத்து 261 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி திரிமன்னே, ஜெயவர்த்தன அதிரடியில் 46.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து இறுதிச்சுற்றில் வெற்றிபெற்று ஆசியக்கிண்ணத்தை கைப்பற்றினர். குசால் பெரரா 42 ஓட்டங்களும், ஜெயவர்த்தன அரைசதம் கடந்து 75 ஓட்டங்களும், திரிமன்னே சதம் கடந்து 101 ஓட்டங்களும் எடுத்தனர். பாகிஸ்தானை தொடர்ந்து பேட் செய்த இலங்கை அணி 50 ஓவர்களில் 22 பந்துகள் மீதமிருந்த போதே போட்டியை வென்றது.

தொடக்க ஆட்டக்காரரான லஹிரு திரிமன்னே 108 பந்துகளில் 101 ரன்கள் குவித்து இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இது இவரது மூன்றாவது சதமாகும். நட்சத்திர ஆட்டக்காரரான ஜெயவர்தனே 93 பந்துகளில் 75 ரன்கள் குவித்தார். இலங்கை அணி 5–வது முறையாக ஆசிய கோப்பையை கைப்பற்றி உள்ளது. இதற்கு முன்பு 1986, 1997, 2004, 2008 ஆகிய ஆண்டுகளில் வெற்றி பெற்று இருந்தது. வெற்றி குறித்து இலங்கை அணியின் அணித்தலைவர் மேத்யூஸ் கூறுகையில், முக்கியமான ஆட்டங்களில் இறுதிப்போட்டிகளில் தோல்வி அடைந்து வந்தோம். அதற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினேன். தற்போது ஆசிய கிண்ணத்தை வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. டாஸ் முக்கிய பங்கு வகித்தது என்று கருதவில்லை, மலிங்காவின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது என்று தெரிவி த்துள்ளார். இதுகுறித்து மாத்யூஸ் கூறுகை யில், அனுபவ வீரர்களான சங்கக்கார, ஜெயவர்தனாவின் ஓய்வுக்கு பின் இவர்களது இடத்தை முறையே திரிமான்னே, சண்டிமால் நிரப்புவார்கள். திரிமான்னேவை பொறுத்த வரை பேட்டிங் வரிசையில் எந்த இடத்தில் களமிறங்கினாலும், ஓட்டங்கள் எடுக்கும் திறன் பெற்றவர். சமீபத்தில் வங்க தேசத்துக்கு எதிராக நடந்த தொடரில் தில்ஷன் காயம் அடைந்தார். இதனால் ஆசிய கிண்ணப் போட்டியில் தொடக்க வீரர் வாய்ப்பு திரிமான்னேவுக்கு கிடைத்தது. இதைப்பயன்படுத்திய இவர், இறுதிச்சுற்றில் வியக்கத்தக்க ஆட்டத்தை வெளிப்படுத்தி னார் என்று தெரிவித்துள்ளார். மேலும் மலிங்கா பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றும், கிண்ணத்தை வென்றது கடின உழைப்பிற்கு கிடைத்த வெற்றி எனவும் தெரிவித்துள்ளார். 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இலங்கை, ஆசிய கோப்பையை ஐந்தாவது முறையாக வென்றது. இதன்மூலம், இலங்கை அணி இந்தியாவின் ரெகார்டை சமன் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்டை வசப்படுத்தியவர்கள்! மனம் திறக்கிறார் காலிஸ்

உலகின் சிறந்த வீரர் லாரா தான் என்றும், சச்சின் டெண்டுல்கரின் சாதனைகள் வியக்க த்தக்கது எனவும் தென் ஆப்ரிக்காவின் ஜேக் காலிஸ் தெரிவித்துள்ளார். தென் ஆப்ரிக்காவை சேர்ந்த ஆல்ரவுண்டர் ஜேக் காலிஸ், உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர் ஆவார். சமீபத்தில் டெஸ்ட் போட்டி களில் இருந்து ஓய்வு பெற்றவர், கேப்டவுனில் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறுகையில், சர்வதேச கிரிக்கெட்டுக்கு அந்த விளையாட்டின் முன்னேற்றத்திற்காக டெண்டுல்கர் அதிகமான பங்களிப்பை செய்துள்ளார். அவர் உள்ளுணர்வுடன் சரியான வழியில் கிரிக்கெட் ஆடினார். அவரது சாதனைகள் வியக்கத்தக்கது நம்ப முடியாதது, அவரது சாதனைகளை எட்டுவது மிகவும் கடினம். உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் லாரா ஆவார், வேகப்பந்து வீரர்களில் வாசிம் அக்ரம் தான் சிறந்தவர், பந்தை சுவிங் செய்வதில் அவர் வல்லவர்.

சுழற்பந்து வீரர்களில் வார்னே சிறந்தவர் ஆவார், ஆட்டத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் கெட்டிக்காரர். உலக கிண்ணத்தை வென்ற தென் ஆபிரிக்க அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்பதே என் கிரிக்கெட் வாழ்க்கையில் இன்னும் நிறைவேறாமல் இருக்கும் ஆசையாகும்.

**T20 தரவரிசை:** முதலிடத்தில் இலங்கை, இரண்டாம-ிடத்தில் இந்தியா. சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது. இதன்படி அணிகள் தர வரிசையில் இலங்கை அணி 129 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. இந்தியா, தென் ஆப்பிரிக்கா அணிகள் தலா 123 புள்ளிகள் பெற்றாலும், சமீபத்தில் சர்வதேச 20 போட்டியில் விளையாடாத இந்திய அணி விக-ிதாச்சார புள்ளி அடிப்படையில் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது. துடுப்பாட்ட தர வரிசையில் நியூசிலாந்து வீரர் பிரன்டன் மெக்கல்லம் முதலிடத்தில் தொடருகிறார். இந்திய வீரர்கள் விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ்சிங் ஆகியோர் முறையே நான்காம் முதல் ஆறாம் இடங்களை பிடித்துள்ளனர். பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி யின் சுழற்பந்து வீச்சாளர் சுனில்நரின் முதலிடத்தில் நீடிக்கிறார். சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் முகமது ஹபீஸ் (பாகிஸ்தான்) முதலிடத்திலும், ஷேன் வாட்சன் (அவுஸ்திரேலியா) இரண்டாவது இடத்திலும், யுவராஜ்சிங் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.



எஸ். கணேஷ்






# அடமானக் கடனின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி



உதாரணம்
ஆதனவிலை $250,000
முதலீடு 5% ($12,500)
காப்புறுதி பிறீமியம் 3.15%
புதிய அடமானக்காப்புறுதி = $250,000 X 3.15 =$7,8750

இதற்கு PST உம் அடவிறப்படும் என்பதனையும் ஞாபகத்தில் கொள்க
உதாரணம் ஆதனவிலை $250,000
முதலீடு 10% (or $25,000)
காப்புறுதி பிறீமியம் 2.40%
அடமானக்கடன் காப்புறுதி = $250,000 X 2.40 =$6,000

உதாரணம்
ஆதனவிலை $250,000
முதலீடு 15% ($37,500)
காப்புறுதி பிறீமியம் 1.8%
அடமானக்கடன் காப்புறுதி $250,000 X 1.80 = $4,500

# அடமானக் கடனின் ஆதனக்காப்புறுதி அதிகரிக்கின்றது - May 01, 2014

## CMHC: CANADA MORTGAGE AND HOUSING CORPORATION

65 வருடங்களிற்கு மேலாக கனேடிய மக்கள் வீடு, மனை வாங்குவதற்கு உற்ற தோழனான உதவிபுரிவது CMHC ஆகும். குறைந்த முதலீட்டுடன் (ஆகக்குறைந்தது 5%) வீடு, மனை வாங்குவதற்கு வழங்கும் நிதியின் பாதுகாப்பரனாக செயல்படுவது CMCH இன் காப்புறுதி ஆகும். பொதுவாக 20% இற்கு குறைவான முதலீட்டுடன் வீடு, மனை வாங்குபவர்களிற்கு உதவுவதற்காக அரசினால் உருவாக்கப்பட்டதே CMHC ஆகும். இதனைவிட மேலும் இரு காப்புறுதி நிறுவனங்கள் இதே உதவியைச் செய்கின்றது. இவை முறையே Genworth Financial மற்றும் Canada Guarantee. ஆதனம் வாங்கும்போது வாங்கியவரால், மாதந்த அடமானக்கடன் கொடுப்பனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டு, கொடுப்பனவு நிற்பாட்டும் போது, அதனால் ஏற்படும் இழப்பை நிவர்த்தி செய்வதே இந்த நிறுவனங்களின் நோக்கமாகும். இந்நிறுவனங்கள் ஆதனம் வாங்குபவர்களின் முதலீட்டிற்கு ஏற்ப காப்புறுதி பிறீமியத்தை (Insurance Premium) அறவிடுகின்றது.

மிகக் குறைந்த முதலீட்டிற்கு (5%) அதிக காப்புறுதி பிறீமியம் அறவிடப்படுகின்றது. இவர்களினால் அதிக Risk இனை காப்புறுதி நிறுவனம் எடுப்பதே குறிப்பிடத்தக்க காரணமாகும். 20% அல்லது அதற்கு மேலான ஆரம்ப முதலீட்டுடன் ஆதனம் வாங்கும் போது, எதுவித காப்புறுதி பிறீமியமும் வாங்குபவரிடம் அறவிடப்பட மாட்டாது. பொதுவான சந்தர்ப்பங்களில் ஆதனத்தின் விலை 20% இற்கு மேலாக குறையாமல் இருக்கலாம் என்ற எண்ணப்பாடே இதற்கு காரணமாகலாம். இதுவரை அறவிடப்பட்ட காப்புறுதி பிறீமியம் மே 01, 2014 இலிருந்து மேலதிகமாக அறவிடப்படுவது என்பது விரும்பாத, ஆனால் தவிர்க்க முடியாத அதிகரிப்பாகும். ஆனால் இவ் அதிகரிப்பு 1990 இற்கு பிற்பாடு இதுவே முதல் தடவையாகும். இதனால் ஆதனம் வாங்குபவர்களின் மாதாந்த கொடுப்பனவில் அதிகரிப்பு ஏற்படும். கடந்த சில



வருடங்களாக மத்திய அரசு ஆதன வியாபாரத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு பல தீவிர முயற்சிகளை எடுத்து வருவதனை விளம்பர வாசிப்பாளர்கள் அறிந்திருப்பீர்கள்.

இதன் அடுத்த அங்கமாக இந்த காப்புறுதி பிறீமியம் அதிகரிப்பையும் கொள்ளலாம். ஆனால் இதனால் வீட்டு வியாபாரத்தில் பெரிய மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆனாலும் பாதிப்பு உள்ளது.

இவ் அதிகரிப்பு May 01, 2014 இலிருந்து ஆரம்பிக்க

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 411

இருந்தாலும், இந்த திகதிக்கு முன்பாக அடமானக்கடனிற்கு, பத்திரம் வழங்கியிருந்தால் முந்தைய காப்புறுதி பிறீமியமே அறவிடப்படும். Closing date, பின்னைய திகதியாக இருந்தாலும் முன்னைய காப்புறுதி பிறீமியமே அறவிடப்படும். புதியகாப்புறுதியை ஆகக்கூடிய பெறுமதி 3.15% வரை அதிகரிக்கப்படுகின்றது. பொதுவாக 20% இற்கு மேற்பட்ட முதலீட்டிற்கு, நிதிநிறுவனங்கள் அடமானக்கடன் காப்புறுதியை கடன் பெறுபவர்களிடமிருந்து அறவிடுவதில்லை.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated



"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"
Raja Mahendran, P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

DENTAL OFFICE SPACE FOR LEASE OR SALE

Upto 1850 Sq.ft Space Available in Scarborough. 24 hrs. Accessibility. Close to TTC & HWY

CONDO FOR SALE
HWY 401 & KENNEDY
• 1 + Den, Excellent Facilities
• 3 Years Old Condo
• Moving Anytime
• Asking $259,900

CONVENIENCE &GROCERY FOR SALE IN SCARBOROUGH



Unbelievable Price
• One of the best location in Scarborough
• Convenient Location • TTC at the steps
• Movie / CD / DVD Rental / Sale (Exclusive)
• 10 years Business in the same location.
• Lotta (649) • Tickets
• Key Cuts • Very Busy Plaza
For more Information: 416.315.9397

CONDO FOR SALE
• 1 + Den, 1 Parking
• Close to Scarborough Town Center
• Only 3 years old
• Investors Choice or Owners to live
• Asking Only $259,900

Coin laundry For Sale
Kennedy & Eglinton
A Highly populated. Surrended by apartment area. One Year new business. High quality washer & dryer. Money changing machine. Soap dispensor. Possible to have alteration person & laundry outlet. Very reasonable rent. Longe term lease possible.

# அரசியல் வலையில் சிக்கித் தவிக்கும் மீனவர் பிரச்சினை!

## தாயக மடல்

இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வு போன்றே இழுபட்டுச் செல்கின்றது இலங்கை-இந்திய மீனவர்கள் தொடர்பிலான பிரச்சினையும். இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிகள் இருந்தும், அதற்கான சரியானதொரு பொறி முறையை ஏற்படுத்தாமல், அரசியல் ஆதாயத்திற்காக இப்பிரச்சினை நீடிக்க விடப்பட்டுள்ளது என்றுதான் கூற வேண்டும். தமிழக மீனவர்கள் தங்கள் கடல் எல்லையைத் தாண்டி வட பகுதி கடலில் மீன் பிடிப்பது அன்றாடம் இடம்பெறும் நடவடிக்கையாகவுள்ளது. இவ்வாறு அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள, சட்ட விரோதமான முறைகளைப் பயன்படுத்தி மீன்களைப் பிடித்துச் செல்வதாக வட பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு வரும் மீனவர்கள் தங்கள் வலைகளையும் மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்தி விட்டுச் செல்வதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இவ்வாறு, எல்லை மீறி இலங்கை கடற் பகுதிக்குள் நுழையும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற போது அதன் எதிரொலி யாக தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நிகழ்த்தப்படுகின்றன. அதன் பின்னணியில் அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. இவ்வாறு செயல்படுகின்ற கட்சிகள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதர வாக குரல்கொடுக்கும் கட்சிகள் என்பதும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். இக்கட்சிகள் தமிழக மீனவர்களின் எல்லை மீறலால் இலங்கை தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத் தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தமிழக மீனவர்களுக்கு விழிப்புணர்வூட்டி, அவர்களை ஏன் தடுக்க முடியாது என்கிற கேள்வி இங்கு எழுகிறது. இலங்கையின் வட பகுதி என்பது பெருமளவு கடலால் சூழப்பட்ட பிரதேச மாகும். அதனால் வடக்கு மக்களின் பிரதான தொழில்களில் முக்கியமானதாக கடற்றொழி லும் திகழ்கின்றது. இந்த மீனவ மக்கள் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தங்கள் தொழிலில் எதிர்கொண்ட இன்னல்கள் சொல்லில் அடங்காதவை.

கடலில் மீன்பிடிக்க பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை மட்டுமல்லாது, இலங்கை கடற்படையினரால் பல மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள் ளன. அத்துடன், எவருமே எதிர்பாராத விதமாக நிகழ்ந்த சுனாமி அனர்த்தத்தினால் மீனவ குடும்பங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஈடுசெய்ய முடியாதவை. போர் முடிவுற்று ஐந்து வருடங்களாகின்ற போதும் அவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு இன்னமும் நிரந்தரமான தீர்வுகள் காணப்படவில்லை. யாழ். வலிகாமம் வடக்கில் சுமார் 8000 மீனவக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். அவர்களின் சொந்த நிலங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள்



- வன்னியிலிருந்து ஆதித்தன் -

முடக்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்களின் சொந்த நிலங்களில் குடியேறுவதற்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றனர். யுத்தத்தின் போது தங்கள் தொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு இன்னமும் போதுமான அளவில் அவை அரசினாலோ, அரசசார்பற்ற நிறுவனங்களாலோ வழங்கப்பட வில்லை. போரின் பின்னர் மிகவும் கடினப்பட்டு தங்கள் தொழில்களை மீளவும் மேற்கொண்டுள்ள இம்மீனவர்களுக்கு இப்போதுள்ள பாரிய பிரச்சினையாக இருப்பது இந்தியாவிலிருந்து சட்டவிரோத மாக நுழையும் இழுவைப் படகுகளின் தாக்கம்தான். யாழ்ப்பாணத்தின் வடமராட்சி மாதகல், காரைநகர், மன்னாரின் தலை மன்னார், பேசாலை, வங்காலைப்பாடு, பள்ளி முனை, மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பல பிரதேசங்களில் இந்திய மீனவர்களின் தாக்கம் மோசமானதாகவுள்ள தாக மீனவர்கள் சார்ந்த அமைப்புக்களின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

2000 - 2500 அளவிலான இந்திய இழுவைப் படகுகள் வாரத்திலே மூன்று நாட்கள் (திங்கள், புதன், சனி) வட கடலை ஆக்கிரமித்து இரட்டை மடிகளை அதாவது, அகன்ற மடிகளைக் கொண்ட வலைகள் பயன்படுத்துகின்றன. அடித்தளம் முதல் மேற்பரப்பு வரையுள்ள மீன்களை வாரி அள்ளக் கூடியதாக அவை காணப்படுவதால் பெறுமதி மிக்க கடல் வளங்கலான இறால், கடலட்டை, நண்டு, சங்கு போன்றவை முழுமையாக அழிக்கப்படுகின்ற அதே சமயம், அவை இந்திய இழுவைப்படகுகளால் அள்ளிச் செல்லப்படுகின்றன எனவும், இதனால் வட கடலில் பல மில்லியன் ரூபா பெறுமதி மிக்க கடல் வளங்கள் அழிவுறும் அபாயம் நிலவுகின்றதாவும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் அறிக்கை ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன், வடபுலத்து மீனவர்களின் பெறுமதி மிக்க பல ஆயிரம் மீன்பிடி உபகரணங்கள் மற்றும், வலைகள் சேதத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது என்றும், இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி வருகின்ற நாட்களில் வடக்கு மீனவர்கள் கடலுக்கு செல்வது கிடையாது என்றும், இலங்கை இந்திய கடல் எல்லைக்கோடு வெறுமனே தேசப்படத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவ்வறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வடக்கி லுள்ள மீனவ அமைப்புகள் இப்பிரச்சினை-களை அரசாங்கத்திடம் எத்தனையோ முறை கூறியும் முடிவேதும் இல்லை. தற்போது வட மாகாணசபையிடம் பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

முன்னர், இது குறித்து ஜனாதிபதி, அமைச்சர்கள் உட்பட பலருக்கு கடிதங்கள், மகஜர்களை அனுப்பியும் பயனில்லை என்ற கட்டத்தில் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங் கள், அமைதி ஊர்வலம், பாதயாத்திரை போன்றவையும் மேற்கொள்ளப்பட்டன. பல பேச்சுவார்த்தைகள் முன்னரும் இடம் பெற்றுள்ளபோதும், கடந்த 27-01-2014 அன்று இரு நாட்டு மீனவர்களுக்கிடையில் சென்னை யில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. கலந்துரையாடலின் இரண்டாம் கட்டம் 13-03-2014 அன்று கொழும்பில் நடைபெறவுள்ள தாக அறிவிக்கப்பட்டு, இம்மடலை எழுதிக் கொண்டிருந்த 12-03-2014 அன்று மாலை வெளியான செய்தியில் இப்பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இப் பேச்சுவார்த்தைக்கு முன்பதாக இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 177 தமிழக மீனவர்களும், அவர்களின் படகு களும் இலங்கை அரசினால் விடுவிக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை தமிழ் நாட்டு முதலமைச்சரால் விடுக்கப்பட்டது. இந்த 177 தமிழக மீனவர்களும் முதற்கட்ட பேச்சு வார்த்தைக்குப் பிறகு இலங்கை கடற்பரப்பில் எல்லை மீறி, கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும். (திடீரென, 166 தமிழக மீனவர்களை அவர்களின் படகுகளுடன் விடுதலை செய்வதாக நீதிமன்றத் தீர்ப்பு 12-03-2104 அன்று வெளியானது) பல பேச்சுக்கள் நடை-பெற்று, உடன்பாடுகள் எட்டப்படுகின்ற போதும் இந்திய மீனவர்களின் எல்லை மீறல்கள் தொடர்ந்து கொண்டுதானிருக்கின் றன. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கான பேச்சுக்கள் நடைபெற்று அவர்கள் விடுவிக்கப்படும் தருணத்திலேயே மேலும் தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் இடம்பெறுவதும், அவர்கள் கைது செய்யப்படுவதுமான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலை தொடருமானால், ஒரு கட்டத்தில் வட பகுதி மீனவர்களும், தமிழக மீனவர்களும் மோது கின்ற நிலை கூட எற்படலாம். இதனால், வடக்கு தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்கமான உறவு பாதிக்கப்படும். அவ்வாறு பாதிக்கப்பட்டால் அதில் இலாபம் அடைவது இலங்கை அரசதரப்பும் அதன் தீவிரவாத சக்திகளுமேயாகும். தமிழகத்தி லும், மத்தியிலும் கூட இலங்கையில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது ஒரு அரசி யல் விடயமாகவே பேசப்படுகின்றது. இந்திய மக்களவைத் தேர்தல் நடைபெறவிருக்கின்ற நிலையில் இதனை வெளிப்படையாகவே காணமுடிகின்றது. தேர்தல் வாக்குறுதிகளிலும் மீனவர் பிரச்சினை முன்வைக்கப்பட்டுள்ளது. உண்மையில் தமிழகத் தரப்பினர் நினைத்தால் இந்த மீனவர் பிரச்சினைக்கு ஒரு தீர்வை கொண்டு வரலாம். போரினால் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொண்ட பாதிப்புகள் பற்றியும், தொடர்ந்தும் தங்கள் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப அவர்கள் படும் இன்னல்கள் குறித்தும் உணர்வு புர்வமாக எடுத்துரைக்கப்பட்டு அவர்கள் எல்லை மீறுவதை தடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் தமிழக அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் தீவிரமான நடவடிக்கை எடுத்தால் மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண முடியும். இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவோ, இருதரப்பு மீனவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் மாறி மாறி சந்திப்புக்களை நடத்தி நாட்களை வீணடித்துக் கொண்டிப்பதற்கோ தேவை ஏற்படாது.

AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# உக்கிரெயின் உக்கிரம் தணியுமா?

உக்கிரெயின் முன்னாள் சோவியத் குடியரசின் ஒரு பிரதேச நாடாகும். சோவியத் சாம்ராஜ்யத்தில் இணைக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாகும். இது கேந்திர முக்கியத்துவமிக்க பிரதேசமாகும். இதன் ஒரு தீபகற்பம் கிரிமியா. இது கருங்கடல் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இது ஒரு தனி மாநில குடியரசாகவிருந்தது. இதனை 1954ல் அப்போதைய சோவியத் ஜனாதிபதி குருசேவ், கிரிமியாவை உக்கிரெயினுடன் இணைத்தார். இதனைத் தொடர்ந்து ரஷ்ய படைகள் கிரிமியாவில் நிலை கொண்டன. குருசேவ் ஒரு உக்கிரேனியர். சோவியத் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியின் பின்னர் உக்கிரெயின் தனி நாடாகினது. இதன் பின்னர் தொடர்ச்சியாக உக்கிரெயினை ஆண்டவர்கள் உக்கிரெயின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடவில்லை. Yulia Tymoshenko உக்கிரெயினை ஆண்டபொழுது தனது சொத்துக்களை வளர்த்துக்கொண்டார். இவரை வாயு இராணி (GAS QUEEN) என அழைப்பார்கள். இவர் செய்த ஊழலுக்காக தற்சமயம் சிறையனுபவித்து வருகின்றார். இவரின் பின்னர் ஆட்சியமைத்த யுக்கினோவிச் பல மாற்றங்களைச் செய்தார். அவரும் அவரது உறவினர்கள் தங்களது சொத்துக்களை வளர்த்துக் கொண்டனர். ருஷிய சார்பு அதிபரான இவர் உக்கிரெயின் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய ஒப்பந்தமிடப்படும் இறுதி நேரத்தில் பின்வாங்கிக் கொண்டார். இதன் பின்னணியில் உக்கிரெயின் தொழிலதிபர்கள் பிரதான காரணியாகவுள்ளனர். இவர்களது பெரும்பாலான வர்த்தகம் ருஷியாவினுடாகவுள்ளது. இதில் மாற்றம் ஏற்படுவதை இவர்கள் விரும்பவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது யுக்கினோவிச்சியின் செல்வ குவிப்பை தடைசெய்யும். யுக்கினோவிச் சிறுவர் சிறையில் பல வருடங்களை செலவிட்டவர்.



யுக்கினோவிச்சின் சொந்த பிரதேசம் கிரிமியா. இங்கு 58 வீதமான ருஷியர்கள் வாழ்கின்றனர். 12 வீதம் டாட்டர்கள் வாழ்கின்றனர். இவர்கள் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களது பூர்வீகம் துருக்கியாகும். இவர்கள் அடிமை வியாபாரம் போன்ற பல வியாபாரங்களை செய்து வந்தனர். இரண்டாம் உலகப் போரின் போது கீரிமியாவை ஜேர்மனி கைப்பற்றியது. டாட்டர்கள் ஜேர்மனியர்களுக்கு ஆதரவளித்தார்கள் என்ற காரணத்தினால் இவர்களை ஸ்ராலின் இப்பிரதேசத்திலிருந்து அந்நியப்படுத்தினார். 2012ல் உக்கிரெயினில் ருஷிய மொழி பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் ருஷிய மொழி உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டது. யுக்கினோவிச் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் ஒப்பந்தத்தை முறித்தபடியினால் இவரை ஆட்சியில் இருந்து அகற்றும் பணியை போலந்து, ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகள் செய்தன. விளைவு போராட்டங்கள் எனத் தொடர யுக்கினோவிச் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். புதிய ஆட்சியாளார்கள் ருஷிய உத்தியோகபூர்வ மொழியாக்கத்தை அமல் படுத்த மறுத்துவிட்டனர். இதற்கெதிராக கிரிமிய மக்கள் பேராட்டங்களில் ஈடுபட்டனர். இக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் பொழுது கிரிமியாவில் சர்வசன வாக்கெடுப்பு நடந்து முடிந்திருக்கும். இச்சர்வசன வாக்கெடுப்பு இப்பிரதேசம் ருஷியாவுடன் இணைவதா இல்லையா? என்பதற்காகும். இதற்கிடையில் ருஷிய படைகள் ருஷிய மொழி பேசும் மக்களை பாதுகாக்கும் நோக்குடன் கிரிமியாவினுள் நுழைந்தனர்.

ருஷியாவை பொறுத்தவரை கருங்கடல் பிரதேசத்துக்குள் அந்நிய தலையீடுகளை தடுக்கவேண்டும். அது மட்டுமல்ல ருஷியா உலக வல்லரசு என்ற நிலையில் இருந்து சோவியத் வீழ்ச்சியின் பின்னர் வீழ்ந்து விட்டது. எனவே தற்சமயம் பிராந்திய வல்லரசு என்ற நிலையை நிலைநாட்டவேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது. கிரிமியாவினுள் நுழைந்தவுடன் ருஷிய பங்குச் சந்தையின் வீழ்ச்சியே ருஷியாவை தண்டித்துவிட்டது. ஆனாலும் ருஷியா உக்கிரெயினில் தனது உரிமையை நிலைநாட்ட முயற்சிக்கின்றது. ருஷியாவிற்கு எதிராக அமெரிக்காவில் கொண்டுவரப்படும் அனைத்து தடைகளும் அமெரிக்காவிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும். அமெரிக்காவில் உள்ள ருஷியர்களின் சொத்துக்களை முடக்குவது அமெரிக்காவின் முதலாவது திட்டம். இதனால் ருஷியாவில் உள்ள அமெரிக்கர்களின் சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படும். G8 நாடுகள் ருஷியாவை தனிமைப்படுத்தும். ருஷியாவின் எரிவாயு விநியோகத்தை அமெரிக்கா தடைசெய்யும். இதனால் ஐரோப்பிய நாடுகள் விலை உயர்வான மாற்றீட்டுக்கு செல்ல வேண்டி வரும். ருஷியாவிற்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஒரு உலக யுத்த அபாயத்தை ஏற்படுத்தும். சிரியாவின் மீதே அமெரிக்கா இராணுவ நடிவடிக்கை எடுக்க தயங்கி வருகின்றது. ஆப்கானை விட்டு இரவோடிரவாக ஓடி வந்து விட்டது. எனவே அதுவும் சாத்தியமற்றுள்ளது. ஐ.நாவின் தோற்றத்தின் பின்னர் சுமார் 70 நாடுகளை அமெரிக்கா ஆக்கிரமித்துள்ளது. இடது சாரிகள் அரசு எங்கிருந்தாலும் அதனை களைப்பதற்கு முயற்சிக்கும். இவ்வாரம் எல்சல்வடோரில் இடது சாரிக்கட்சித் தலைவர் வெற்றி பெற்றுள்ளார். அடுத்த அரசியல் மாற்றம் எல்சல்வடோராக இருக்கும்.

தென் சூடான் போன்ற அமெரிக்க சார்பு நாடுகள் சர்வசன வாக்கெடுப்பின் பின்னர் தனியனாக மாறலாம் என்றால் கிரிமியாவும் தனது பிரிவை தானே தீர்மானிக்கலாம். இலங்கைத் தமிழர்களும் ஒரு விடயத்தை இதில் இருந்து விளங்கிக் கொள்ளவேண்டும். பிராந்திய வல்லரசாக விளங்கும் இந்தியா தன்னைச் சுற்றியுள்ள நாடுகளில் தனது உரிமையை நிலை நாட்டவே முயல்கின்றது. நேபாளாம், மாலைதீவுகள், பங்காளதேஸ், திபெத், பர்மா போன்ற பிரதேசங்களில் ஏற்படும் பெரும் அரசியல் மாற்றங்கள் இந்தியாவின் அனுமதியின்றி ஏற்படுவதை இந்தியா விரும்புவதில்லை. அண்மையில் ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளை நீதிமன்றம் விடுதலை செய்த போதும் அரசு இதற்கு மறுத்தது. தனது பிரதேசத்தில் தனது நாட்டுத் தலைவரை வேற்று நாட்டினவர் கொலை செய்வதை நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதனை இந்தியா உறுதியாகச் சொல்கின்றது. இயக்கங்களை வளர்த்து விட்ட இந்தியா அவை தன்னை நோக்கி திரும்பியபோது அழிக்கவும் தயங்கவில்லை. இதே நிலைப்பாட்டைத் தான் இன்று ருஷியாவும் எடுத்துள்ளது. எனவே நாம் இவ்வாறான உலக அரசியல் மாற்றங்களை உன்னிப்பாக கவனித்து எங்கள் காய்களை நகர்த்த வேண்டும். இல்லையேல் மீண்டும் ஏமாற்றப்படுவோம்.


**NEW REVOLUTION MANAGEMENT COMPANY**

*Residential Properties Only All Around GTA*

***TO THE LANDLORDS***

If you want some one to manage your residential property we will manage for you.

***BENEFITS WE ARE OFFERING TO MANAGE YOUR PROPERTY***

You don't need to wait for the rent. We are the one paying you the rent even Tenants pays you or no on time.

We are responsible for the damages to fix and inspection to keep your property clean and well maintained.

***TO THE TENANTS***

You don't have to makes so many calls to find a place. Give us a call or mail to us with your requirements we will find you a suitable house for you and your family to live.

*> Do you have bad credit no problem*
*> You don't have permanent employment no problem*
*> More than 10 years in a management field with no issues*
*> We work for the land lords and the tanants.*

*Our goal to make both of you happy*
*Try with us to rent your property you will see the results*

*Contact: 647.835.6495*

*newrevolution01@hotmail.com*



**Tax related services Income Tax & HST**

Unfiled returns from 2005
Filing Under Volantary Disclosure Program (VDP)
Tax Appeals
SR & ED Investment Tax Credits
Individual and Corporate Taxation

Company Incorporations
Business Registration
Business Plans
Emergency Business Loans - upto $ 5 M

GIC =GIA
GIC - The Bank Provides
GIA - Is available with the Insurance Company (agent comes to your house)
The interest rate for the GIA is higher than the GIC and they are both guarenteed
THE INCOME TAX CALCULATION FOR SENIORS IS BETTER FOR THE GIA

Phone: Siva (416) 901-0929 Yoga 416-492-7957
www.sivassolutions.ca

Email: siva@sivassolutions.ca
Sivas Solutions
706-419 Markham Rd Toronto M1J 3E1

# ‘வாழ்வின் வசந்தத்தினை நுகரும் தமிழர் வலுவளர் அமைப்பு’

## கனடிய தகவல் தொடர் 215

### *OCTD - ORGANIZATION OF CANADIAN TAMIL DISABILITIES*

கனடா வாழ் தமிழர்களின் பல்வேறு வகையான தொகுதி, பிரிவு கூட்டங்கள், குழுக்களினால் உருவாக்கப்பட்டு, நல்ல பல பணிகள் புரிந்து, சில இடங்களில் உருவமேயில்லாது மறைந்த சங்கங்கள், அமைப்புகள் என்று எண்ண தொடங்கினால் அவை ஒன்று இரண்டல்ல. நூற்றுக்கணக்கானவை என்பது யாவரும் அறிந்த விடயம்.

ஆனால் நான் இங்கு குறிப்பிடப்போகும் கூட்டுச்சேர்ந்த ஒரு கனடா வாழ் தமிழரின் அமைப்பு என்பது, அவர்கள் நடத்தும் தங்களின் இனிமையான கொண்டாட்டங்களுக்கு என்னை அன்போடு அழைப்பதும் எதனை என் வாழ்வில் நான் தவற விட்டாலும், அவர்களின் நிகழ்வுகளுக்கு, கொண்டாட்டங்களுக்கு நான் தவறாது செல்வேன். அங்கு நான் ஒரு சிறு தொண்டனாக அவர்களுடன் அவர்களாக, அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து நிற்கும் போதெல்லாம் மனிதனுக்குள் பாதி மறைந்து நிற்கும் மிருக குணங்களை எல்லாம் உதறித் தள்ளி விட்டு ஆழமான அமைதி நிலைமைக்கு போக வேண்டும் போன்ற உணர்வுகள் என்னுள் ஓடிக்கொண்டிருக்கும். அந்த நிறுவனமே கனடா வாழ் தமிழர்களிடையே அறிமுகமான கனடா தமிழர் வலிவளர் அமைப்பு ஆகும்.

**‘கனடா தமிழர் வலுவளர் அமைப்பு’**

1997 ஆம் ஆண்டு முதன் முதலில் தங்கள் வாழ்வின் ஒரு பகுதி வலுவினை பறிகொடுத்த கனடாவாழ் தமிழர்கள் கூட்டாக சேர்ந்து உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு.

டிசம்பர் 10, 2002 ஆம் ஆண்டு ‘Organization of CanadianTamil Disabilities - OCTD’ என்னும் பெயரில் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

ஏதோ ஒரு வழியில் தங்களின் ஒரு பகுதி வலுவினை இழந்தவர்கள் இன்னொரு பக்கம் மிக வலிமையானவர்கள்.

- தங்கள் விழிகளினால் உலகினை பார்க்க முடியாதவர்கள் ஒரு பகுதி!
- செவிகளினால் இனிமையான குரல்களை கேட்க முடியாதவர்கள் ஒரு பகுதி!
- கை, கால்கள் இயங்க முடியாது சக்கர நாற்காலி உதவியுடன் வருபவர்கள் ஒரு பகுதி!

இவர்களின் நிலைமைக்கு அப்பால் ‘மதியிறுக்கம்’ (Autism) என குறிப்பிடப்படும் மனோவளர்ச்சியில் வலுவினை இழந்த சில இளைய தலைமுறையினர்.

இவர்கள் யாவரினையும் கூட்டுச்சேர்த்த ஒரு அமைப்பு இந்த தமிழர் சங்கம். இவர்களோடு பாசத்துடன் ஒன்றிப்போயுள்ள சில உதவும் தொண்டர் கூட்டங்கள்.

**தமிழில் குறிப்பிட வேண்டுமானால் அவர்கள் ஒரு ‘மாற்றுத் திறனாளிகள்’**

உண்மை தான். அவர்களுக்குள் ஒரு மாற்றுத்திறமை, வலிமை மறைந்துள்ளது. அந்தத் திறமைகளை, வலிமைகளை வெளிக்கொணர அவர்கள் வருடம் தோறும் கூட்டாக சேர்ந்து கொண்டாடி மகிழும்:

- கிறிஸ்மஸ், கலை நிகழ்வுகள்
- விளையாட்டுத் திறமைகளை வெளிகொணர்ந்து இனிமை காணும் கோடைகால ஒன்று கூடல்கள்
- மாற்றுத் திறனாளிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நடைபவனி, விழிப்புணர்வு விழாக்கள்.
- தனிநபர் கலைத்திறமைகளை அரங்கேற்றும் கலை விழாக்கள் இப்படியே தொடர்கின்றன.

தாயக மண்ணில் துள்ளித் திரியும் பள்ளிக்கூட வாழ்வில் ஒன்றாக ஒரே சயிக்கிளில் என்னுடன் பயணித்த என் இனிய நண்பன் முருகபக்தன் திரு. வேல்றதனின் கவர்சிகரமான குரலில் வெளிகொணரும் அற்புதமான அறிவிப்புகள், விழாக்களை நெறிப்படுத்தும் ஆழுமைத்திறமைகளின் ஆகும்.

தன் வாழ்வில் தெய்வாதீனமாக வலுவலிமையின் ஒரு பகுதியினை தளரவிட்டிருந்தாலும் குரல் வளத்தில் என்றுமே தளரா கம்பீரம் திரு. வேல்றதனிடமிருந்து அந்த மண்டபத்தினை அதிரவைக்கும். “மனித வலுவின் வலிமையின் ஒரு பகுதியினை எங்கள் வாழ்வில் தளரவிட்டிருந்தாலும் தன்னலமில்லா உணர்வுகள், மனிதாபிமானங்கள், உதவும் தொண்டர்கள் யாவரினையும் கூட்டுச்சேர்த்து கனடா வாழ்வில் நம் மாற்றுத்திறனாளிகளுக்கு பல வழிகளிலும் இவ் அமைப்பினூடாக ஒருவருக்கு ஒருவர் தொலைபேசியிலாவது தொடர்பு கொண்டு உதவுகின்றோம். அவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்த்து உரமேற்றி விடுகின்றோம்” என்கிறார் நிறுவனத்தின் தலைவர் திருமதி. நளினி கோடீஸ்வரன்.

மேலும் அமைப்பின் செயல்பாடுகள் பற்றிய கேள்வி எழுந்தபோது அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தங்களின் பயிற்சிப் பாசறைகள் எவை?
எப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன? என்பன பற்றி மேலும் குறிப்பிடுகின்றார்.

### வலுவளர் அமைப்பின் பாசறை பயிற்சி நெறிகள்

உடல் ரீதியாக, உள ரீதியாக துயரங்கள் கலந்த சவால்களை எதிர்கொள்ளும் கனடா தமிழர்களுக்கு அந்த நிலைமையிலிருந்து மீண்டு அவர்களும் இந்த சமூகத்தில் வலுவோடு வாழ வேண்டும் என்னும் குறிக்கோளில் கனடா - தமிழர் வலுவளர் அமைப்பினர் ‘பாசறை பயிற்சி நெறி திட்டங்களை’ உருவாக்கி அதனை அண்மையிலிருந்து படிப்படியாக நடத்தி வருகின்றனர்.

இப் பாசறை பயிற்சி திட்டங்கள் மூன்று பிரிவுகளாக வலுவளர் அமைப்பின் செயல் திட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.

### முதலாவது பிரிவு

**1. மொழித் திறனை வளர்த்தல்**
(Language skills)

கனடாவில் வாழ்தற்கு தேவையான ஆங்கில மொழி திறமையினை வளர்க்கும் நோக்கில் ஆங்கில மொழி வகுப்புகள். இதேபோல் தாய் மொழியினை பேச முடியாமல் சவால்களை எதிர்கொள்பவர்களுக்கு தமிழ் மொழி வகுப்புகள்.

**2. சுய வளர்ச்சி அபிவிருத்திகள்**
(Personal Development)

வெளித்தோற்றங்களில் வலு இழந்தவர்கள் போன்று தென்படும் சகலரிலும் ஏதோ ஒரு ஆக்க சக்தி ஒன்று அவர்களுக்குள் முடங்கியிருக்கும். ஏதோ ஒரு இலட்சிய தாகம் அவர்களுக்கிடையே விழிப்படையாது உறங்கி கொண்டிருக்கும் வெளியே ஒரு தேடலை நோக்கிய அவர்களின் உந்து சக்திக்கு ஏராளமான தடைக்கற்கள் என்றும் தடைப்பண்ணிக் கொண்டிருக்கும் உணர்வு ஒன்று தென்படும். சில நேரங்களில் வெளியேயுள்ள மக்களை வழிப்படுத்தும் ஒரு கண்டு பிடிக்கப்படாத ஒரு ஆற்றல் வெளியே வந்து ஏனையோரையும் வழி நடத்தும். இவை யாவற்றினையும் இனம்கண்டு விருத்தி செய்ய வழி காட்டும் சுய வளர்ச்சி அபிவிருத்திகள்.

**3. சமூகவியல் திறமைகள்**
(Social Skills)

உடல் உள வலு என்ற விடயத்தில் ஒரு பகுதியில் இயங்க முடியாது சவால்களை எதிர்கொள்பவர்களுக்கு இன்னொரு பக்கத்தில் அவர்களினால்

- ஏனையோருடன் பேச முடியாதிருக்கும்.
- ஏனையோருடன் எதுவிதமான தொடர்புகள், உறவுகளை வைத்துக் கொள்ள முடியாதிருக்கும்.
- ஏனையோர் சொல்வதினை கேட்க முடியாதிருக்கும்.
- உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ள, மகிழ்ச்சியினை அனுபவிக்க முடியாதிருக்கும்.

இத்தகைய குறைபாடுகளுக்கு எல்லாம் படிப்படியாக கூட்டுப் பயிற்சிகள் மூலம் மாற்றம் கொண்டு வரும்போது அங்கு ஒரு ஆற்றல், திறமை என்பது வளர்த்து எடுக்கப்படுகின்றன.

**4. மெதுமையான திறமைகள்**
(Soft skills)

வலுவளர் சற்று குன்றிய நிலைமையில் வாழ்ந்து, வளர்ந்து வருபவர்களிடையே பாரிய கடுமையான திறமைகளை வளர்த்து எடுப்பது சிரமமாக சில நேரங்களில் இருக்கும். அவர்களிடம் இலகுவாக தட்டி எழுப்பப்படும் மெதுவான திறமைகளை வளர்ப்பதால் அவர்களை வாழ்வில் சுயமாக பல இடங்களில் இயங்கப் பண்ணலாம்.

உதாரணமாக ஏனையோருடன் பேசுதல், ஏனையோரின் உரைகளை கேட்டல் ஒரு கூட்டமைப்புக்குள்ளிலிருந்து கூட்டாக இயங்குதல், பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்தல் போன்ற பல்வேறு வகையான திறமைகளுக்கு இங்கு சிறு சிறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மெதுவான திறமைகளினூடாக சிறு சிறு கைத்தொழில்களை பயிற்றுவித்து



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# காலத்தோடு வளரும் கணினிகள் - 41

அன்பான வாசகர்களே!

கடந்த சில இதழ்களில் மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் (Microsoft Publisher) என்ற மென் பொருளைப் பயன்படுத்துவதற்குத் தேவை யான செயன்முறைக் குறிப்புக்களைப் பற்றி எமது கவனத்தைச் செலுத்தியிருந்தோம். கணினியை நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கு நாங்கள் கலந்துரை யாடிய மைக்கிரோ சொவ்ற் ஒபீஸ் இனில் காணப்படும் எல்லா மென்பொருட்கள் பற்றிய செயன்முறை அறிவு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தால் மைக்கிரோ சொவ்ற் வேட், மைக்கிரோ சொவ்ற் எக்சல், மைக்கிரோ சொவ்ற் அக்சஸ், மைக்கிரோ சொவ்ற் பவர் பொயின்ற், மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் போன்ற மென்பொருட்கள் பற்றிய விபரங்களையும், செயன்முறைக்குத் தேவையான குறிப்புக்களுடன் ஆராய்ந்து கொண்டோம். வாசகர்களாகிய நீங்கள் இந்தத் தொடர்கட்டுரையை வாசிப்பதோடு மட்டும் நின்று விடாது செயன்முறையிலும் பயிற்சி செய்திருந்தால் கணினியை நாளாந்த தேவைகளுக்குப் பயன்படுத்துவதில் போதிய அறிவைப் பெற்றிருப்பீர்கள். இவ்வாறாக இந்தத் தொடர்கட்டுரை மூலம் பயன் பெற்றுக் கொண்டவர்கள் எனக்குத் தெரியப் படுத்தியிருப்பதன் மூலம் இந்தத் தொடர்கட்டுரை பலருக்கும் பயனுள்ளதாக இருந்துள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

கணினியை நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துபவர்கள் கவனிக்க வேண்டிய சில விடயங்களைப் பற்றி இன்று உரையாடிக் கொள்ளலாம் என நினைக்கின்றேன். இங்கே குறிப்பிடப்படும் சில விடயங்கள் பற்றி ஆங்காங்கே



ஏற்கனவே இந்தத் தொடர்கட்டுரையில் குறிப்பிட்டிருப்பேன். ஏற்கனவே குறிக்கப் பட்டுள்ள விடயங்களை மீளவும் நினைவு படுத்துவதற்காகத் திரும்பவும் குறிப்பிடு கின்றேன். கணினியைப் பயன்படுத்துபவர் களில் பெரும்பாலானவர்கள் இணையப் பாவனைக்காகவே கணினியைப் பயன்படுத்து கின்றார்கள். இதற்கு கணினியில் இணையத் தொடர்பு இருப்பதோடு இணைய உலாவிகள் (Internet Browsers) என்ற மென் பொருட்களும் கணினியில் இருக்க வேண்டும்.

இதற்கு மிகவும் பிரபல்யம் வாய்ந்த மென்பொருளாக இன்ரநெற் எக்ஸ்புளோரர் (Internet Explorer) உள்ளது. இந்த மென்பொருள் தவிர்ந்த Google Chrome, Firefox, Netscape போன்ற பல மென் பொருட்கள் உள்ளன. கணினி பற்றிய ஆரம்ப அறிவோடு மிகவும் இலகுவாக இணையத் தளங்களுக்குச் சென்று புதினங்களை வாசிக்கவும், பாடல்களைக் கேட்கவும், காட்சிகளைப் பார்க்கவும் இணையத்தளத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இணையத் தளங்கள் தொடர்பாகத் தெரிந்து கொள்ள வேண்டிய பல விடயங்களையும் இந்தத் தொடர் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். வங்கிக் கணக்குகளை இணையம் மூலமாகப் பார்த்தல், பொருட்களை வாங்குதல் போன்ற பல தேவைகளை இணையம் மூலமாகச் செய்கின்றோம்.

அடுத்ததாக மின் அஞ்சல் தொடர்பிற்காக நாளாந்தம் கணினியைப் பயன்படுத்து கின்றோம். மின் அஞ்சல் தொடர்பிற்கு வேண்டிய பல்வேறு குறிப்புக்களை இந்தத் தொடர்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். மின் அஞ்சல் மூலமாகக் கணினிக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய வைரஸ்கள் பரப்பப்படும் வழக்கம் காணப்படுவதால் நமக்கு முன் பின் தெரியாதவர்களிடம் இருந்து வருகின்ற மின் அஞ்சல்களைக் கவனமாகக் கையாள வேண்டும்.

ஒவ்வொரு தடவையும் இணையத் தொடர்பை ஏற்படுத்தும் பொழுது பல தகவல்களும், கோவைகளும் கணினியில் சேமிக்கப் படுவதால் இடைக்கிடை அவசியமற்ற தகவல்களை கணினியில் இருந்து நீக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு நீக்கிக் கொள்ளாவிடில் கணினியின் வேகம் குறைவடைதற்கான சாத்தியம் உள்ளது. உதாரணமாக இன்ரநெட் எக்ஸ்புளோரர் மென்பொருளில் உள்ள Internet options என்ற தெரிவிற்குச் சென்று தேவையற்ற கோவைகளை அழித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்யும் பொழுது கணினியில் சேமிக்கப்படும் கடவுட் சொற்களும் அழிக்கப்படுவதால் கணினிக்குப் பாதுகாப்பை யும் அளிக்கின்றது. எந்தெந்த இணையத்தளங்களுக்குச் சென்றோம் என்ற தகவலும் அழிக்கப்படலாம்.

கணினி மூலம் வங்கிக் கணக்கைப் பார்வையிட முன்பும், பின்பும் மேலே குறிப்பிட்டவாறு தேவையற்ற விடயங்களை அழித்துக் கொள்ளுதல் பாதுகாப்பான செயற்பாடாக இருக்கும். எப்போதும் ஒரு எதிர்வைரஸ் மென்பொருள் (Anti Virus Software) கணினியில் இருப்பது அவசியமானது. மிகவும் பிரபல்யம் வாய்ந்த எதிர்வைரஸ் மென்பொருள் ஆக நோட்டன் அன்ரிவைரஸ் (Norton Antivirus) என்ற மென்பொருள் விளங்குகிறது. இந்த மென்பொருளை ஆண்டிற்கு ஒரு முறை வாங்கி கணினியில் பதிவேற்றி வைக்க வேண்டியுள்ளது. பொது இடங்களில் உள்ள கணினிகளின் மூலம் வங்கிக் கணக்குகளைப் பார்வையிடும் பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இதனை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது.

மின்னஞ்சல் தொடர்பு என்பது மிகவும் அத்தியாவசியமான விடயமாக உள்ளது. கணினியில் மட்டுமன்றி தொலைபேசிகளிலும் மின்னஞ்சல் வசதிகள் தாராளமாக வந்து விட்டன. தொலைபேசியில் உள்ள பல்வேறு வசதிகளைப் பயன்படுத்துவதற்கும் கணினி பற்றிய அறிவு மிகவும் உதவியாக இருக்கும். இணையத்தளங்களைப் பார்வையிடவும், மின்னஞ்சல் தொடர்பிற்காகவும் மட்டுமே கணினியைப் பயன்படுத்துபவர்களும் நிறையவே இருக்கிறார்கள். மைக்கிரோ சொவ்ற் வேட் எனப்படும் சொற்பரிமாற்ற மென்பொருளை நாளாந்தம் பயன்படுத்துபவர் களுக்கு வசதியாக பல்வேறு விடயங்களை இந்த மென்பொருளிலேயே செய்து விடக்கூடியதாக மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருள் நிறைந்த வசதிகளோடு காணப்படுகிறது. இவற்றைப் பற்றியெல்லாம் இந்தத் தொடர்கட்டுரையில் நிறையவே உரையாடி இருக்கின்றோம். தொழில் ரீதியாக கணினியைப் பயன்படுத்துபவர்களுக்கு மைக்கிரோ சொவ்ற் எக்சல், மைக்கிரோ சொவ்ற் பவர்பொயின்ற், மைக்கிரோ சொவ்ற் அக்சஸ் போன்ற மென்பொருட்கள் பற்றிய அறிவு மிகவும் முக்கியமானது. மைக்கிரோ சொவ்ற் பப்ளிசர் மென்பொருள் எல்லா விதமான பப்ளிசிங் வேலைகளுக்கும் பயன்படும் இலகுவான மென்பொருள் என்ற காரணத்தால் இந்த மென்பொருள் பற்றியும் இந்தத் தொடர்கட்டுரையில் உரையாடிக் கொண்டோம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.

தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com



TBC Toronto Business College



SECOND CAREER

WHO IS ELEGIBLE?

- RECEIVING EI
- LAID OFF AFTER 2005
- RECEIVED MATERNITY / PARENTAL DURING LAST FIVE YEARS
- WORKING LESS THAN 20 HOURS PER WEEK

Those qualify will receive free funding upto $28000 to cover the following

- Living Expense
- Daycare
- Tuition Fees
- Books
- Transportation

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll (35 weeks)

Business Administration (26 Weeks)

Computerized Accounting (26 weeks)

Medical Office Adminstrator (32 weeks)

Personal Support Worker (26 weeks)

TAKE ONE COURSE AND GET ANOTHER ONE FOR FREE
WORD,EXCEL,POWER POINT,ACCESS
QUICKBOOKS LEVEL 1 & 2
SIMPLY ACCOUNTING LEVEL 1 & 2
ACCPAC G/L, A/P & A/R

Career Colleges Ontario

416 - 291 - 5155

4465 Sheppard Ave. East # 208
( Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005


# ‘ஒவ்வொரு...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்கள் மேற்கொண்டதை போன்ற ஆயுர் நிகழ்ச்சிகளும் ரெஜீவினேஷன் சென்டரில் உள்ளது.

இந்த புத்துணர்வு நிகழ்ச்சிகளை பற்றி மா சமபுத்தி பேசுகையில் ‘இங்கு எல்லா விதமான ஆயுர்வேத மசாஜுகளும் வழங்கப் படுகின்றன. பங்கேற்பாளர்கள் தங்கள் சௌகரியத்தை பொறுத்து ஆயுர் ரசாயனாவின் வெவ்வேறு நிகழ்ச்சிகளை தேர்தெடுக்க முடியும். அடிப்படையாக பார்த்தால் எல்லா ஆயுர் நிகழ்ச்சிகளும் ஒரே நோக்கத்திற்கா உருவாக்கப்பட்டவை தான். அவர்கள் இங்கு செலவிடும் நாட்களை பொறுத்து ஆயுர் ரசாயனாவின் வெவ்வேறு நிகழ்ச்சிகளை தேர்தெடுக்க முடியும். அடிப்படையாக பார்த்தால் எல்லா ஆயுர் நிகழ்ச்சிகள் ஒரே நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவை தான். அவர்கள் இங்கு செலவிடும் நாட்களை பொறுத்து அவர்களுக்கு செய்யப்படும் மசாஜுகளும் அதிகரிக்கும். நம்முடன் அதிக நாட்கள் அவர்கள் செலவு செய்கையில் அவர்களுடைய உடல் புத்துணர்வு இன்னும் சற்று அதிகமாக தூண்டப்படும். நம்முடைய நோக்கமே அவர்களுக்கு எது சிறந்ததோ அதை வழங்குவது தான். அதோடு மட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சியின் பகுதியாக, அருகில் உள்ள பசுமை நிறைந்த மலை-வாழ் கிராமங்களுக்கு நடைபயணமாக சென்று வருவதும், இயற்கையுடன் சற்று நேரம் செலவழிப்பதும் ஒருவரை மேலும் புத்துணர்வடையச் செய்யும்’ என்கிறார்.

ஆயுர் ரசாயனா 2½ நாட்களும், ஆயுர் ரசாயனா இன்டென்சிவ் 5 நாட்களும், ஆயுர் சம்பூர்ணா 7 நாட்களும், ஆயுர் சஞ்ஜீவினி வகுப்பு 9 நாட்களும் நடைபெறுகின்றன. இந்த வகுப்புகள் அனைத்திலுமே ஒருவருடைய அடிப்படை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக சில சித்த மருந்துகளும், ஆயுர்வேத மற்றும் ஸ்விடிஷ் மசாஜ்களும் அடக்கம். ஆயுர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு ஈஷா யோகா வகுப்புகள் செய்திருக்க வேண்டிய அவசிய மில்லை. 7 வயதிற்கு மேற்பட்ட எவரும் இந் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

சுநேத்ரா என்றொரு கண் சிகிச்சை நிகழ்ச்சியும் இம்மையத்தில் வழங்கப்படுகிறது. ‘சு’ என்றால் நல்ல, ‘நேத்ரம்’ என்றால் கண்கள் என்று பொருள். பொதுவாக கண் நோய்களில் 95% ஆன நோய்கள் இங்கு கையாளப்படுகிறது. இங்கு கற்றுத்தரப்படும் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வந்ததன் மூலம் கண் கண்ணாடியை கழற்றியவர்கள் ஏராளம்.

‘யோகா மார்கா’ வகுப்பு குழந்தைகளுக்காக பிரத்யேகமாகவும் நடத்தப்படுகிறது. குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில் பெரியவர்களுக்கான சிகிச்சைகளோடு, இயற்கை பகுதியில் தினசிர நடைபயணமும், உற்சாக விளையாட்டுகளும், பொழுது போக்கு அம்சங்களும் உள்ளடங்கும். இவ்வகுப்பு செய்வதற்கு ஈஷா யோகா செய்திருக்க வேண்டும். 7 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

சிகிச்சை முறைகளில் சித்த மருத்துவம் பெரும்பான்மையாக இருப்பதற்கு சத்குரு அவர்கள் தரும் விளக்கம், ‘சித்த மருத்துவம் ஆயுர்வேதத்தை காட்டிலும் சில ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்தது. இது மிகமிக பழமையான மருத்துவமுறையாகும். இம்மருத்துவ முறையில் குறிப்பிட்ட சூழலில் வளர்க்கப்பட்ட மூலிகைகளை மட்டும் பயன்படுத்துகின்றனர். இதில் பலவாரியான மருந்துகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இவை ஒருவருடைய உடல் அமைப்பின் மூலத்தையே தொடவல்லவை. பொதுவாக மருத்துவமுறைகள் நோயை மட்டுமே அணுகும். ஆனால் சித்த மருத்துவ முறையில் ஒருவரின் உடல் அமைப்பின் அடிப்படையையே தொட இயலும். ஏனென்றால் சற்றே பார்க்கையில் நோய் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டதே. பொதுவாக மருத்துவத்தில் மருத்துவர் உங்களுக்காக எல்லாம் செய்துவிடுவார். ஆனால் யோகாவில் நீங்கள் தான் எல்லாம் செய்ய வேண்டும். இப்படி இருக்கையில் பழமை வாய்ந்த யோகாவும் சித்தாவும் இணையும் போது ஆச்சரியப்படத்தக்க வகையில் பலனளிக்கின்றன. நம் அனுபவத்தில் மருத்துவ ரீதியாக கைவிடப்பட்டவர்களுக்கும் இந்த காம்பினேஷன் அதி அற்புதமாக வேலை செய்திருக்கிறது’ என்கிறார்.

ரெஜீவினேஷன் வகுப்புகளை தவிர பொதுவாக ஆசிரமத்திற்கு வருவோரும் இம்மையத்தில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். வாக் - இன் மசாஜ் எனப்படும் வசதியையும் இங்கு வருவோர் பயன்படுத்திக் கொள்ளலாம். தங்கள் விருப்பப்படியோ அல்லது இங்கு தரப்படும் அறிவுறுத்தலின் படியோ ஒருவர் தெரிபிகளை செய்துகொள்ள முடியும். தங்கள் வருகையை முன்பதிவு செய்து கொள்வது மிக அவசியம்.

இங்கு வகுப்புகளில் கற்றுக்கொண்டதை தொடர்ச்சியாக செய்து வருவதன் மூலமும் வாழ்க்கை முறையை ஒரு சீராய் மாற்றி அமைத்துக் கொள்வதன் மூலமும் ஒருவருக்கு ஆரோக்கியம் என்பது எட்டா கனியாய் அல்லாமல் தினசரி வாழ்க்கையில் நிதர்சனம் ஆகும்.

வாருங்கள் இளைப்பாறுங்கள், உயிர்ப்படையுங்கள், புத்துணர்வு பெறுங்கள்.

## மாதாந்த இலக்கிய கலந்துரையாடல்

### தமிழ் இலக்கிய அறிமுகம்

உரை: கலாநிதி நா.சுப்பிரமணியன்
ஐயந்தெளிதல் அரங்கு

நாள்: 29-03-2014 நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: மெய்யகம், 3A, 5637, Finch Avenue East
Scarborough ON, M1B 5k9
தொடர்புகளுக்கு: அகில் - 416.822.6316

# ஐ.நா...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அழுத்தத்திற்கும் உள்ளாகி செயற்பட வில்லை என்றும் மனித உரிமைகளுக்காக முன்னிற்பதே தமது நாட்டின் தலையாய கடமை என்றும் அர்வின் பூலெல் கூறினார். "இலங்கை மீதான தீர்மானம் ஒட்டுமொத்த இலங்கைப் பிரஜைகளுக்கும் பொதுவான-உலக மக்களுக்கே பொதுவான மனித உரிமை விழுமியங்களுக்காக கொண்டு வரப்பட்டுள்ளதால்" அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கை தொடர்பான விசாரணைக்கான பொறுப்பை ஐ.நா.விடம் ஒப்படைத்தல்

இலங்கை தொடர்பான விசாரணைக்கான பொறுப்பை ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர் ஆணையர் நவநீதம்பிள்ளையிடம் ஒப்படைக்கும்போது, எந்தவிதமான பொறிமுறையை உருவாக்க முடியும் என்பது தொடர்பில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற அதிகாரபூர்வமற்ற விவாதங்களில் ஆராயப்பட்டுள்ளது. உறுப்பு நாடுகளுக்கிடையில் நடந்த அதிகார பூர்வமற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சி யாக இந்த விவாதங்கள் நடந்துள்ளன. இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ள பாகிஸ்தான், சீனா, கியூபா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இலங்கை மீது விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையருக்கு அதிகாரங்கள் இல்லை என்றும் அதற்காக ஆணையத்திடம் நிதிவளம் இல்லை என்றும் வாதிட்டுள்ளன.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்துகின்ற நிலையில், அந்தவிதமான ஏற்பாடுகள் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் வாதிட்டுள்ளன.

# நடுவானில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கடல் பகுதியில், அந்த விமானம் கடைசி யாக பறந்ததாக மலேசிய ராணுவம் தெரிவ-ித்தது. இதையடுத்து அப்பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தியும், எதுவும் கண்டறியப்படவில்லை. இதனை மலேசிய இராணுவம் பின்னர் மறுத்தது.

இந்நிலையில் வியட்நாமின் தெற்கு முனை மற்றும் மலேசியாவின் கிழக்கு பகுதிக்கு இடையில், கடந்த 09ம் திகதி காலையில் செயற்கைக்கோள் எடுத்த படங்களில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் 3 பொருட்கள் மிதப்பது தெரியவந்துள்ளது. அது காணாமல் போன விமானத்தின் பாகங்களாக இருக்கும் என கருதப்படுகிறது. ஆயினும் இதுகுறித்து மலேசியா அரசு எந்த ஒரு அதிகாரப்பூர்வ தகவலும் அளிக்கவில்லை.

# கால அவகாசம் ஆதாரங்களை அழித்துவிடும்

இலங்கைக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டுவிட்டது, மேலும் அவகாசம் கொடுப்பது போர்க்குற்ற ஆதாரங்களை அழித்துவிடுவதற்கு வழிவகுக்கும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான அம்னெஸ்டி இண்டர்நாஷனல் அங்கு சுட்டிக்காட்டியுள்ளது. அமெரிக்கா கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கின்ற மற்றும் அந்தத் தீர்மானத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் என்று கோருகின்ற நாடுகளின் கருத்துக்களே சபையில் மேலோங்கி இருந்ததாக இலங்கையிலிருந்து ஜெனீவா பேச்சுக்களுக்காக சென்றுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பிபிசி யிடம் கூறினர். இலங்கை மீதான தீர்மானம் மேலும் வலுவடையக் கூடிய சாத்தியத்தையே வெளிப்பட்டக் கருத்துக்கள் உணர்த்தியதாக மன்னாரிலிருந்து ஜெனீவா வுக்கு வந்திருந்த அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் பிபிசியிடம் தெரிவித்தார். எனினும் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்திய சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை புதிய தீர்மானத்தில் வெளிப்படையாக இடம்பெறக் கூடிய வாய்ப்பு இல்லை என்றும் அருட்தந்தை ஜெயபாலன் கூறினார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை முன்வரைவு, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி விட்டதாக இலங்கையில் அதிகாரப் பரவலாக் கலை வலியுறுத்திவரும் சிறுபான்மை சமூகங்களின் தலைவர்கள் கூறியுள்ளனர்.


## வீட்டில் மேலும் சுதந்திரமாக வாழலாம்.

**ஆரோக்கிய வீடாக மேம்படுத்துவதற்கான வரிச்சலுகை (Healthy Homes Renovation Tax Credit) இதற்குஉதவும்.**

65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட முதியவர்களும் அவர்களுடன் வாழும் குடும்ப அங்கத்தினரும் தமது வீட்டை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் இலகுவாக உபயோகிப்பதற்குமான திருத்தவேலைகள் செய்து $1,500 வரையிலான பணத்தை வரிச்சலுகையாகப் பெறலாம். இது அவர்களுடைய வருமானத்தில் தங்கியிருக்கவில்லை. இவ்வரிச்சலுகையை பின்வரும் திருத்த வேலைகள் செய்வதன் மூலம் பெறலாம். பாதுகாப்பிற்கு பிடிக்க உதவும் கைத்தடி (support bars), படிகள் அற்றபாதை (ramps) அல்லது கதவு திறந்து நடந்து உள்ளே போக இடம்கொடுக்கும் குளியல் தொட்டிகள் (walk-in bathtubs). உங்கள் வரிச்சலுகையைப் பெற இவ்வாறான திருத்தங்களுக்கு செலவழித்த பற்றுச்சீட்டை வைத்திருந்து உங்கள் வருமானவரிப் பத்திரங்கள் பூர்த்திசெய்யவும்.



ontario.ca/healthyhomes • 1-866-668-8297 • TTY 1-800-263-7776

ஒன்ராரியோ அரசினால் இதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# இருமல் ஒரு நோயல்ல

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### இருமல் என்றால் என்ன?

நமது உணவுப் பாதையில் ஏதேனும் ஒரு வேண்டாத பொருள் சென்றுவிட்டால் நமது உடல் அதனை வாந்தியாக வெளியே தள்ளுகிறது. மூச்சுக்குழாயில் ஏதேனும் தூசி அல்லது கழிவுப் பொருட்கள் இருந்தால் அவற்றை நமது உடலானது தும்மலாக வெளியேற்றுகிறது. நமது நுரையீரலில் (Lungs) தேங்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முயற்சியே இருமல் (Cough) எனப்படுகிறது.



### இருமல் எவ்வாறு உருவாகின்றது?

நுரையீரலில் தேங்கும் கழிவுப் பொருட்களால் தான் இருமல் உருவாக்கப்படுகிறது. இந்தக் கழிவுப் பொருட்களானது கீழ்க்கண்ட காரணங்களினால் தேங்குகிறது.

1. புகைபிடித்தல்
2. அதிகமான குளிர்பானங்களை அருந்துதல்
3. நுரையீரலின் உள்ளே வாயுப் பொருட்கள் நிரம்புதல்
4. பால் பொருட்களை அதிகம் உண்ணுதல்
5. மலச்சிக்கல் மற்றும் அஜீரணக் கோளாறுகள்
6. மாசு நிறைந்த காற்றினை அதிக நேரம் சுவாசிப்பதுடன் காற்றோட்டம் குறைந்த அறையில் அதிக நேரம் தூங்குதல்.

### இருமல் ஒரு எதிர்ப்பு சக்தி

ஒருவருக்கு இருமல் ஏற்படுகிறது என்றால் அவரது உடலிலுள்ள வேண்டாத பொருட்களை உடல் வெளியேற்ற முயற்சிக்கிறது என்று கருத வேண்டும். சிலருக்கு சளி இருந்தாலும் அது வெளியேற்றப்படாமல் நுரையீரலில் தேங்கி இருக்கும். இந்நிலையில் பழச்சாறுகள் சுத்தமான தண்ணீர் முதலியவற்றை அருந்தும்போது எதிர்ப்புசக்தி கிடைப்பதால் சளியை வெளியேற்றும் முயற்சியாக இருமல் ஏற்படுகிறது. எனவே இருமல் ஏற்பட்டால் அதனை நேரடியாக நிறுத்த முயற்சிக்காமல் இருமல் தோன்றுவதற்கான மூல காரணத்தை ஆராய்ந்து குணப்படுத்த வேண்டும்.

### இருமலும் ஆங்கில மருந்துகளும்

இருமலைக் குணப்படுத்த ஏராளமான மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. இப்போது பெரும்பாலானோர் மருத்துவர்களின் சிபார்சு இல்லாமலேயே இருமல் மருந்துகளை உட்கொள்கின்றனர். இது தவறான அணுகுமுறையாகும். நுரையீரலில் உள்ள சளியை இருமல் வெளியேற்ற முயற்சிக்கின்றது. உடனே அதை நிறுத்த முயற்சி செய்தால் சளி உள்ளேயே தங்கிவிடும். சில மருந்துகள் நுரையீரலிலுள்ள சளியை உஷ்ணமடையச் செய்து திடப்பொருளாக மாற்றி விடுகிறது. இதனால் இருமல் நின்றுவிட்டது போன்று தோன்றினாலும் சில காலம் கழித்து மீண்டும் இருமல் உருவாகும். அப்போது இருமலில் இரத்தம் வெளிப்படும். இருமலை வலுக்கட்டாயமாக இரசாயன மருந்துகளால் குணப்படுத்த முயற்சி செய்தால் ஆஸ்துமா, மூச்சுத்திணறல் தோன்றவும் வாய்ப்புண்டு.



### வரட்டு இருமல் ஏன் ஏற்படுகிறது

தொண்டையில் ஒருவித குத்தல் ஏற்பட்டு அதன் மூலம் உருவாகும் இருமலுக்கு 'வறட்டு இருமல்' என்று பெயர். உடலில் ஏற்படும் நீர் பற்றாக்குறை தொண்டையில் வறட்சி போன்றவற்றால் வறட்டு இருமல் ஏற்படுகிறது.

### வறட்டு இருமலை குணப்படுத்த

1. சுத்தமான தண்ணீரை அரைமணி நேரத்திற்கு ஒருமுறை சிறிது சிறிதாக அருந்த வேண்டும்.
2. சுத்தமான பசு நெய் அல்லது நல்லெண்ணெய் இதில் ஏதேனும் ஒன்றை சிறிதளவு வாயில் ஊற்றி கொப்பளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் தொண்டைப் பகுதியில் ஏற்படும் குத்தல் நின்று விடும்.



### இயற்கை மருத்துவமும் இருமலும்

பழங்களை உண்ணுதல், காய்ச்சாத சுத்தமான நீரை பருகுதல் - தூய குளிர்ந்த தண்ணீரில் குளித்தல் போன்றவற்றால் நமது உடல் புதிய சக்தியைப் பெறுகிறது. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகிறது. அதன்பின் உடல் கழிவுகளை வெளியேற்றத் தொடங்குகிறது. நுரையீரலில் கழிவுகள் சளியாகவும் இருமலாகவும் வெளிவருகிறது. எனவே இருமல் ஒரு நோயல்ல. அது நோய்க்குக் காரணமான பொருளை வெளியேற்றும் ஒரு நிகழ்ச்சி. இதனை புரிந்து கொண்டால் இருமலை எளிதில் குணப்படுத்தலாம்.

### இருமலுக்கு சில எளிய மருத்துவம்

1. பேரீச்சம்பழத்தைப் பாலில் வேக வைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டால் இருமல் குணமாகும்.
2. மிளகு, வெல்லம் இரண்டையும் சேர்த்து அரைத்து வெறும் வயிற்றில் சிறு நெல்லிக் காய் அளவு இரண்டு உருண்டைகள் சாப்பிட்டால் இருமல் குணமாகும்.
3. சுத்தமான பசும் பாலை காய்ச்சி சிறிது மஞ்சள் தூள் கலந்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று நாட்கள் குடித்து வந்தால் இருமல் குணமாகும்.
4. தோடம்பழச்சாற்றுடன் சுத்தமான தேன் கலந்து வெறும் வயிற்றில் குடித்துவர இருமல் குணமாகும்.
5. மிளகுதூள், தேன் இரண்டையும் கலந்து இரவு உறங்குமுன் சாப்பிட்டால் இருமல் நின்றுவிடும்.
6. இனிப்பான ஆப்பிள் பழங்களை தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் வரட்டு இருமல் குணமாகும்.
7. பசு நெய்யினை வாயில் ஊற்றி கொப்பளித்து வந்தால் வரட்டு இருமல் குணமாகும்.

### இருமலைத் தவிர்க்க யோகா

நுரையீரல் (Lungs) முதலான சுவாச உறுப்புகளை எப்போதும் சுத்தமாக வைத்திருந்தால் இருமல் வராது. அடிக்கடி இருமலால் பாதிக்கபபடுபவர்கள் அதற்குரிய முக்கியமான யோகாசனங்களை தினமும் 15 நிமிட நேரமாவது செய்துவர வேண்டும்

1. மச்சாசனம் - Fish
2. ஒட்டக ஆசனம் - camal
3. புஜங்காசனம் - Cobra
4. பிராணாயாமம் - Breathing

கபாலபாதி, பஸ்திரிகா

இவற்றைப் பழகிவரும்போது மூச்சுக் குழாய்கள், சுவாசப்பைகள் சுத்திகரிக்கப்படுவதுடன் அதிகமான பிராணவாயு உடலுக்குக் கிடைப்பதுடன் அதனுள் தேங்கியிருக்கும் கரியமிலவாயு வெளித்தள்ளப்படுகிறது. இதனால் இருமலை உருவாக்கும் காரணிகள் உடலைவிட்டு நீங்குகிறது.




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



AMBIHA SILK (Fancy Jewellery)



FINCH & MIDDLEFIELD

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அழையுங்கள்: 416.297.5261



# அமெரிக்க...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

மேலோங்கி இருந்ததாக இலங்கை யிலிருந்து ஜெனீவா பேச்சுக்களுக்காக சென்றுள்ள மனித உரிமைச் செயற்பாட்டா ளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, இலங்கை யின் அரசியல் அமைப்பை மீறும் வகையிலேயே அமெரிக்க பிரேரணை அமைந்துள்ளதாக ஜெனீவாவிற்கான வளர்முக நாடுகளின் வளர்ச்சியை பாதிப்பதுடன் ஐக்கிய நாடுகளின் வரையறை களையும் தாண்டிச் சென்றுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில், அமெரிக்கத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளும், பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பும் குறித்த தீர்மானத்தை மேலும் வலுவுடைய தாகவும், இலங்கை மீதான சர்வதேச விசாரணையைக் கோருவதாகவும் அமைய நகர்வுகளை மேற்கொள்ளும். இலங்கை அரசும், இலங்கைக்கு ஆதரவாக இக்கூட்டத் தொடரில் கலந்துகொள்ளும் நாடுகளும்




இலங்கையின் வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க குற்றஞ்சாட்டுகின்றார். இந்த பிரேரணையானது இலங்கையின் அரசியல் அமைப்பை மீறுவதுடன் இலங்கை நாட்டின் - மக்களின் இறைமையையும் பாதிக்கிறது எனவும், அதேநேரம், இவ்வாறான பிரேரணை இத்தீர்மானத்தை மேலும் நீர்த்துப் போகக் கூடிய வழிவகைகளை மேற்கொள்ளும். எனவே, அமெரிக்கத் தீர்மானம் ஜெனீவா கூட்டத்தொடர் நிறைவடையும் கட்டத்தில் என்ன வடிவத்தைப் பெறப் போகின்ற தென்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# 'வாழ்வின்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

வழிகாட்டுதல் என்பவையும் இங்கு உள்ளடங்கும்.

## இரண்டாவது பிரிவு

- யோகாசன வகுப்புகள்
- உடல் பயிற்சி திட்டங்கள்
- ஆழ் நிலை தியானங்கள் & பிரார்த்தனைகள்
- தங்களின் தோல், உடல்களை பராமரித்தல் போன்ற பயிற்சி நெறிகள் என்பது இரண்டாவது பிரிவாக நடத்தப்படுகின்றது.

## மூன்றாவது பிரிவு

உடல், உள, வலுவிழந்த பிள்ளைகளுடன் வாழும் பெற்றோருக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஆகும். உதாரணமாக 'மதியிறுக்கம்" (Autism) என்ற குறைபாட்டு டன் வாழும் குழந்தைகளின் விடயத்தில் அவர்களை நெறிப்படுத்தும் பயிற்சி நெறிகளை பெற்றோருக்கு வழங்குதல்.

"கனடா தமிழர் வலுவளர் அமைப்பு" இக்கட்டுரை மூலம் "விளம்பரம்" பத்திரிகை ஊடாக வாசகர்களுக்கு ஒரேயொரு கோரிக்கையினை மட்டும் மக்களுக்கு விட விரும்புகின்றது.

இதுவரை காலமும் எங்கள் அமைப்பிலும், நிகழ்வுகளிலும் இணைந்து கொள்ளத் தவறிய மாற்றுத் திறனாளிகள் வேறு யாரும் இருந்தால் தங்களோடு இணைந்து கொள்ளுங்கள். பல வழிகளிலும் கை கொடுத்து உதவ இவ் அமைப்பு என்றும் தயாராக உள்ளது.

வலுவளர் அமைப்போடு பணி புரிய விரும்பும் தொண்டர்கள் புதுப்புது வழிகாட்டல்கள், செயல் திட்டங்களை அறிமுகப்படுத்தி கை கொடுக்க விரும்பும் நல்லெண்ணம் கொண்ட தொண்டர்கள் தங்களுடன் இணைந்து கை கொடுங்கள் என கோருகின்றனர்.

மனிதாபிமான உணர்வுகள், விசுவாசமான நேர்மையான கைகொடுப்புகள் நிறைந்தவர் களின் உள்ளங்களே என்றும் வாழ்வின் வசந்தங்களை நுகரும் என்ற தத்துவத்தினையே தமிழர் வலுவளர் அமைப்பு புலப்படுத்துகின்றது.

கனடா தமிழர் வலுவளர் அமைப்பின் மின் அஞ்சல் - valuvalar 2010hotmail.com / தொலைபேசி: 416.293.9499

புற்றுநோய்
பாரிசோதனை
பார்க்க முடியாததைப் பார்த்திடும்.

உங்களுக்கு வயது 50 அல்லது அதற்கு மேற்பட்டதென்றால், உங்களுக்கான மார்பக, கருப்பை வாய் அல்லது பெருங்குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய்க்கான பாரிசோதனைகளைச் செய்வதற்கு சரியான சமயம் எதுவெனத் தெரிந்துகொள்ள உங்கள் மருத்துவர் அல்லது உயர் பயிற்சிபெற்ற தாதியுடன் பேசுங்கள்.

மேலதிக தகவல் வேண்டுமா?

நாங்கள் தமிழ் பேசுவோம். டெலிஹெல்த் –ஐ அழையுங்கள் 1-866-797-0000 TTY : 1-866-797-0007

Screen *for* Life
Breast Cervical Colorectal

ஒன்டாரியோ அரசால் நிதி வழங்கப்பட்டது
Ontario

# MATH WORLD

Dear
Gr 12 Students.

Have you got your offer of admission
to university yet?
if not?,

Calculus **Mid-term** marks might
be an important factor on it.

Comming units in calculus will be
the most difficult, such as :
- optimization
- Trigonometric
- Application of Vectors. etc...

## Calculus & Vectors

We focus on

## 85% and above.

First class is **a free** trial
and an opportunity for parents
to get to know about us.

## Contact: 416.666.5515

# சார்பியல் - 42

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

நாற்பரிமாணமும் அதன் சிக்கலும்.

முப்பரிமாணவெளியில் நீளம், அகலம், உயரம் என்ற மூன்று நிலைகளுக்கு ஏற்றதான அச்சுக்களை நாம் எடுத்துக் கொள்ளலாம். எதனைக் கவனிக்க வேண்டுமெனில், இந்த மூன்று அச்சுக்களும் ஒன்றுக்கொன்று செங்குத்தாக இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கையில் எமது பேரண்ட வெளியில் மூன்று அச்சுக்களை மாத்திரமே எடுக்க முடியும். ஆனால் அயன்ஸ்ரைன் எமது புவியினை அறிந்து கொள்வதற்கு முப்பரிமாணங்கள் போதாது எனக் காட்டி, பேரண்டம் புள்ளிகளால் ஆனது என்பதற்குப் பதிலாக, நிகழ்ச்சிகளால் ஆனது, நிகழ்ச்சிகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளது எனக் காட்டியுள்ளார். இந்த நிகழ்ச்சியில் நாங்கள் காலகாலமாக கொண்டிருந்த முப்பரிமாணங்களுடன் நேரம் என்ற இன்னொன்றும் இணைந்துள்ளது எனக் காட்டினார். அதாவது நிகழ்ச்சியை அடையாளம் காண்பதற்கு நீளம், அகலம், உயரம் என்பவற்றுடன் நாலாவதாக நேரமும் தெரிய வேண்டும் எனக் கூறினார். இவ்வழியில், நேரத்தினையும் ஒரு பரிமாணமாகக் காட்டியுள்ளார்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இனி, நேர அச்சும், நீள, அகல, உயர அச்சுகளுக்குச் செங்குத்தாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் நேரத்தின் நேரடிச் செல்வாக்கு மற்ற மூன்று அச்சுக்களிலும் இருக்காது. இங்கேதான் அந்தச் சிக்கல் தோன்றுகிறது. நேரத்தின் அச்சை எப்படி எடுப்பது? எங்கே காண்பது? சிக்கலாக உள்ளதல்லவா? இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு நேரத்தின் அச்சினைக் கற்பனை அச்சாகக் கொண்டார்கள். அதாவது பேரண்டவெளியின் புள்ளிகளில் நேரம் இணைந்திருந்தாலும், அதனைக் காணமுடியாது என்பதனால், கற்பனையான அச்சு ஒன்றில் நேரத்தினை வைத்துக் கொண்டார்கள். எங்களது நாளாந்த அனுபவத்தில் இந்தக் கற்பனை அச்சினை நாங்கள் கருத்தில் கொள்வதில்லை. அதற்கு ஒரு பெறுமானம் கூடக் கொடுப்பதில்லை. ஆனால் கணித உலகில் கற்பனை அச்சானது வலிமையான ஒன்றாகக் காணப்படுகின்றது. அத்துடன் எங்களது வாழ்வில் தோன்றும் பல மாயக் காட்சிகளுக்கு விளக்கம் அளிப்பதற்கும் கற்பனை அச்சினைச் சரியான முறையில் கணித வியலாளர்கள் பாவிக்கின்றார்கள். கற்பனை அச்சின் நியமமாக $\sqrt{-1}$ பாவித்து தமது குழப்பங்களை எல்லாம் தீர்க்கின்றார்கள்.

சரி, நாற்பரிமாணத்திற்கான அச்சுக்களைத் தெரிந்து கொண்டோம். இன்னமும் கொஞ்சம் உள்ளே போய்ப் பார்ப்போம். ஒரு தாளில் செவ்வகம் ஒன்றை வரைகின்றீர்கள் என்போம். இந்தச் செவ்வகத்திற்கு நீளம், அகலம் இருப்பதால் அது ஒரு இரு பரிமாண வடிவம் என்பதில் உங்களுக்கு ஐயமில்லை. இப்போது உங்கள் செவ்வகத்தினை தாளின் வழியாகப் பாருங்கள். அதாவது நீளத்தையோ அல்லது அகலத்தையோ தவிர்த்துப் பாருங்கள். உங்களது செவ்வகம் எப்படித் தோன்றும்? ஒரு நேர்கோடு போலல்லவா தோன்றும்!. அப்படியாயின் உங்களது படம் செவ்வகமா அல்லது நேர்கோடா என்று கேட்டால் என்ன பதிலைக் கூறமுடியும். பதிலானது அப்படத்தினை எப்பரிமாணத்தில் பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தது. எமது புவி ஒரு கோளம் என்பது எங்கள் எல்லோருக்குமே தெரிந்த ஒன்று. முப்பரிமாணவெளியில் அக்கோளம் உருண்டு கொண்டிருக்கின்றது. இக்கோளத்தின் மாதிரி வடிவம் ஒன்றினை உங்கள் தாளில் வரையுங்கள். அப்படம் எப்படியிருக்கும். ஒரு வட்டத்தட்டுப் போல இருக்குமல்லவா! ஆயின் எமது புவியினை வட்டத்தட்டு எனக் கூறமுடியுமா? இல்லையல்லவா. முப்பரிமாணக் கோளத்தினை இருபரிமாண வெளியில் (தாளில்) பார்க்கையில் ஒரு வட்டத்தட்டுப் போல இருக்கிறது என்ற உண்மையை நாம் அறிந்து கொள்கிறோம். இதுபோன்றதுதான் நாற்பரிமாண விடயங்களும். எமது புலன்களுக்குப் பழக்கமில்லாத நாற்பரிமாணத்தின் இயக்கங்களை, எமக்குத் தெரிந்த முப்பரிமாண வெளியிற் பார்க்கும் போது வித்தியாசமானவையாகத் தெரிகின்றது. இதுதான் எங்களின் நடைமுறைச் சிக்கல்.

நாற்பரிமாணவெளியில் இயல்பான இயக்கங்கள் எல்லாம் மிகக் குறுகிய பாதையின் வழியிலேயே நடக்கின்றன. நாற்பரிமாணவெளியில் கோள்கள் எல்லாம் கதிரவனைச் சுற்றியுள்ள நாற்பரிமாண வெளியின் வளைவில் குறும்பாதை வழியில் இயங்க, முப்பரிமாணவெளியில் எமக்கு அவை கதிரவனைச் சுற்றி நீள்வளையப் பாதையில் வருவது போலத் தெரிகிறது. நாற்பரிமாணவெளியின் வளைவானது எமக்குத் தெரிவதில்லை. எமது புலன்களின் வழியில் அதனை எங்களால் அறிய முடியாது. பாரமான திணிவுகள், நாற்பரிமாண நிகழ்ச்சியின் நேரத்தினை மாத்திரமே சிதைவுறச் செய்கின்றன. மற்றைய மூன்று பரிமாணங்களையும் (அதாவது நீளம், அகலம், உயரம்) அவை

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 24ஆம் பக்கம்




| TAX FREE MONEY | AGE | FEMALE Term 10 | FEMALE Term 20 | FEMALE Term 40 | MALE Term 10 | MALE Term 20 | MALE Term 40 |
|---|---|---|---|---|---|---|---|
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |

# MARCH SPECIAL

## March Special For Buyers

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

Also Free Moving

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



**Lourdson Antonipillai**
(Sales Representative)

**Dir: 416.738.8824**
**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS

*Independently Owned & Operated

# மொறோக்கோவில் தமிழ்த் திருமணம் - பகுதி 4

திருமணத்தன்று காலை லேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. நண்பகல் மழை திடீரென நின்று வெய்யில் எறிக்க ஆரம்பித்தது. யாவருக்கும் மகிழ்ச்சி. உடனே முன்னைய ஏற்பாட்டின்படி அங்கிருந்த வேலையாட்கள் விடுதியின் மைதானப் புல்வெளியில் தடிகளை நாட்டி ஒரு தற்காலிகப் பந்தலை அமைத்தனர். பூமாலைகளால் அதனை அலங்கரித்தனர். அதற்கு முன்னால் இருந்த மரங்களின் கொப்புகளில் படங்குச் சேலைகளை மேலே கட்டி ஒரு மண்டப அமைப்பில் ஒழுங்கு செய்தனர். அதன் கீழ் வரிசையாக நாற்காலிகளை ஒழுங்கு செய்தனர். ஒரு தற்காலிக மண்டபம் மரநிழலில் உருவாகிற்று. பிற்பகல் 4 மணிக்கு திருமணம் ஆரம்பமாகிற்று. மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் அமர்வதற்கு ஒரு அழகான சோபா வைக்கப்பட்டிருந்தது. அதற்கு முன் ஐயர், கும்பங்கள் முதலியன வைத்து வேண்டிய ஆயத்தங்களோடு தயாராக இருந்தனர். எமது சம்பிரதாய முறைப்படி ஆண்கள் வேட்டி சால்வையும் பெண்கள் சேலையும் அணியும்படி முன்னரே கேட்கப்பட்டிருந்தனர். வாழ்க்கையிலேயே வேட்டி சால்வை

**- துறையூரான் -**

அணியாத சில ஆண்களும், சேலை அணியாத சில பெண்களும் அன்று அவ்வவ் உடைகளை அணிந்து குதூகலமாகக் காணப்பட்டனர். அவர்கள் அவ்வுடைகள் பற்றியும் எமது பாரம்பரியக் கலாசாரம் பற்றியும் தாம் பெருமைப்படுவதாகப் பேசிக் கொண்டனர். தமிழர்களாகப் பிறந்த பலருக்கு இது ஒரு நல்ல படிப்பினையாக இருந்திருக்கும் என நினைக்கிறேன். ஆங்கில மோகத்தால் எமது பழக்க வழக்கங்களைக் கைவிட்ட தமிழர்கள் இதனைக் கவனத்தில் கொள்வார்கள் என நினைக்கிறேன். எமது வழக்கப்படி, மாப்பிள்ளை தோழனுடன், பாண்ட் வாத்திய இசை முழங்க விடுதியின் நுழை வாசலில் இருந்து அழைத்து வரப்பட்டார். விடுதியின் வாசலை அடைந்தவுடன் நிறைகுடம் வைக்கப்பட்டு இரு பெண்கள் மங்கல ஆராத்தியுடன் அவரை வரவழைத்தனர். அங்கிருந்து யாவரும் பந்தலுக்கு ஊர்வலமாகச் சென்றனர்.



அவ்விடுதியில் அன்று வேறு எவரும் இல்லாமல் திருமண வீட்டார் மட்டுமே இருந்தனர். நான் ஏற்கனவே கூறியவாறு மொத்தமாக 75 பேரளவில் அங்கு பிரசன்னமாயிருந்தனர். மாப்பிள்ளை சோபாவில் அமர்ந்திருக்க ஐயர் பூசைகளை ஆரம்பித்தார். சில நிமிடங்களின் பின் திருமணப்பெண் சிறப்பாக அலங்கரிக்கப் பட்டு, தோழியுடன் பிறபெண்கள் விளக்குகளை ஏந்தி முன்னால் இரு வரிசைகளில் பவனி வர மணப்பந்தலுக்கு நடந்து வந்தாள். விடுதிச் சொந்தக்காரரும் பணியாட்களும் ஆங்காங்கே நின்று ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். மொறொக்கோவில் வாழும் ஒரு பிரபல ஆங்கிலேயப் புகைப்படப் பிடிப்பாளரும், இன்னொருவர் வீடியோ எடுப்பதற்குமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தனர். இவர்களு டன் பார்வையாளரும் உறவினர்களும் படமெடுத்தனர். திருமணத்தை நடத்திக் கொண்டிருந்த ஐயர், லண்டனில் வசிப்பவர். பருத்தித்துறையைப் பிறப்படமாகக் கொண்டவர். பல திருமணங்களை லண்டனில் மட்டுமல்ல பிற ஐரோப்பிய நாடுகளிலும் நடத்தி வைத்த பெருமைக்கு உரியவர். மொறொக்கோவுக்கு அவர் முதன்முதலாக வந்திருந்தார். அவரது சகோதரர் ரொறொன்ரோவில் வாழ்கிறார். மணப்பெண்ணுக்கு காப்புக் கட்டிப் பூசைகள் நடந்த பின்னர் கூறையைப் பெற்றுக் கொண்டு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏறக்குறைய 20 நிமிடங்களில் மணப்பெண் கூறை அணிந்து கையில் மாலையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். திருமணச் சடங்குகள் நடைபெற்றபோது மடிக்கணினியிலிருந்து நாதஸ்வர ஓசை எழுப்பப்பட்டது. மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி அணிவித்தபோது மேள ஓசை வழக்கமான முறையில் வாசிக்கப்படு வது போன்று கணினியிலிருந்து ஒலிபரப்பப் பட்டது. கணினியின் உதவியால் காட்டிலும் சைவத்திருமணம் நடத்தப்பட லாம் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். மாப்பிள்ளை வீட்டார் யாவருக்கும் இத்திருமணம் ஒரு புதிய ஆச்சரியமான நிகழ்ச்சியாக அமைந்திருந் தது. தாலி கட்டு முடிந்து யாவரும் அறுகரிசி போடும் வைபவம் **தொடர்ச்சி 24ஆம் பக்கம்**



# BRAND NEW CONDO.
# IN
# SCARBOROUGH



**Only 5% Down***

* **Exclusive for Homelife GTA Realty Inc.**
* **Starting From $234,800**
* **Only limited period of time**

HOMELIFE HIGHER STANDARDS

**Homelife / GTA Realty Inc.** Brokerage*

**Tel: 416.321.6969**

**5215 Finch Ave, E, #203, Toronto ON**

*Independently Owned & Operated

# தமிழ் சினிமாவின் பக்கத்தை புரட்டிய பாலு மகேந்திரா

பாலு மகேந்திராவின் மறைவையொட்டி அவருக்கு அஞ்சலிக் கூட்டமொன்று விளம்பரம் பத்திரிகையும் சுயாதீன திரைப் படக் கழகத்தினராலும் இணைந்து மார்ச் 2ம் திகதி ஜி.ரி.ஏ உள்ளரங்க கடைத்தொகுதிச் சதுக்கத்தில் இடம் பெற்றது. நிகழ்ச்சியை திரு.ராம் சிவதாசன் நெறிப்படுத்தினார். இவர் தனது தலைமையுரையில் பாலு மகேந்திராவின் நினைவு கூற வேண்டியதன் அவசியத்தை தெரிவித்தார். இவரது படங்கள் தமிழுக்கு ஒரு புதிய திரைமொழியை உருவாக்கியதையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களையும் கூறினார். மண்டபத்தில் பெரும்பாலானோர் கூட்டம் முடியும்வரை இருக்க இருக்கை களின்றி நின்று கொண்டேயிருந்தனர். கூட்டத்தின் ஆரம்பத்தில் அப்போது மறைந்த கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் மறைந்த ஒளி ஓவியன் பாலு மகேந்திரா பற்றி பாலு மகேந்திராவுடன் தமிழகத்தில் பழகியவரும், சிங்கப்பூர் தொலைக்காட்சியில் பணியாற்றிவருமான 'கனடா' மூர்த்தி பேசும் போது, "பாலு மகேந்திரா ஈழத்தில் பிறந்தவர் என்று

## நிகழ்வுத்தொகுப்பு ரதன்

பெருமிதம் கொள்கிறோம். அவரைக் கொண்டாடுகிறோம்' தமிழகத்திற்கு இணையாக நாமும் அவரின் மறைவால் துயருறுகிறோம்' இத்தனைக்கும் அவர் இலங்கைத்தமிழர் சார்ந்த எந்தப் படைப்பையும் தந்தவர் இல்லை. ஆயினும் இத்தகையதொரு புகழ் அவருக்கு ஈழத்தமிழர் மத்தியில் எப்படி வந்தது? அதற்கான காரணம்தான் என்ன? எந்தவித வர்த்தக சமரசமும் செய்யாத "வீடு", "சந்தியாராகம்" போன்ற தமிழ்ப் படைப்புக்களைத் தந்தவர் என்பதாலா? "மூன்றாம்பிறை", "அழியாத கோலங்கள்" போல மனங்கவரும் ஜனரஞ்சகப் படங்களை இயக்கியவர் என்பதுவா? தமிழ் படவுலகின் படப்பிடிப்பு முறைமைகளில் ஒரு இயற்கைத் தன்மையை வெளிக்காட்டியவர் என்பதாலா? இலக்கிய ரசனையும், எழுத்தாற்றலும் கொண்டவர் என்பதாலா? பிறப்பால் இலங்கையராக இருந்தாலும் இந்தியாவின் சிறந்த படங்களைத் தெரிவுசெய்யும் அளவிற்கு இந்திய அரச அங்கீகாரம் கிட்டி இயங்கியவர் என்பதுவா? எனப் பல கேள்விகள் மனதில் எழுகின்றன.



"பாலு மகேந்திராவின் தமிழ் சினிமாப் படைப்புக்கள் மிக எளிமையானவை" "கதை படமாக்கப்படும் விதத்தில் ஒரு தெளிவான அமைதி இருக்கும்" குறிப்பாக "காதல் பாடல்கள் படமாக்கப்படும் விதம் அவரை சுலபமாக அடையாளம் காட்டி நிற்கும்" என்றெல்லாம் தமிழ் சினிமாவுக்கான அவரின் பங்கெடுப்பைக் காணமுடிகிறது. ஆனால் தமிழ் சினிமா வர்த்தகத்தில் அவர் ஒரு வெற்றிகர இயக்குனர் அல்ல. வர்த்தக நோக்குடன் அவர் சில படங்களை இயக்கியிருந்தாலும் அவை வெற்றிகரமான வர்த்தகப் படங்களாக அமைந்து வரவில்லை. மேலும் தமிழகத்தின் ஆத்மார்த்த மண்வாசனையுடன் எந்தப் படங்களையும் அவர் எடுக்கவில்லை. தன் சொந்த வாழ்க்கை அனுபவங்களின் பாதிப்புக் களையே படமாக்க ஆவல் கொண்டிருந்தவர் அவர். இன்னும் சொல்லப்போனால் பாலு மகேந்திரா படங்கள் பலவற்றின் கதைகள்கூட ஆங்கிலப் படங்களிலிருந்தே உருவப்பட்டன என்ற குற்றச்சாட்டும் அவர்மேல் சுமத்தப்பட முடியும். தனி வாழ்க்கையில் அவரது பெண்சினேகிதிகள் குறித்த வாதப்பிரதிவாதங்கள் கூட ஒரு சினிமாக்காரனாக அவருடைய புகழுக்கான மாற்றீடாகவே மாறிக் கொண்டது. இவையெல்லாம் தெரிந்திருந்தும் தமிழ் சினிமாவுக்கான அவரது பங்களிப்பை தமிழ்ப் படவுலகு ஏற்றம் மிகுந்ததாகவே கணிக்கிறது. இதன் ரகசியம்தான் அவரது வெற்றி. அதைப் புரிந்து கொள்வது தமிழ்ச் சினிமாவுலகில் கால்பதிக்க முனையும் ஈழத்தமிழ்ப்படைப்பாளிகளுக்கு ஒரு திறவு கோலாக இருக்கும்.' என்று குறிப்பிட்டார்.

இவரைத் தொடர்ந்து கற்சுறா, மாமூலன், அகிலன், காலம் செல்வம், பி. விக்கினேஸ்வரன், க.நவம், டேவிற்சன், வீடு திரைப்படத் தயாரிப்பாளர் நாராயணதாஸ் ஆகியோர் உரையாற்றினர். மாமூலன் தனதுரையில் இந்தியா பாலு மகேந்திராவை கொலை செய்து விட்டது எனத் தெரிவித்தார். இவர் மேலும் பேசுகையில் பாலு மகேந்திரா சோபாவைக் கொலை செய்துவிட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. அது இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை. இந்தியா அவரது கடவுச் சீட்டை பறிமுதல் செய்து அவரை நகரமுடியாமல் ஆயுள் தண்டனைக் கைதியாக சிறைப்படுத்திவிட்டது. அவரது படைப்பு எல்லைகள் கட்டுப்பாட்டுக்குள் இந்தியாவால் கொண்டுவரப்பட்டது. இந்தியா ஒரு கலைஞனுக்கு செய்த அப்பட்டமான கொலை இது. ரோமன் பொலஸ்கி போன்றோர் செய்த பாலியல் குற்றங்கள் கூட உலகால் மன்னிக்கப்பட்டு விட்டது. பாலு மகேந்திரா மாத்திரம் ஏன் விதிவிலக்காக உள்ளார்? பாலு மகேந்திரா தனது படைப்புக்களில் மரணம், காமம் ஆகியவற்றின் பரிமாணங் களை உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தினார். காமத்திற்கான அழகாக வெள்ளை நிறத்தை இந்திய சினிமாவும், தமிழ்ச் சினிமாவும் கொண்டிருந்த காலகட்டத்தில்,

தொடர்ச்சி 25ஆம் பக்கம்




# 2013ஆம் ஆண்டிற்கான ஒஸ்கார் விருது

வழமை போல் இம் முறையும் ஒஸ்கார் அரச-ியல் விருதைப் பெற்றுக் கொண்டது. ஒஸ்காரின் சிறந்த படமாக ரொரண்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்ட '12 வருட அடிமை' தேர்வு செய்யப்பட்டது. சிறந்த நடிகர், நடிகை போன்ற பல விருதுகளுக்கான தேர்வு பற்றிய சர்ச்சைகள் இன்னமும் தொடர்கின்றன.

விருதுகளை எவ்வாறு தேர்வு செய்கின்றனர் என ஒரு இணையத்தளம் நகைச்சுவையாக கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இதில் உண்மை இல்லாமல் இல்லை. அக்கட்டுரை யில் இருந்து சிறந்த நடிகர் தேர்வு பற்றிய குறிப்புக்களை மட்டும் இங்கு பிரசுரிக்கின்றோம்.

Best Actor: #2 (Sound): The guy in "12



Years a Slave" – I can never pronounce his name – was just phenomenal. And yet I was really taken with [Matthew] McConaughey, even though I have not really been a fan in the past. He was just ridiculously good – plus the weight loss and what he had to do was just unbelievable.

#5 (Writer): I do love that actor from "12 Years a Slave," whose name I can't pronounce; I couldn't really fault him at all. So it came down to a choice between him and Matthew McConaughey, whose role really captivated me – and who really impressed me in three different things this year.

#6 (Executive): Matthew McConaughey -- wow, what an incredible year. In addition to "Dallas Buyers Club," I was really won over by "True Detective."

Indiewire என்ற இணையத்தளத்தில் இக்கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

அமெரிக்க அதிபராக ஒரு கறுப்பினத்தவர் இருப்பது போல் இம்முறை ஒஸ்காரை நடத்தும் Academy of Motion Picture Arts and Sciences இன் தலைவராக கறுப்பினப் பெண்மணியான Isaacs Cheryl Boone உள்ளார். இருப்பினும் அமெரிக்க அதிபர் போல் பல விடயங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாதுள்ளது. ஏழு தலைமை முகாமைத்துவ அதிகாரிகளும் 17 முகாமைத்துவ அதிகாரிகளும் கொண்ட நிர்வாகக் குழுவில் ஒரேயொரு கறுப்பினத்த

| Category | Winner | Movie |
|---|---|---|
| Best picture | | 12 Years a Slave |
| Director | AlfonsoCuarón | Gravity |
| Lead actor | Matthew McConaughey | Dallas Buyers Club |
| Lead actress | Cate Blanchett | Blue Jasmine |
| Supportingactor | JaredLeto | DallasBuyers Club |
| Supportingactress | Lupita Nyong'o | 12 Years a Slave |
| Animated feature film | | Frozen |
| Cinematography | Emmanuel Lubezki | Gravity |
| Costume design | Catherine Martin | The Great Gatsby |
| Documentary feature | | 20 Feet From Stardom |
| Documentary short subject | | The Lady in Number 6: Music Saved My Life |
| Film editing | Alfonso Cuarón and Mark Sanger | Gravity |
| Foreign language film | | The Great Beauty (Italy) |
| Makeup and hairstyling | Adruitha Lee and Robin Mathews | Dallas Buyers Club |
| Original score | Steven Price | Gravity |
| Original song | Let It Go | Frozen |
| Production design | Catherine Martin; Set Decoration: Beverley Dunn | The Great Gatsby |
| Animated short film | | Mr. Hublot |
| Live action short film | | Helium |
| Sound editing | Glenn Freemantle | Gravity |
| Sound mixing | Skip Lievsay, Niv Adiri, Christopher Benstead and Chris Munro | Gravity |
| Visual effects | Tim Webber, Chris Lawrence,Dave Shirk and Neil Corbould | Gravity |
| Adapted screenplay | John Ridley | 12 Years a Slave |
| Original screenplay | Spike Jonze | Her |




## வானரன்

வரே உள்ளார். இதனால் தான் என்னவோ பல சர்வதேச திரைப்பட விழாக்களில் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்ற கறுப்பின பெண்கள் இயக்கிய பின்வரும் விவரணத் திரைப்படங்கள் இறுதிச்சுற்றுக்குக் கூட தேர்வாகவில்லை.

FREE ANGELA AND ALL POLITICAL PRISONERS Director: Shola Lynch
VALENTINE ROAD Director: Marta Cunningham
GIDEON'S ARMY Director: Dawn Porter
AMERICAN PROMISE Directors: Michele



Stephenson and Joe Brewster
THE NEW BLACK Director: Yoruba Richen

சிறந்த வெளிநாட்டுப் படப்பிரவிலும் அரசியல் தவிர்க்கப்பட்டுள்ளது. இத்தாலியப் படமே சிறந்த படவிருதைப் பெற்றது. வழமைபோல்

தொடர்ச்சி 24ஆம் பக்கம்




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

◊ கனி ◊

வைரவி மாமா அவளது கையை இறுக்கப் பிடித்துக் கொண்டார்.

'பிள்ளை இது வேறை விசயம் போலை இருக்குது. நீ கிட்டப் போய்க்கீயிடாதை. நாங்கள் ஆம்பிளையள் பாக்கிறோம். நீ இப்பிடி நில்' என்றவர்,

முத்தம்மாவை வண்டிலுக்குக் கிட்டப்போக விடவில்லை.

'இப்ப கொஞ்சத்துக்கு முந்தித்தான் நானும் தம்பியும் தோட்டத்துக் கெண்டு இதாலை வந்தனாங்கள்.. அப்ப வண்டிலையும் மாட்டையும் பாத்திட்டு கிட்ட வந்தால், விசயம் விளங்கிவிட்டுது. தம்பியை முனியப்பரிட்டை அனுப்பிப் போட்டு இதிலை நிக்கிறேன். நல்ல காலம் நானிதிலை நிண்டது. அல்லாட்டி இப்ப உன்னாலை வேறை வில்லங்கம் வந்திருக்கும்.' தனது மகனைத்தான் வைரவி மாமா தம்பி எனக் குறிப்பிட்டிருந்தார்.

முத்தம்மா திகைத்துக் போனாள். வைரவி மாமாவின்ரை கதையைப் பாத்தால் காத்துக் கறுப்பின்ரை வேலையோ?

முத்தம்மா பயந்துதான் போனாள் ஆனால் அழவில்லை.

இதற்குள் இன்னமும் சிலர் வந்து விட்டார்கள்.

'பிள்ளை, இவன் கந்தசாமி சாமத்திலை காளி கோயில் பக்கம் போனவனே?

முத்தம்மா முதல்நாள் இரவு நடந்ததுகளைக் கூற,

'இந்தக் காசியருக்கு என்ன விசரே! தெரிஞ்சு கொண்டு தனியனாய் பொடியனை அனுப்பிருக்குது மனிசன்.' அங்கலாய்த்தார் வைரவிமாமா. காசியம்மானிலை இவருக்கு கொஞ்சம் பிடிப்பில்லை என்பது வேறுவிடயம்.

'நான் நினைக்கிறேன், இது முனியின்ரை வேலைதான். அடிச்சுக் கிடிச்சுப் போட்டுதோ தெரியேல்லை.' என்றவர் வண்டிலின் மறு பக்கமாய் சென்று கந்தசாமியைக் கவனமாக உற்றுப் பார்த்தார். வண்டிலுக்கும் தனக்கும் கணிசமான தூரத்தைப் பேணிக் கொண்டார்.

திரும்பி வந்தவர், 'முனியடிச்ச மாதிரித் தெரியேலை. முனியடிச்சிருந்தால், வாயாலையும் மூக்காலையும் ரத்தம் வந்திருக்கும். ஆளிப்ப முடிஞ்சிருக்கும். மூச்சு வருகுது போலை இருக்குது. கடவாய் ஓரத்திலைதான் கொஞ்சம் ரத்தம் கசிஞ்சிருக்கு. பாவம் நல்லாய் பயந்திட்டான் போலை.' என்றவர் தனது கணிப்புகளைக் கூறிக் கொண்டிருந்தார்.

முனியடிக்கேல்லை என்று வைரவிமாமா கூறியது முத்தம்மாக்கு ஆறதலாக இருந்தது. 'எத்தினை நாள் சொன்னனான். இரவிலை தனியாய் காளி கோயிலடிப் பக்கம் போக வேண்டாமென்று கேட்டாத்தானே' அந்த நேரத்திலும் முத்தம்மாக்கு இந்த ஞாபகம் வந்தது. வெறும் பயப்பிராந்தி என்றால் நாள் செல்லப் போயிடும்.

'ஆனாலும் என்னத்தையோ பாத்து பயந்திட்டான். அதாலைதான் மயக்கமாய் போயிட்டான். நல்ல காலம், வெள்ளையனும் கறுப்பனும் வண்டிலைக் கோயிலடிக்குக் கொண்டு வந்தது.' வைத்திமாமா இன்னமும் என்னென்னவோ கூறிக் கொண்டு இருந்தார். முத்தம்மாவுக்கு இப்ப ஒன்றுமே கேட்கவில்லை.

முனியப்பரும் வந்து விட்டார். ஊரில் நடக்கும் காத்துக் கருப்புச் சேட்டைகளுக்கான பரியாரி இவர்தான். பக்கத்து ஊர்களிலும் இவரது திறமை நன்றாகவே தெரியும். ஊரவர்கள், பேய், பிசாசுப் பயமின்றி இருப்பது இவரால்தான் என்று கூறவேண்டும்.

தயாராகவே முனியப்பர் வந்திருந்தார். இந்த அதிகாலையிலும் குளித்துச் சுத்தமாக இருந்தார். நெற்றி முழுவதும் திருநீறு. மேற்சட்டை இல்லாத உடம்பில் நெஞ்சிலும் கூட, மூன்று திருநீற்றுக் கீறுகள் இருந்தன. இரண்டு கைகளிலும் தாராளமாக நூற் கட்டுகள். தோள்ப் பட்டைக்குக் கிட்டவாகவும் கூட நூல் கட்டியிருந்தார்.

இந்த நூல்களும், மந்திரிக்கப்பட்ட திருநீற்றுப் பூச்சுகளும்தான் தனக்குப் பாதுகாப்பு எனக் கூறிக் கொள்வார். ஊராருக்கும் எப்படியோ செய்தி எட்டிவிட்டது. பிள்ளையார் கோவிலடிக்கு ஊர்த் திருவிழாப் போல் சனமில்லாது விட்டாலும் பெருமளவில் ஊரார் வந்து விட்டார்கள். எல்லோரையும் தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு, முனியப்பர் மட்டும் வண்டிலில் கிடந்த கந்தசாமிக்குக் கிட்டவாகச் சென்றார். வாயில் ஏதோ மந்திரங்களைத் தனது பாதுகாப்பிற்காக உச்சரித்தபடியே சென்ற முனியப்பர், கையில் கொண்டு வந்திருந்த சிறிய துணிப்பையில் இருந்து மந்திரித்த திருநீற்றை வலது கையில் எடுத்து மீண்டும் அதற்கு மந்திரங்கள் கூறி, மெதுவாக ஊதி, இடது கையால் சொடுக்குப் போட்டு, வலது கையை நீட்டி, கந்தசாமியின் மேல், ஊதினார். திருநீறு கந்தசாமியின் மேல் முழுவதும் காற்றோடு சென்று படிந்தது. துணிப்பையில் இருந்து இன்னமும் திருநீற்றை எடுத்து கந்தசாமியின் மேல் எறிந்தார். இம்முறை மந்திரம் ஒன்றும் கூறவில்லை.

முத்தம்மா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது வாய் அடிக்கடி பிள்ளையாரே, பிள்ளையாரே என்று முணுமுணுத்துக் கொண்டு இருந்தது. தொடரும்....


Efile
Your Tax Returns



CRA Approved E- Filer
**T. Munnainathan** BSc (M Eng).
Insurance Advisor & RESP Representative,
Former Engineer Srilanka Railways

Faster Refund
Paperless
Improved Accuracy
Ease of mind
Ease of payment
Call for Appointment
Nathan
416 500 9475
Unit 200 - 4433 Sheppard Ave East.
Brimly & Sheppard
Other Services:
Apply for PR Card, OAS, Citizenship, Passports etc......
RESP, RRSP & Life Insurance

# 2013ஆம்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

பல நாட்டைச் சேர்ந்தவர்களும் மக்களிடம் பிரபல்யம் பெற்றவர்களும் இறுதிச் சுற்றுக்குத் தேர்வானார்கள். சோமலி நாட்டைச் சேர்ந்த Barkhad Abdi கப்டன் பிலிப்ஸ் படத்திற்காக இறுதிச்சுற்றுக்குத் தேர்வானார். சிறந்த துணைநடிகையாக தேர்வான Lupita Nyong'o, கென்யா நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யேமன் நாட்டைச் சேர்ந்த சரா இசாக், பின்லாந்தைச் சேர்ந்த Selma Vilhunen , Kirsikka Saari போன்ற பல்வேறு நாட்டினர் இறுதிச் சுற்றுக்குத் தேர்வானார்கள். பாலஸ்தீனிய படமான ஓமார் சிறந்த வெளிநாட்டுப் படத்திற்கான இறுதிச் சுற்றுக்குத் தேர்வானது. Leonardo DiCaprio, Sandra Bullock, Meryl Streep, Julia Roberts போன்ற பிரபல்யங்களும் இறுதிச் சுற்றுக்குத் தேர்வானார்கள். பிரட் பிட் '12 வருட அடிமை' படத்தின் ஒரு தயாரிப்பாளர் ஆவார். இவ்விருது விழா சர்வதேசத்தை தன்னுள் அடக்கும் சகல விடயங்களையும் உள்ளடிக்கியிருந்தது. இந்தியப் பெண்கள் இப்படத்தின் வெற்றி பெற்றோரைப் பற்றி முகநூலிலும் இணையத் தளங்களிலும் விவாதிக்கவில்லை. மாறாக இவர்களது உடைகள் பற்றிய விவாதமே மேலோங்கியிருந்தது. வட அமெரிக்காவை விட ஆசிய நாடுகளைச் சேர்ந்த பலர் விருது விழாவிற்கு முன்பாகவே ஆருடம் தெரிவித்திருந்தனர். முகநூலில் விவாதிக்கவும் செய்தனர். அமெரிக்கமயமா தலை ஒஸ்கார்



சிறப்பாகவே செய்கின்றது. எது எப்படியிருப்பினும் இவ்வருட ஒஸ்காரின் சிறந்த படமான '12 வருட அடிமை' ஒரு முக்கிய சரித்திரத்தை பதிவு செய்திருந்தது. அது மட்டுமல்ல இன்றைய முக்கிய பொருளாதார தேய்வுக் காலத்தில் அதிகம் பாதிக்கப்படும் கறுப்பின மக்களை அவர்களது சரித்திரத்தை மீள நினைவு படுத்தியது. அதனை விட முக்கியமாக கூற எதுவுமில்லை.

# சார்பியல்

17ஆம் பக்கத்தொடர்ச்சி

சேதப்படுத்துவதில்லை. அதனால் நாம் கற்பனை அச்சாகக் கொண்ட நேர அலகின் மாற்றம் தெரிவதில்லை. முப்பரிமாணப் புள்ளிகள் அதேபோலவே தெரிகின்றன. இந்த நேரத்தில், நாற்பரிமாணத்தின் குறும்பாதை (Geodesic) வழியிலே இயல்பாக இயங்குகின்ற பொருளைப் பார்க்கிற எங்களுக்கு, அது முப்பரிமாணப் புள்ளிகளில் வளைந்து செல்வது போலத் தோன்றுகிறது. அதுசரி, அப்பிளோ அல்லது மேலே இருந்து விழவிடப்படும் பொருளோ நேராகத்தானே வந்து புவியில் மோதுகின்றன! அது எப்படி என்றொரு கேள்வி உங்களுக்கு எழலாம். அதுவும் தோற்ற மாயைதான். அதனையும் தெளிவுபடுத்திக் கொள்வோம், அடுத்த தடவையில்.

# மொறொக்கோ...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆரம்பமாகிற்று. மாப்பிள்ளையின் தகப்பனாரும், தமையன் தம்பதியினரும் அறுகரிசி போடுவது பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் ஆங்கிலத்தில் அறிவுறுத்தப் பட்டனர். யாவரும் சம்பிரதாய முறைப்படி சடங்குகள் முடிந்தபின் திருமணத் தம்பதிகளுடன் சேர்ந்து படமெடுத்துக் கொண்டனர். பின்னர் கலந்து கொண்ட யாவரும் மணத் தம்பதிகளுடன் சேர்ந்து கூட்டாக ஒரு படமெடுத்துக் கொண்டனர்.

பின்னர் யாவரும் தத்தமது அறைகளுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டு விருந்து உபசாரத்துக்கு உடை மாற்றிக் கொண்டு அங்கிருந்த உணவு மண்டபத்துக்கு மேலிருந்த மொட்டை மாடியில் சிற்றுண்டிகளுக்கும் குளிர்பானங்களுக்கும் ஒன்று கூடினர். அப்போது இலேசாக இருள் சூழ ஆரம்பித்தது. ஆங்காங்கே மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. பாண்ட் வாத்தியங்களை வாசித்த மொறொக்கர்கள் மேலே வந்து பல சாகச விளையாட்டுக்களை யாவருக்கும் செய்து காண்பித்தனர். அப்போது இலேசான குழலோசையும் மேளவாத்தியமும் வாசிக்கப்பட்டன. இருள் சூழ்ந்த பின்னர் யாவரும் கீழிறங்கிச் சென்றனர். அவ்வேளை அதே குழுவினர் தீப்பந்தங்களைச் சுழட்டி விளையாட்டுகளும் வித்தைகளும் செய்து காட்டி யாவரையும் மகிழ்வித்தனர். அவ்வேளை வாணவேடிக்கைகளும் நடத்தப் பட்டன. யாவரும் கைதட்டி ஆரவாரித்து அவர்களை உற்சாகப்படுத்தினர்.

ஏறக்குறைய எட்டு மணியளவில் இராப் போசன விருந்து ஆரம்பமாயிற்று. அதற்கு முன் வழக்கம்போல மாப்பிள்ளையின் தகப்பனாரும், மணப்பெண்ணின் தகப்பனாரும் தமது கருத்துக்களை நகைச் சுவையோடு வெளிப்படுத்தினர். பின்னர் மாப்பிள்ளையையும் மணப்பெண்ணும் எவ்வாறு தமது தொடர்பு ஆரம்பமாகி ஒவ்வொருவரின் குடும்பங்களைச் சந்தித்து உரையாடிய சந்தர்ப்பங்களை எடுத்துக் கூறினர். இந்நிகழ்வினை தனது நகைச் சுவைப் பேச்சாலும் சரளமான ஆங்கில வார்த்தைகளையும் அலுப்புத்தட்டாமல் யாவரும் பாராட்டும்படி நடத்தியவர் மாப்பிள்ளையின் நண்பரும் இந்தியப் பூர்வீகத்தைக் கொண்ட கலப்பு மணம்புரிந்த கிறிஸ்டி என்பவர் இடையிடையே தனது அனுபவங்களையும் இந்திய பின்னணியோடு சேர்த்துக் கூறி யாவரையும் சிரிக்க



வைத்தார். இராப்போசன விருந்து ஒன்பது மணியளவில் ஆரம்பமாகியது. அதன் பின்னர் மதுபானச்சாலை மண்டபத்தின் ஒரு மூலையில் இயங்க ஆரம்பித்தது. விருப்பமானோர் தமக்குப் பிடித்த பானங்களை வாங்கிப் பருகினர். சாப்பாடு முடிந்த பின்னர் பெரும்பாலானோர் நடனமாட ஆரம்பித்தனர். மணத்தம்பதியர் உட்பட யாவரும் நன்கு ஆடிக் குதூகலித்தனர். நள்ளிரவு வரை இது தொடர்ந்தது. தொலைவிலிருந்து சென்றவர்கள் சிலர் தமது ஹோட்டலுக்குப் புறப்பட்டனர். நாமும் காலை ஒரு மணியளவில் அங்கிருந்து கிளம்பினோம். இது வாழ்வில் மறக்க முடியாத ஒரு திருமணம் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

## கனடா - நாவாந்துறை சென். மேரிஸ் கிளை
## *Canada - Navanthurai St. Mary's Branch*

### கனடா - நாவந்துறை சென். மேரிஸ் கிளையின் 2014 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள்



தலைவர் - சூசைப்பிள்ளை மரியதாஸ்
செயலாளர் - மனுவல் கொன்சார்வே
பொருளாளர் - மேரிராணி அன்ரனிப்பிள்ளை
உபதலைவர் - பிலிப் டடாக்ஸ்
உப - செயலாளர் - பிரான்சிஸ் ஜீவா

### நிர்வாக உறுப்பினர்கள்

- ஆசீர்வாதம் அன்ரனிப்பிள்ளை,
- டானியல் ஜீவா,
- மைக்கல்ராஜா அசோக்
- அஞ்சலீனா மரியதாஸ்
- **நிர்வாக ஆலோசகர் - சட்டத்தரணி** - மனுவல் யேசுதாசன்

***E-Mail:*** manuel.C2007@yahoo.ca

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
SPECIAL CLASSES FOR
❖ PRE-UNIVERSITY
• MCAT EXAM
❖ IB & AP program
• SUMMER CLASSES "July - August"
❖ REGULAR CLASSES "Throughout the year"
GR 1-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

# தமிழ்...

## 21ஆம் பக்கத்தொடர்ச்சி

கறுப்பு நிறத்தை காமத்திற்கான அழகாக தனது படங்களில் வெளிப்படுத்தினார்.

கற்சுறா வின் உரை இது. பாலுமகேந்திரா என்ற ஒரு பெயரை சினிமாவுக்கூடாக அறிந்தவர்கள் நாங்கள். சினிமா என்பது மனிதருக்குள் நிகழ்ந்த ஒரு இரசாயன மாற்றம் என்று நான் சொல்லியிருக்கிறேன். தனது சினிமாவின் ரைட்டிலில் வருகின்ற பாலு மகேந்திரா என்ற மனிதனை அந்தப் பெயரை நாம் எவ்வளவு நேசிக்கிறோம் என்பதை அந்த சினிமா சொல்லும் வகைகளிலேயே வைத்து அளவிடுகிறோம். ஒரு சினிமாவை நாம் ஆதரிக்கிறோம்



அல்லது புறந்தள்ளுகிறோம் என்பது எதனடிப்படையில்? ஒரு சினிமா பேசும் கருத்தியலோடு மட்டும் ஒன்றிணைந்து அதனை ஆதரிப்பது கலைஞர்களின் வேலையல்ல. வாழ்வென்பது ஆணியடித்துக் கட்டிய ஒரு நேர்கோடல்ல. அழுகிய பல அழகிய பக்கங்களைக் கொண்டது அது. அதனூடு ஊடறுத்து தன்னை ஒப்புவிப்பவன் கலைஞன். ஒரு கலைஞன் இப்படித்தான் இருக்கவேண்டும் தனது கலையில் பிரதியிடுவதற்கு ஒப்ப அவன் வாழவில்லை என்று சட்டாம்பித்தனம் செய்பவர்கள் இந்த உலகத்தின் ஸ்பரிசத்தை ஒருபோதும் உணருவதில்லை. அந்த வகையில் வாழ்வின் ஸ்பரிசத்தை உணர்ந்தவன் அந்தக் கலைஞன். தனியே ஒரு நல்ல கமராமானாக இருந்ததால் மாத்திரம் அவர் நல்ல படங்களைத் தரவில்லை. சினிமாவில் சொல்லப்படவேண்டியதை மட்டும் சொல்லியது என்பதும் அதை எப்படிச் சொல்லவேண்டும் எனத்தெரிந்ததும் என்பது மிகமுக்கியமானது. அதைவிட முக்கியம் சினிமாவை பிரமாண்டங்களுக்குள் நுழைக் காமல் அந்த இரசாயனச் சொயற்பாட்டை மிக இலகுவாகக் கையாண்டது. கடைசி யான இந்த ஒன்றிற்காக பாலு மகேந்திரா என்ற மனிதன் நமக்குள் என்றும் வாழ்வான். அவனை நாங்கள் கொண்டாடிக் கொண்டேயிருப்போம். ஆனால் பாருங்கள் தான் வளர்த்து விட்ட பிள்ளைகள் என்று இருப்பவர்கள் சினிமாவுக்கான கதைக்கு படாதபாடு படுகிறார்கள். அனால் பாலு மகேந்திரா தன் மனதிற்குள் இருக்கும் சிக்கல்களை முரண்களை அவிழ்த்து ஒரு அழகான சினிமாவைச் மிகச் சாதாரணமாகத் தந்துவிடுவார். தனது அநேக படங்களின் பாத்திரங்களில் தான் இருப்பதாகச் சொல்லும் பாலு மகேந்திரா மூன்றாம் பிறை யில் வந்த கமல்ஹாசன் தான், தான் எனச் சொல்வதில் தன் வாழ்வின் முழு அர்த்தத்தையும் சொல்லிவிடுவார். மிகவும் குழறுபடியான தனது வாழ்வில் சீராக இருந்தது சினிமா மட்டுந்தான் எனச் சொல்வதில் அந்தக் கிழட்டுக் கலைஞன் என்றும் நிலைப்பான். தன்னுடைய இறுதிக் காலத்தில் மிக நூதனமாக உணர்ச்சி வசப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்த முடியா மல் அழுதுவிடும் நிலைக்கு வந்திருந்தார். இறுதிக்காலத்தில் தன்னை முழுமையாக விளங்கிக் கொண்டிருந்தார்.

மரணம் தன்னருகில் இருந்ததை அவன் உணர்ந்து கொண்டான். இல்லையேல் வைராக்கியம் பிடித்த மனது இவ்வளவு இளகியிராது. அகிலன் உரையாற்றும் பொழுது 'எனக்கு அவரை நன்கு தெரியும். நான் அவரை பல தடவைகள் சந்தித்துள்ளேன். தான் இரு முதலமைச்சர் கள் மத்தியில் ஓடிக் கொண்டிருக்கின்றேன் எனக் கூறுவார். சோபாவின் தற்கொலை பற்றி கேரள முதலமைச்சரும், அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சரான எம்.ஜி.ஆரும் இவரை தொந்தரவு செய்து கொண்டிருந்தார் கள். கேரளாவில் அம்மா எனப்படும் மலையாள சினிமாச் சங்கம் இவரை மலையாளப்படங்களில் பணியாற்ற தடை- செய்திருந்தது' மேலும் இவர் உரையாற்றுகையில் இந்தியா தமிழ்நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு எதிரான குடிவரவு வன்முறைகள் பற்றிக் குறிப்பிட்டார். பி. விக்கினேஸ்வரன் தனதுரையில் பாலு மகேந்திராவை ஒரு இயக்குனர் எனக் குறிப்பிடுவதை விட சிறந்த ஒளிப்பதிவாளர் எனவே குறிப்பிடலாம் எனக் கூறினார். இவர் பாலு மகேந்திராவின் ஒளிப்பதிவு முறைகள் பற்றியும் குறிப்பிட்டார்.

### எழுத்தாளரும் விமர்சகருமான க. நவத்தின் உரை கீழே

உலக தரத்தை எட்டியுள்ள சிங்கள சினிமாவுலகின் முதலீட்டாளர்கள் தமிழர்கள் தான். இந்நிலையில் ஈழத்தமிழ்ச் சினிமா இன்னமும் ஆரம்ப அரிச்சுவடி நிலைமையில் இருப்பதற்கு போதிய பொருளாதார வளமின்மையே பிரதான காரணம் எனக் கூறப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனடிப்படையிலேயே ஈழத் தமிழ்ச் சினிமாவின் வளர்ச்சியின்மைக்கு தமிழர்கள்தான் காரணம் என பாலு மகேந்திரவே ஒருமுறை கூறி மனம் வருந்தியுள்ளார். மிகச் சிறந்த ஒளிப்பதிவுக் கலைஞரான பாலு மகேந்திரா, ஒரு தரமான இயக்குனரும் கூட என்பதற்கு வீடு, சந்தியாராகம் போன்ற கலைப்படைப்புகள் தகுந்த சான்றுகள். ஆனால் இப்படைப்புகள் இவரது வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டமை துயரமே. இதனால்தான் அவர் சாதாரண இரசனை யுடன் சமரசம் செய்துகொண்டு ஜனரஞ்சகப் படங்களை உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தத் திற்குள்ளானார். ஆயினும் அழியாத கோலங்கள், மூடுபனி, மூன்றாம்பிறை போன்ற அவரது ஜனரஞ்சகப் படைப்புக்கள் இன்னமும் பேசப்படும் படைப்புகளாகவே காணப்படுகின்றமை அவரது ஆற்றலுக்கான அடையாளங்களாகும். அரசியலின் முக்கியத்துவத்தை தெளிவுறவே தெரிந்து வைத்திருந்த பாலு மகேந்திரா அரசியல் வாதிகளை அறவே வெறுத்தவர். அதனால் அரசியல் படைப்புக்களைத் தவிர்த்து வந்தவர். ஏனைய பலரைப் போன்று ஈழப் பிரச்சினையை, சாதத்துடன் தொட்டுச் சாப்பிடும் ஊறுகாயாகத் தாமும் பயன்படுத்தக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தவர். இத்தகைய அரசியல் பற்றிப் பேசும் தமது படைப்புகள் நிச்சயம் ஆக்குரோஷம் மிக்கவையாவே இருந்திருக்கும் என்பதால்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்



A Career for Success

Diploma Courses
- Office Administration - 24 weeks
- Accounting and payroll - 24 weeks
- Computerized Accounting - 42 weeks

Certificate Programs
- Emerson Control Technique
- Proface-HMI
- RockWell Automation
- PLCs - AllenBradly, Omron, Seimens.and Panasonic

CAD/CAM Technology
- Auto CAD
- SolidWorks
- MasterCAM X6
- MicroStation
- Blue Print Reading

Multi-Media
- Basic Film Making & Camera
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

Steel Detailing using TEKLA

Electrical Pre Exam Course (309A)

Bank Teller Course
Cashier Course
Income Tax Course

Computer Technology
- PC technician (A+)
- Programs - C++, Visual Basic, Java
- SQL Database
- Web Development - HTML, CSS, JAVASCRIPT
- LINUX systems

Accounting Softwares
- Quick Books
- Simply Accounting
- Accpac
- MS Office

(Certificate Courses are taught individually and each courses less than 40hrs)

2005க்குப்பின் EI அல்லது
Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக்
கற்பதற்கு தகுதி உடையவராகலாம்
நீங்கள் 42 வாரத்துக்கு 1. Living expenses,
2. Daycare fees 3. Transport expenses
பெறுவதற்கு தகுதியுடையவராகலாம்

COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000

beta College
of Business & Technology

Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere),
Scarborough, ON, M1H 3C7

# BASEMENT RENT

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, truck parking, laundry. Close to all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.568.0686

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.887.3993 / 647.298.3993

**MCCOWAN & HIGHGlEN**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2014.
தொடர்புகளுக்கு: 289.380.6911

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediately.
416.300.5791 / 647.402.4435

**MCCOWAN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, park ing, laundry. Close to all facilities. Avail. immediately.
416.412.0406 / 416.271.9676

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.209.0566 / 416.418.3516

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2014.
தொடர்புகளுக்கு: 647.966.3786

**JANE & LAWRENCE**
Newly renovated 1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, large window, high ceiling. Couple or single person preferred.
தொடர்புகளுக்கு: 416.473.7396

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.522.3314

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**NEILSON & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.554.6872

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom walk-out bsmt for rent.Sep. entrance. Close to TTC, mall, school. Avail. immediately.
905.946.5167 / 416.281.2509 / 416.473.7518

**WARDEN & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Close to all facilities. Avail. immediately. Single person preferred. Avail. immediately.
416.497.7660 / 647.762.1937

**MCCOWAN & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.591.1142

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Large rooms, kitchen, washrooms. Close to all facilities. Avail. May 01, 2014.
தொடர்புகளுக்கு: 416.332.0504

**KENNEDY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, Kennedy Public School. Avail. immediately.
416.939.1493 / 416.701.0574

**GORE ROAD & CASTLEMORE**
2 Bedroom bsmt for rent. Kitchen, stove, fridge, living room, full-washroom, parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.888.3524

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
2 Bedroom or 1 bedroom Bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.454.9986 / 416.219.4936

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.509.5284 / 647.781.3019

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. car parking, laundry, living room, internet, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**BRIMLEY & STLEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. May 01, 2014.
647.760.4058 / 647.947.9172

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.891.5515

**MCCOWAN & MCNICOLL**
**MIDDLEFIELD & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.774.6599 / 647.408.4372

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.494.7149 / 647.656.6462

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rooms also avail. in main floor.
தொடர்புகளுக்கு: 416.635.0110

**LAWRENCE & MARKHAM**
1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Single person preferred. Avail. immediately.
416.438.2552 / 647.853.5524

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

**MEADOWVALE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime. No Smoking.
தொடர்புகளுக்கு: 416.509.5750

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately.
416.576.0602 / 905.471.1374

**MARKHAM & MCLEVIN**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
416.613.2962 / 647.530.7526

**MCCOWAN & ELSON**
Newly renovated bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.4437

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to Walmart, Spiceland. Rent negotiable. Avail. April 01, 2014.
தொடர்புகளுக்கு: 647.505.7951

**9 TH LINE & 14TH AVE.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Bills included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.400.5525

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, park ing, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.523.8813

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MORNINGSIDE & SHEPPARD**
4 Bedroom house for rent.
905.599.1622 / 416.939.8656

**ELLESMERE & SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to University, TTC, school. Avail. immediately.
416.550.8748 / 416.566.0595

**MCCOWAN & EGLINTON**
Furnished 1 large bedroom & 1 Bedroom bsmt for rent. kitchen, bath, Cable.Ladies only - Working women or students.24 hrs. Eglinton bus, Close to school, Go Station, R.H. king Academy.
தொடர்புகளுக்கு: 416.830.7823

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.4681

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. cable. Close to TTC, mall, school. No smoking & No pets. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.393.2081

**MARKHAM & PAINTED POST**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, bank. Avail. immediately.
647.801.8555 / 416.613.2880

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.868.0337

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, school, bank, mall. Avail. immediately. Also 4 bedrooms House for rent. 416.939.9353
416.875.3611 / 905.554.9353

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Furnitures inclu.. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.2253

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: ***416.551.8379***

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Pentecost Christian preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.831.8549***

# CONDO FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
2 Bedroom condo. for rent. Main floor. 1 Washroom, parking, laundry. Close to all facilities. Avail. immediately. All bills included. தொடர்புகளுக்கு: 416.427.2521

# HOUSE FOR SALE

புத்தளத்தில் Noor Nagar Station அருகாமையில் 3 அறைகள் கொண்டு வீடு ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 647.309.4633

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும

மேலும் பக்கங்கள் 27, 28

# ROOM FOR RENT

**KENNEDY & SHEPPARD**
One Master bedroom for rent in a condo. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Christiane preferred.
தொடர்புகளுக்கு: 647.309.2350

**SHEPPARD & KENNEDY**
1 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, bank. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.8216

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom for rent Laundry, no parking. Close to all facilities. Single person preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.713.6268

**FINCH & MIDDLEFIELD**
Newly renovated 1 bedroom for rent. Sep. washroom, parking, laundry, free internet. Close to TTC, mall, school, tamil stores, temples. Avail. immediately. Bachelors / students preferred.
தொடர்புகளுக்கு: 647.404.3004

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**BRIMLEY & EGLINTON**
1 Room for rent in a bsmt. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.725.2041

**MORNINGSIDE & STAINS**
வதிவிட அறைகள் உடனும் வாடகைக்கு உண்டு. 121 Wharnsby drive, Scarborough ல் அமைந்துள்ள வீடொன்றில் அறைகள் சகல வசதிகளுடனும் உடனடியாக வாடகைக்கு உள்ளது. விபரங்களுக்கு அழைக்கவும்.
தொடர்புகளுக்கு: 416.879.6301

**MCCOWAN & HIGH GLEN**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.717.1442

**BUR OAK & KINGSTON**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Pentecost Christian preferred.
647.205.0304 / 647.267.7550

**MARKHAM & EELESMERE**
1 Bedroom for rent in a apartment. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.557.7241

**BUR OAK & MINKAY**
1 Bedroom for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 905.554.5520

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.294.4631

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent. Parking, laundry, Close to TTC, mall. Single person preferred. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.896.2511

# ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. Close to TTC, mall, Centennial college. Avail. immediately.
647.706.4881 / 416.439.4076

**MORNINGSIDE & SHEPPARD**
Morningview Trail இல் 4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school, etc.
தொடர்புகளுக்கு: 416.805.8791

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் ***(Husband & Wife)*** வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
***416.291.6667 / 416.895.8111***

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: ***416.335.5242***

**LAWRENCE & PHARMACY**
***2*** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: ***416. 759.7016***

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நீராவியடி பிள்ளையார் கோவில் அருகில் வீடு வாடகைக்கு உண்டு. Avail. April 01, 2014.
தொடர்புகளுக்கு: 416.931.3444

****FREE PARKING****
APARTMENTS FOR RENT
In a NEWLY Renovated High-Rise Apartment Building
Utilities Included, Clean, New Elevator, TTC, Tamil store in bldg, Schools nearby
CALL: 416-264-2818

## TUTORING

***By Experienced Graduates.***

- Math • Adv. Function, Calculus & Vectors
- Physics, Data managt, Java
- Computer Training
- CCNA / CCNP Preparation Help

***Contact: 416.706.1654***

## TUITION

## KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

மேலும் பக்கங்கள் 26, 29

# HOUSE FOR RENT

**MORRISH & ELLESMERE**
2 Bedroom house for rent. And 2 bedroom bsmt for rent. Sep. entrance to Basement. Can be rented separately, Close to all facilities (TTC ,School & UFT and shopping compound)
தொடர்புகளுக்கு: 416.721.6231

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, school, mall.Avail. April 01, 14. 2 Bedroom bsmt also avail.
தொடர்புகளுக்கு: 416.297.9742

**MCCOWAN & BRIMORTON**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. March 15, 2014. தொடர்புகளுக்கு: 647.210.8145

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, school, mall. Avail. April 01, 2014.
905.471.2444 / 647.998.0181

**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedroom bungalow house for rent. Close to TTC, Morrish Public Library, mall, stores. Avail. immediately. Freshly done hardwood & paint.
தொடர்புகளுக்கு: 416.879.5906

**MARKHAM & 16TH AVE.**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.500.3443

**MCCOWAN & DENISON**
3 Bedroom house for rent. Parking, laundry.Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.296.7932

## பகுதி நேர வேலை வாய்ப்பு

பகுதி நேரமாக குறிப்பாக சனி, ஞாயிறு நாட்களில் மாலை நேரத்தில் Toronto பெரும் பாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளின் தொகுப்பாளர் தேவைப்படுகின்றது.
realtystudio24@gmail.com

## JOB JOB JOB

Scarborough வில் அமைந்துள்ள பேக்கறிக்கு சமோசா, rolls செய்யத் தெரிந்தவர்களும் இலங்கை, இந்திய உணவு வகைகள் தயாரிக்கத் தெரிந்த Cook உம் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.5265

## TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும். College University math short course. Guna Master: 647.834.7358
atgunam@yahoo.ca

## TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry & Biology. ***Free EQAO Preparation Class***. For Gr. 3, 6, 9 registered students who follow regular class with us. Starting on March 03, 2014.
***Ruban Master: 416.817.8226***

# JOB JOB JOB

## COOK WANTED

Scarborough வில் அமைந்துள்ள Indian, Srilankan Restaurant ஒன்றிற்கு அனுபவமுள்ள cook உடனடியாக தேவை.
தொடர்புகளுக்கு: 647.219.6214

## JOB JOB JOB

**YOUNG & STEELES**
Pizza Pizza நிறுவனத்திற்கு Delivery driver, Cook, Counter Helper ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.457.8263

## வேலை வய்ப்பு

வீட்டில் இருந்தபடியே சொந்தமாக உழைக்க விரும்புபவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம். Tax கட்டி உழைக்கும் தொழில். வாழ்வில் முன்னேற வேண்டும் என்று விரும்புபவர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 416.802.9782

## JOB JOB JOB

**AJAX**
2 வயதுடைய ஆண்குழந்தையை வீட்டிற்கு வந்து பராமரிப்பதற்கு வயதான பெண்மணி ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 905.399.1695

## TELE MARKETING

ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசத்தெரிந்தவர்கள் TELE MARKETING விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.230.2991

## HELP WANTED

வயதுபோன அம்மாவை வீட்டில் இருந்து பார்ப்பதற்கு ஒரு பெண் தேவை. அவருக்கு இருக்க இடமும், சாப்பாடும் இலவசமாக கொடுக்கப்படும். அத்துடன் சன்மானத் தொகையும் வழங்கப்படும். நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்.
தொடர்புகளுக்கு: 416.273.2820

## JOB JOB JOB

**YONGE & FINCH**
Pizza கடை ஒன்றிற்கு பகல் நேரத்தில் முழு நேர Delivery Driver வேலைக்கு ஆள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.730.9486

## PICK UP DROP OFF
## 24 and 7 ON TIME

Airport, Hospital, Niagara falls, School, Short distance Shopping, Appointments, Moving, Delivery ஆகியவற்றுக்கு அழையுங்கள்.
கட்டணங்கள் பேசித்தீர்மானிக்கப்படும்.
647.625.7879 / 416.277.7250

**FINCH & MIDDLEFIELD**
GTA Square இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier, cleaner, cook ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: ***416.318.9866***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனா பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

**பிளெக் மஜிக் 3 நாட்களுக்குள்
அகற்றி பாதுகாப்பு கொடுக்கப்படும்.**

# Tel.:647.856.0559

**GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)**

# TUTORING

Gr.3 - Gr. 12, University
English, Math, Science, Calculus & Vectors, Physics, Chemistry, Algebra, Functions, data Management & Computer Programming.
•Our Tutors are highly trained graduates•
Kumar, B.A.Sc. 647.648.3992
tutorsrikumar@gmail.com

## SPACE FOR RENT

**BIRCHMOUNT & MCNICOLL**

வீடியோ, நடன வகுப்பு, Tax Service, Tuition, சங்கீத வகுப்பு, போட்டோ பிரேம் செய்வதற்கான இடம் உண்டு.
தொடர்புகளுக்கு: 647.707.2145

மேலும் பக்கங்கள் 26, 27

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

## தையல் வகுப்புக்கள்
## தையல் Orders

**MARKHAM & LAWRENCE**

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

**உடனடி வாடகைக்கு**

Markham & Highglen- 2BR பேஸ்மென்ட்
Morningside & Finch - 2BR பேஸ்மென்ட்

மேலும் வீடுகள், கொண்டோக்கள், பேஸ்மென்ட்கள் வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள

அழையுங்கள்
**Jey 416-816-9011**

## திருமண சேவை

மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 1974 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு பெற்றோர் கனடாவில் மணமகளை தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.498.4623

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட வேளாள குடும்பத்தைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணிற்கும், 37 வயதுடைய பெண்ணிற்கும் கனடாவில் மணமகன்களை தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு: 647.825.9023

### *INVESTMENT PROPERTY FOR SALE*
### *FOR SALE: $229,000*

Excellent opportunity to own the investment property. Ground level, lease for $2500 per month for a Restaurant lease 4 more years. Next to Centennial College & 401. 950 Sq.ft. MLS #E2848276.
***905.201.9977 / 416.702.2030***

## CAR FOR SALE

2005 Nissan Sentra car for sale. Power window, power mirror, 236K, Well Maintained. Price $2,999.00.
தொடர்புகளுக்கு: 905.554.7734

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# FOR RENT - LEASE

• 500 Sq.ft. • 750 Sq.ft. • 950 Sq.ft. • 1450 Sq.ft.
Also 475 Square feet. Separate entrance to each unit.
***•Medical Professionals •Health - Fitness Services• Accountants & Finance •Lawyers & Real Estate •Agents & Paralegals.***
***Ready for Occupation.***
**Contact: 416.285.4695**

## *CARS, VANS & TRUCKS WANTED*

Any make, Any condition.
Pay top dollars.
Contact: 416.835.3475



## *ROOM FOR RENT KEELE & FINCH*

- Master bedroom with 5 piece washroom & Big walking closet. (Suitable for small family or couple)
- Expecting Friendly & Helpful Tenent (Tamil people preferred)
- Rent Negotiable ($500 - $1000)
- Having managing capacity of other tenents is also expected.
- Other room in same area (Rent $600 ) Food maybe available.

Close to York University, Mall, YRT. Furnitures, Laundry, Internet WIFI Avail. for both rooms.
416.514.1661 / 416.554.0387 (Text or leave message)

# HOUSE FOR SALE

## *WATERLOO TOWN HOUSE FOR SALE*

- ***4 Bedroom + 2 washroom house***
- ***Good For Students***
- ***Close to Waterloo & Laurier Universities***
- ***Demand Location***

மேலதிக தகவல்களுக்கு
***647.716.0906 / 647.268.0446***



# யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# SPACE FOR RENT

## *KENNEDY & LAWRENCE*

5000Sq.ft இடத்தில் Car Wash, Mechanic வேலை செய்வதற்கும் இடம் இருக்கிறது. அருகாமையில் சகல வசதிகளும் உள்ளன. Also Hoes also Rent.
தொடர்புகளுக்கு: ***416.755.8354***

# நான் வாசித்து மகிழ்ந்தது

என்று தலைப்பில் அடுத்த இதழில் இருந்து ஒரு பகுதி பிரசுரிக்க எமது நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது. நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே ***Vlambaram@sympatio.ca***
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!





www.gtr24.com

# அனைத்துலக தமிழ் வானொலி
# GLOBAL TAMIL RADIO

* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்

24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"



# முகம் காணா முதிர் நட்பு

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு**

அரையிலிருந்து ஆடை அவிழும் போது கரம் தானாகச் சென்று ஆடையைப்பற்றி மானத்தைக் காப்பது போல் நண்பனுக்கு துன்பம் வந்த போது உடனே சென்று உதவி, அதை நீக்குவதே உண்மையான நட்பிற்கு உதாரணமாகும்.

உறவுகளில் மிகவும் அருமையானதும் இனிமையானதும் நட்பு. அது மன உபாதைகளை தீர்த்து வைக்கும் மருந்தாகின்றது. பகைவரால் கேடுவராமல் காக்கும் காவலாகின்றது. ஒரே இனம், ஒத்த அந்தஸ்து, ஒத்த கல்வி அறிவு என்பன நட்பிற்கு காரணமாக அமைவதில்லை. ஒத்த உணர்வு தான் நட்பை உறுதி செய்வது. உணர்வால் பொருந்தியவர்களின் நட்பை கால மாறுதலோ, இடமாறுதலோ ஒன்றும் செய்வதில்லை. அதனை நிலையான நட்பெனலாம்.

விளையாட்டுத் தோழன், பள்ளிச் சகபாடி, கல்லூரி நண்பன், வியாபார கூட்டாளி, அலுவலக சகா, அயலில் வசிப்போர், சால்புடையோர் என்று பலர் நட்பால் இணைகின்றனர். நட்பு: நல்ல நட்பு, கூடா நட்பு என்று சொல்லப்படுவதுண்டு. கரும்பை நுனியில் இருந்து அடிவரை சுவைப்பது போல் இனிப்பது நல்லவர்களின் நட்பே. அதனை அடியில் இருந்து நுனிவரை



சுவைப்பது போல கசப்பது தீயவர்களின் நட்பு. நட்பில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே ‘அண்டை வீட்டுக் காரனை நேசி ஆனால் வேலியை எடுத்து விடாதே’ என்று ஒரு அறிஞர் கூறிப் போந்துள்ளார்.

உனது நண்பர்களைக் கூறு நீ எப்படிப்பட்டவன் என்று சொல்கிறேன் என்பதிலிருந்து நட்பாம் கிழமைக்கு அன்பு, பண்பு, அறிவு, கருணை உயிர், நேயம் என்பன அவசியம். தெளிவு அகம் நக நடப்பதே உண்மை நட்பு என்பர் வள்ளுவர்.

தலைசாய்த்துக் கொள்ள ஒருமடி
தன்னைப் பகிர்ந்து கொள்ள ஒருமனம்
பற்றிக் கொள்ள ஒரு கரம்
தோள் கொடுக்க ஒரு தோழன்
வாழ்வில் எல்லோர்க்கும் இவை அவசியம் தேவை.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

மேலுள்ள குறளுக்கு கோப்பெருஞ் சோழன் - பிசிராந்தையர் இடையே நிலவிய நட்பை உதாரணமாகக் கூறலாம். இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் கண்டு பழகாமலேயே நட்புப் பூண்டிருந்தனர். கோப்பெருஞ் சோழன் ஒரு மன்னன். பிசிராந்தையர் ஒரு புலவர். இருவரும் ஒவ்வொருவரதும் நற்பண்புகளையும் கேட்டறிந்தனர். அரசனது நற்பண்புகளை புலவர் கேட்டறிந்தார். புலவரது அறிவுத் திறனை மன்னன் கேட்டறிந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பாராட்டி வாழ்தனர். என் இனிய நண்பனையென்று நான் காண்பேனோ. அந்த நாள் வந்திடுமோ என்ற ஏக்கத்துடன் பெருமூச்சுவிடுவார்கள். மன்னன் தனது மக்களின் துரோகத்தால் மனம் வெதும்பி அரசாட்சியைத் துறந்தான். உண்ணாமல் உறங்காமல் வடதிசை நோக்கியிருந்து உயிர்விட துணிந்தான். பண்டைக்காலத்தில் இப்படியாக உயிர்



**நா. க. சிவராமலிங்கம்**

தொடர்ச்சி 33ஆம் பக்கம்




# குறிஞ்சித் தலைவனின் வெஞ்சினம் "அடைந்தால் மகாதேவி அடையா விட்டால் மரணதேவி" என்றுரைப்பாரும் சங்க செய்திகளில் உளவே.

தலைவன் விரும்பிய அணங்கைக் கைப்பற்ற இடையே நந்தியாக நிற்கின்றாள் தோழி. தலைவனோ அவளின் துணையை நாடுகின்றான். தன்னையும் தலைவியையும் இணைத்துவைக்கும்படி கேட்கின்றான். தனது காதலை அவளுக்குத் தெரியப்படுத்தும்படி கேட்டும் அவள் அதற்கு இடங்கொடுக்காது தலைவியைச் சந்திப்பதற்கு தடையாக அமைகின்றாள். சங்காலத்து குறிஞ்சி மக்களின் வாழ்வியலில் மடலேறுதல் தாம் நினைத்ததைச் சாதிக்கமுடியாதவிடத்து ஈற்றில் தற்கொலைதான் என்ற அவர்களின் நிலைப்பாட்டை உணர்த்துவதாக அமையும். தலைவன் மடலேறத் தலைப்பட்டால் ஊர் கூடி அதனைத் தீர்த்துவைத்துவிடும். அது சம்பந்தப்பட்ட தலைவன் தலைவி இருவருக்குமே பெரும் கேட்டை விளைப்பதாக அமையும். தலைவன் இவளால் மடலேறினான் என்று ஊரே பழித்துரைக்கும். அந்த அவமானத்திற்கு அஞ்சி மடலேறு முன்பே தலைவனின் விருப்புக்கு பச்சைக் கொடிகாட்டிவிடுகின்றாள் தலைவி. ஆனால் அப்படியும் அவள் உடன்படவில்லை என்றால் தலைமகனின் நிலை மடலேறுவதுதான் முடிவாகும்.

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

இந்த குறிஞ்சி நிலத்துக் காட்சிப்படிமத்தை அழகிய கவிதை யாக வடித்துக் காட்டுகின்றார் தொல்பவிலர் என்னும் புலமனார். குறுந்தொகையில் வரும் இந்தப் பாடலில் தலைவ-னின் நிலைமை தெளிவுறுத்தப் படுகின்றது. தலைவியைக் காண விளையும் அல்லது அவளிடம் தனது விருப்பத்தைத் தெரியப்படுத்திக் கேட்டும் அதற்கு இசைந்து கொடாத தலைவியிடம் சூழுரைக்கின்றான் தலைவன்: அமிழ்தச் சுவை உடைய நாவானது அஞ்சும்படியாக அமைந்துள்ள மிக நேராகவும் கூர்மையாகவும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டவை போல முளைத்திருக்கும் பற்களை உடைய அழகிய சிரிப்பை உடையவளும் அதிகம் பேசாது ஒரு சிலவார்த்தைகளையே உதிர்க்கும் அந்த மாதுநல்லாளைப்



பெறுவதில் தடையிருக்குமாயின் நான் மடலேறியாவது பெற்றுக்கொள்ளுவேன். அவ்விதம் பெற்றபின்னர் இந்த ஊரிலுள்ள வீதிகளில் அவளோடு நான் செல்லும்போது அந்த நல்லவளின் கணவன் இவன் என ஊரவர்கள் என் செவிப்படச் சொல்லும் சொல்லுக்கு நான் சிறிது கூச்சப்படுவேன்:

அமிழ்து பொதி செந் நா அஞ்ச வந்த
வார்ந்து இலங்கு வை எயிற்றுச் சில மொழி
அரிவையைப்
பெறுகதில் அம்ம யானே பெற்றாங்கு
அறிகதில் அம்ம இவ் ஊரே மறுகில்,
நல்லோள் கணவன் இவன் எனப்
பல்லோர் கூற, யாஅம் நாணுகம் சிறிதே.

எனக் குறுந்தொகை நூலில் தொல்கபிலர் பாடியுள்ளமை இன்றும் நாம் காணும் காட்சிப்படிமங்களை ஒத்துள்ளன. காதலுக்காக உயிர் கொடுக்கத் தலைப்பட்ட இளைஞர்கள் எத்தனை எத்தனை. காதல் கைகூடாது மனமுடைந்து மரணத்தைத் தழுவிக்கொண்டவர்களின் நிலை இன்றுமட்டுமா? சங்கத் தமிழர் வாழ்வியலிலும் காணப்பட்டுள்ளது. மடலூர்தல் அக்காலத்து வழக்கு. மண்ணிலே குதிரையை அமைத்து அதில் கூரியமுட்களைப் பதித்து அதன்மீதிருந்து உயிரைப் போக்கிக்கொள்ளும் தற்கொலை முறை சங்ககாலத்து மடலூர்தல் எனப்படும். ஒருவன் ஒருத்தியை நினைத்துவிட்டால் அதனை ஊர் சேர்ந்து சேர்த்துவைத்துவிடும் முறை பண்டைக்காலத்துத் தமிழ் மக்களிடையே நிலைத்திருந்திருக்கின்றது. தலைமகன் தலைவியை மனதில் வரைத்துக்கொண்டு அவளிடம் தனது எண்ணத்தை எடுத்துரைக்க வாய்ப்புக்கிட்டவில்லை என்றால் தோழர்களின் துணையை நாடுவது இயல்பு. தலைவியின் உயிர்த்தோழியிடம் தனது எண்ணத்தை எடுத்துரைத்து அவளைத் தன்வழிப்படுத்த முயற்சிப்பது தலைவனின் தந்திரோபாயங்களில் ஒன்று. நேரடியாக தனது காதலை வெளிப்படுத்த முடியாத நிலையில் தோழியின் துணையைத் தலைவன் நாடுகின்றான். நாடியவனுக்கு நயப்பான பதில் தோழியிடமிருந்து கிடைக்கவில்லையானால் அவன் அவளை மிரட்ட முற்படுவது இயல்பு. அவளுக்குக் கெடுதல் செய்வேன் என்ற தோரணையல்ல நான் தற்கொலை செய்துகொள்வேன் என்பதுதான் அந்த மிரட்டல். பண்பாடு நிறைந்த தமிழர்கள் தற்கொலையைச் சாதாரணமானதாகக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள் என்பது இந்த இறுதி ஆயுதமாகக் கையாளுகின்ற நிலை எடுத்துக் காட்டுகின்றது.


கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

பெருமையுடன் வழங்கும்

**மகுடம் - 2014**

**பல்சுவை கலை நிகழ்வு**

மக்களால் நன்கு அறியப்பட்ட அனுபவமிக்க நடன ஆசிரியர்களின் மாணவர்கள் வழங்கும் நடனங்கள், நாடகங்கள், திரை இசை நடனங்கள், நட்சத்திரா இசைக்குழு ("Natchathraa Music Group") இசைக்குழுவின் இன்னிசை மழை மற்றும் பல நிகழ்வுகள்.

காலம் : *March 22 , 2014*
நேரம் : மாலை 5:30 மணி
இடம் : Armenian Youth Centre, 50 Hallcrown Place, Toronto (Victoria park & HWY 401)

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: **416.414.3327** **416.299.6645** **416 287 8164** **416.283.1439** **416.296.7037** **647.894.6467**



**AUM WELLNESS CLINIC IN**

**Healing Massage, Suffering From Pain?**

**Get Relief From:**

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

**Dr. Lata**

Based on Appointment



***Cell: 416.890.9217 Office: 647.304.6046***
***5215 Finch Ave. E. #220, Toronto, ON***

# நான் வாசித்து மகிழ்ந்தது



சிவகுமார் ஒரு பன்முகத்திறமை கொண்ட மனிதராக இருக்கிறார். நல்ல நடிகர், நல்ல ஓவியர் என்பதோடு நல்ல எழுத்தாளராகவும் தெரிகிறார். இவர் சமீபத்தில் ஒரு கல்லூரியில் பேசிய பேச்சின் வீடியோவை ஜெயா தொலைக்காட்சியில் பார்க்க நேர்ந்தது. அதில் அவர் பேசிய பல விடயங்கள் மனதை நெகிழ வைத்தன. அதில் ஒன்று - கவிக்குயில் படத்துக்காக அவர் ஷூட்டிங் சென்றபோது மனிதக் கழிவுகளினூடே அவர் படுத்துக்கொண்டு நடிக்க நேர்ந்ததற்கு அவர் சொன்ன காரணம். புயல் காற்று அடிப்பது போன்ற காட்சியாம் அது. படுத்துக்கொண்டிருக்கும் சிவகுமாருக்கடியில் தண்ணீர் ஓடுகிறது. அதில் மனிதக் கழிவுகளும் கலந்திருந்த துர்நாற்றம் வீசுகிறது. ஆனாலும் அவர் சில மணி நேரங்கள் அப்படியே படுத்த நிலையில் அந்த துர்நாற்றத்தைப் பொறுத்துக்கொண்டு நடித்துக் கொடுக்கிறார். அதற்கு அவர் ஒரு காரணம் சொன்னார். அது சகலரையும் மிகவும் கவர்ந்திருக்கும். அதாவது மனித மலத்தை மனிதர்களையே அள்ளச் சொல்லும் பழக்கம் நமக்கிருக்கிருந்தது. அந்தக் கொடுமைக்கு தெரிந்தோ தெரியாமலோ நாமும் பொறுப்புத்தான். அதற்கு தண்டனையாக அதை நான் ஏற்றுக்கொண்டேன் என்று அவர் சொன்னார். இதே வார்த்தைகளில் அல்ல. இந்த அர்த்தத்தில். அவர் எவ்வளவு உயர்ந்த மனிதர் என்பதை அது நமக்கு காட்டுகிறது அல்ல்வா? இப்படி பல்வேறு துறைகளைப் பற்றியும் தமது கருத்துக்களைத் தெளிவாகவும் துணிவாகவும் சொல்லிவரும் நடிகர் சிவகுமார் செக்ஸ் பற்றியும் தமது கருத்துக்களைத் தெளிவாகவும் நல்ல புரிதலுடனும் சொல்கிறார்.

### அது பற்றிய கேள்வியும் பதிலும்

**செக்ஸ் பற்றி யாருமே தெளிவாகச் சொல்வதில்லையே... நீங்களாவது விளக்குவீர்களா?**

சிற்றின்பம் என்னும் செக்ஸ் முழுமையாக அறிந்தவர்க்கு பூமியிலேயே பேரின்பம். காமக்கலைக்கு கஜுராஹோ கோவில் எழுப்பிய பாரதத்தில் பெரும்பாலானோர்க்கு அந்தக் கலை பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லை என்பதுதான் சோகம். குழந்தை பிறக்க ஒரு துளி கொடுத்துவிட்டதாலோ, முதலிரவைத் தாண்டிவிட்டதாலோ நாம் செக்ஸ் கலையில் தேர்ச்சி பெற்றுவிட்டோமென்று கருதமுடியாது. ஆணின் உடல் அமைப்பு வேறு, உணர்வுகள் வேறு, பெண்ணின் உடல் அமைப்பு வேறு, உணர்வுகள் வேறு. ஆண் செயல்படுபவன் பெண் அதை பெற்றுக்கொள்பவள்.

## விக்னேஸ்வரன்

எத்தனை நதி பெருக்கெடுத்தாலும் கடல் மட்டம் உயராது. எத்தனை விறகுக் கட்டைகளைப் போட்டாலும் வேள்வி நெருப்பு அணையாது. அவ்வளவு வீரியமானது பெண்களுடைய செக்ஸ் உணர்வு. சூப்பர் மேன், ஸ்பைடர்மேன் என்று ஆகாயத்திலும் அடுக்கு மாடிகளிலும் பறந்தும் ஒருவன் ஜாலம் செய்யலாம். ஆனால் ஒரு பெண்ணை அவ்வளவு எளிதில் செக்ஸில் அடிபணிய வைக்க முடியாது. மனதாலும் உடலாலும் ஒத்துழைப்பதில்லை என்று ஒரு பெண் முடிவெடுத்து விட்டால், சடலத்தோடு உறவு கொண்ட விரக்தியே மிஞ்சும். ராமாயணத்தில் கௌதம முனிவன் மனைவி அகலிகையிடம் தேவேந்திரன் மாறுவேடத்தில் வந்து கூடுவான். தன் கணவன் என்று நினைத்து இணங்கிய அகலிகைக்கு அடுத்த சில நொடிகளில் இதுவேறு ஆடவன் என்று புரிந்துவிடுகிறது. இருந்தாலும் போகட்டும் என்று அனுமதித்துவிட்டாள் என்று ஒரு சம்பவம் உண்டு. இதை அறிந்த கௌதம முனிவன் அகலிகையைக் கல்லாகச் சமைத்துவிட்டான் என்று கதை போகும். டாக்டர் மாத்ருபூதம் செக்ஸ் பற்றிய விவாதத்தில் அகலிகையின் உணர்வை உறுதிப்படுத்துகிறார். எவ்வளவுதான் ஒரு பெண் மனதளவிலும் உடல்வழியாகவும் முரண்டுபிடித்தாலும், ஒரு காமுகனின் பலாத்காரத்தை - ஒரு கட்டத்தில் உடம்பு ஏற்றுக்கொள்கிறது. மனதை உணர்ச்சி தற்காலிகமாக வென்றுவிடுகிறது. சில கணம் உடல் அந்த உறவில் திளைத்து மூழ்கிய பின் மீண்டும் மனம் உணர்ச்சியை வெல்லும் போது நடந்துவிட்ட தவறுக்கு அவள் கதறி அழுவாள். இதுவே உண்மை என்கிறார்.

மனித உடம்பை இரண்டாகப்பிரித்து மேல் பகுதி சுத்தமானது, கீழ்ப்பகுதி அசுத்த மானது. வலது கை சுத்தம் இடது கை அசுத்தம் என்று பிள்ளைகளிடம் சொல்லித் தராதீர்கள் என்கிறான் ஓஷோ. உடல் முழுமையானது. வாயில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவேண்டுமென்றால் ஆசனவாய் சுத்தமாக இருக்கவேண்டும். ஆசனவாயில் அடைப்பு ஏற்பட்டால் துர்நாற்றம் மேலே கிளம்பி சிறுகுடல், இரைப்பை, உணவுக் குழாய் வழி வாயிலே புகுந்து வெளியேறும். ஆசனவாய் சிறுநீர்த்தாரை இரண்டையும் தூய்மையாக வைத்துக்கொள்ள குழந்தை களுக்குச் சொல்லிக்கொடுங்கள். சிறுவனோ சிறுமியோ சிறுநீர்க் கழித்தபின் அதிலே தேங்கும் உப்பின் காரணமாக, பிறப்புறுப்பில் அரிப்பு ஏற்படும்போது விரலால் சொறியவே செய்யும். அங்கு கை வைப்பது பாவம், தவறு என்று சொல்லி குழந்தைகளை அதட்டாதீர்கள், மிரட்டாதீர்கள். சிறுநீர் மற்றும் மலம் கழித்தபின் அந்தப்பகுதி களைச் சுத்தமாகக் கழுவப் பழக்கிவிடுங்கள். அதைவிடுத்து, வீண் மிரட்டல் விடுப்பதால் தன் உடம்பில் உள்ள அந்த உறுப்பு, வேண்டாத ஒன்று-தீண்டத்தகாதது என்று அந்தச் சிறுவன் அல்லது சிறுமி மனதிலே எண்ணம் படிய, அவர்கள் வளர்ந்து திருமணம் செய்து முதலிரவில் சந்திக்கும் போது ஏதோ கெட்ட காரியம் செய்கிறோம் - பாவ காரியம் செய்கிறோம் என்று பயந்தே கூடுகிறார்கள். அதனால் பிறக்கும் குழந்தை குழப்பத்துடன் மிரட்சியுடன் பிறக்கிறது.

ஒரு வயதுக்குப் பிள்ளைகள் வளர்ந்தவுடன் செக்ஸ் பற்றிய விடயத்தையும், பிறப்பு உறுப்புக்களின் பயன்பாட்டையும் குழந்தை களுக்குச் சொல்லிக்கொடுங்கள் என்கிறான் ஓஷோ. 'மனிதனுக்கு இயற்கையில் இரண்டு பசி உண்டு. ஒன்று மேல் வயிற்றுப்பசி. இன்னொன்று கீழ்வயிற்றுப்பசி. இரண்டு பசிக்கும் முறையாகத் தீனி போடாவிட்டால் அடங்காது' என்கிறார் கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ராஜநாராயணன். அறியாத வயதில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, ஐந்தாறு நாட்கள் அவளுடன் கூடிக்குலவி ருசி பழக்கிவிட்டு துபாய்க்கு நீ வேலை பார்க்கப் போய்விட்டால் அவள் கதி என்ன ஆகும்?

**ருசி கண்ட பூனை எத்தனை நாட்கள் பொறுமையாக இருக்கும்? இதில் அவள் தவறு எங்கே இருக்கிறது?**

ராமகிருஷ்ண பரமஹம்சர் வணக்கத்திற்குரிய துறவி. அவர் நாற்பது வயது தாண்டியே திருமணம் செய்துகொண்டார். சாரதா தேவிக்கும் அவருக்கும் இருபத்தியிரண்டு வயது வித்தியாசம். தன் மனைவியை அம்பாள் வடிவமாக, சக்தியின் பிம்பமாக பரமஹம்சர் பார்த்தார். அவரது பக்தியை சாரதா அம்மையாரும் அப்படியே ஏற்றுக் கொண்டார். அவர்கள் தெய்வீகத்தம்பதிகள். இன்று ஒரு ஆண் செக்ஸ் உணர்வு குறையத் துவங்கும் நாற்பது வயதில் தன்னைவிட 22 வயது குறைவான ஒரு பெண்ணை மணந்து, செக்ஸ் பற்றி எதுவும் அவளிடம் பேசாமல், நீ சக்தி வடிவம் என்று பீடத்தில் அமர்த்தி விபூதி அடித்தால் அவள் நிலை என்ன ஆகும்? யோசியுங்கள்! பூப்படைந்து ஆறு ஆண்டுகளில் செக்ஸ் உணர்ச்சிப்பொங்கிப் பிரவாகமெடுக்கும் வயதில் அவளை நீ 'அம்பாள் வடிவம் நெருங்காதே' என்றால் அவள் கதி என்ன ஆகும்? யோசித்துப் பாருங்கள். திருமணமாகி சில ஆண்டுகள் கழிந்ததும் செக்ஸ் உணர்வை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும். இரவு பகல் எந்நேரமும் அதே சிந்தனையோடு, இருபது ஆண்டுகள் கழித்தும் ஒரு ஆணோ பெண்ணோ அலையக்கூடாது. 'அதே சமயம் இனவிருத்திக்காக மட்டுமே மனைவியைக் கூட வேண்டும். மற்ற நேரம் அவளை நெருங்கக் கூடாது' என்கிற காந்திஜி தத்துவத்தைக் கடைப்பிடித்து, பக்கத்தில் படுத்திருக்கும் மனைவியைப் பாராமுகமாய் ரிஷயசிருங்கர் போல, முற்றிலும் உறவு தவிர்த்து வாழ்வதும் அவசியமில்லை.

முழுமையான செக்ஸ் இன்பம் என்பது உடலாலும் மனதாலும் ஒருமித்து திருப்தி அடைவது. உடலிலே குறைபாடு உள்ளவர் கள், ஆண்மை இழந்தவர்கள் கூட, ஒரு பெண்ணுக்கு மனதளவில் செக்ஸ் இன்பம் அனுபவித்த திருப்தியைக் கொடுக்கமுடியும். விடுமுறை நாட்களில் உங்கள் மனைவியை ஊட்டிக்கு பஸ்ஸில் அழைத்துப் போங்கள். மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே கல்லாறு பகுதியை பஸ் கடக்கும்போது குளிரில் பற்கள் தடதடக்கும். உங்கள் ஸ்வெட்டரை உங்கள் மனைவிக்குப் போட்டுவிடுங்கள். அதிகாலை ஆள்மறைக்கும் மேக மண்டலத்தில், மயிர்க்கூச்செரியும் குளிரில், தொட்டபெட்டா சிகரம் சென்று ஒருவரை ஒருவர் கட்டி அணைத்தபடி சூடான வேர்க்கடலைக் கொறியுங்கள். நடந்தே ஊட்டி ஏரிப்பகுதிக்கு வந்து 'பெடல் போட்டில்' ஐஸ்கிரீம் சாப்பிட்டவாறு ஒரு மணிநேரம் சவாரி செய்யுங்கள்.

அடுத்த பக்கத்தில் வரிசையாக மட்டக் குதிரைகள் நிற்கும். ஒரு குதிரையில் மனைவியை ஏற்றிவிட்டு லேக் ஏரியாவை ஒரு சுற்றுச் சுற்றுங்கள். பகல் விருந்துக்குப் பின் மேட்னி காட்சி. இரவு கதகதக்கும் ஹோட்டல் அறையில், நடுங்கிக்கொண்டு உள்ளே வரும் மனைவியை இறுகக் கட்டி அணைத்து படுத்துக்கொள்ளுங்கள். எழுபத்தைந்து விகித சந்தோசத்தை அவள் அனுபவித்திருப்பாள். உடல்ரீதியான செக்ஸ் இங்கே இரண்டாம் பட்சம்தான். ஆணைப் பொறுத்தவரை செக்ஸ் விடயத்தில் என்றுமே அவசரக்காரன்தான். அடுப்பை மூட்டாமலே யே, தோசைக்கல்லை அடுப்பின் மீது வைத்து தோசை மாவை ஊற்றிவிடுகிற புத்திசாலி இவன். சிலசமயம் தோசைக்கல், 50 தோசைகளை வேக வைக்கும் அளவு சூடாக இருக்கும்போது இவன் அரைக்கரண்டி மாவை மட்டும் ஊற்றுவான். பெண்களை நெருங்காமலேயே இருந்துவிடுவது உத்தமம். அவர்களை ஆட்டத்திற்குத் தயாராக்கிவிட்டு, நீ சீக்கிரமே ஆட்டத்தை முடித்து ஓடுவது பின்னால் விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

இயற்கையிலேயே அதிக செக்ஸ் பசி உள்ள ஆணுக்கு செக்ஸ் உணர்வு குறை வாக உள்ள மனைவி அமைவதும் உண்டு. அதிக செக்ஸ் பசி உள்ள மனைவிக்கு கையாலாகாத கணவன் அமைவதும் உண்டு. அப்போதுதான் 'வேலி தாண்டிய வெள்ளாடு' கதை நிகழும். 50 ஆண்டுகள் மணமொத்த தம்பதியாய் வாழ்ந்த ஒரு ஜோடி, ஊசி முனைகள் ஒன்றையொன்று தொட்டுக் கொள்ளும் நிலையில், உச்சம் தொட்ட

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

கடந்த இதழில் பிரசுரமாகிய பாலு மகேந்திரா பற்றிய கட்டுரையின் தொடர்ச்சியினை ***tamilvanakkam.com*** இணையதளத்தில் சென்று பார்வையிடலாம்.


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# இரு நண்பர்கள்

ஒரு முறை நவீன் என்ற சிறுவன் பள்ளிக்கூடத்தில் இருந்து நடந்து சென்று கொண்டு இருந்தான். அவன் இப்படி செல்லுகையில் ஒரு பணப்பை தெருவில் விழுந்து இருந்ததைக் கண்டான். அதை நவீன் எடுத்து யாருடைய பெயர் அதில் இருக்கிறது என பார்க்கலாம், என்று திறந்தால் அதற்குள் பணத்தை தவிர ஒரு சிறு கடுதாசி இருந்தது. அதில் 'இதை எடுப்பவருக்கு இந்தப் பணப்பை சொந்தம்', என்று எழுதப்பட்டிருந்ததை கண்டான். இது தன்னுடைய அதிஷ்டம் என்று நினைத்து சந்தோசப்பட்டான்.

சிலநாட்கள் சென்ற பின்னர் நவீன் அந்தப் பணப்பையை பற்றி ஒரு அதிசயத்தை கண்டான். அதிலிருந்து எவ்வளவு பணத்தை எடுத்தாலும், அந்தப் பணப்பையில் இருந்து பணம் குறையவில்லை. இதனால் நவீனும் அவனுடைய விருப்பப்படி சாமான்களை வேண்டினான். அவனுக்கு பேராசை இல்லாததால் அவன் பொருட்களை வேண்டி ஏழைகளுக்கு தானமும் செய்தான். இவ்வாறு செல்லுகையில் நவீனின் நண்பன் குமார் ஒரு நாள் நவீனிடம் விடயத்தை கேட்டான். நவீனும் நடந்த கதையை குமாரிடம் கூறினான். குமாரும் அந்தப் பணப்பையை தான் பாவிக்க விரும்பியதால் அதை நவீனிடமிருந்து கேட்டு வாங்கினான்.

குமாரோ பெரும் பேராசை உடையவன். அவன் நிறைய விளையாட்டு பொருட்களும், கதைப்புத்தகங்களும் வாங்கிக் கொண்டே இருந்தான். ஆனால் ஒரு காசையோ, பொருளையோ மற்றவர்களுக்கு கொடுக்கவே இல்லை. பணப்பையையும் நவீனிடம் திருப்பிக் கொடுக்கவில்லை. இது சரியல்ல என்று நவீன் கூறினாலும், குமார் அதை கேட்கவேயில்லை. வீடு நிறைய பொருட்கள் வாங்கி வந்து வைத்திருந்தான்.

இப்படி செல்லுகையில் ஒரு முறை இரு நண்பர்களும் பள்ளிக்கூடம் முடிவடைந்த பின்னர் குமாரின் வீட்டிற்கு சென்றனர். அங்கு வீட்டில் ஒரு பொருளும் இல்லாததை கண்டு அதிசயப்பட்டார்கள். பின்னர் பார்த்தபோது கதவு உடைந்தும், ஜன்னல் திறந்தும் இருந்ததை கண்டு யாரோ திருடர்கள் வீட்டில் ஒருவரும் இல்லாத போது எல்லாவற்றையும் திருடி விட்டார்கள் என்று உணர்ந்தனர்.

'இனி என்ன செய்வீர்கள்?' என்று நவீன் கேட்டான்.

பேராசையுடைய குமாரோ, 'வீட்டிற்கு தேவையான அளவு சாமான்களை வேண்டிவிட்டு இதை திருப்பி உங்களிடம் கொடுப்பேன். இதனால் தான் பேராசை எனக்கு வந்தது.



இனி நான் திருந்திவிட்டேன்.' என்றான். நவீனும் பிறகு தனக்கு அளவான பொருட்களை வாங்கி மிகுதியை ஏழைகளுக்கு தானம் செய்து வந்தான்.

**நீதி:- பேராசை பெரு நஷ்டம்**



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# முகம்...

**31ஆம் பக்கத்தொடர்ச்சி**

நீக்கும் முறையை 'வடக்கிருத்தல்' என்பர். மன்னன் வடக்கிருத்தலை மேற்கொண்ட செய்தி பிசிராந்தையரின் காதுக் கெட்டியது. அவர் எப்படியும் அவனைக் காண வேண்டும் என்று விரைந்து வந்தார். எனது இறுதி வந்து சேர்ந்தார் பிசிராந்தையர். மன்னனுடன் அவரும் வடக்கிருந்து உயிரை விட்டார். இது நண்பனுக்காக உயிர்விட முடியாவிட்டாலும் தோழமை பூண்டிருப்பது நல்லது. மனிதர்களிடம் நட்புப் பூண்டொழுகுதல் நீங்களும் உங்கள் வாழ்வில் பல சிகரங்களைத் தொட முடியும்.



மூச்சை விடும் நேரத்திலாவது அந்த இனிய நண்பனின் முகத்தைக் காணும் பேறு எனக்குண்டோ என ஏங்கினான் சோழன். மனிதர்களை சந்தித்து, நன்கு சிந்தித்து பந்தத்தை ஏற்படுத்தி வந்திக்கும் போது நட்பெனும் பூ நன்மணம் பரப்பும்.


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at ***Scarborough & Stouffville* Contact: 647.340.9490 / 416.732.2228**

**COMMERCIAL UNIT FOR Lease /SALE**

Main floor / Second floor commercial space for Lease / sale. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

**Pl. Call: 416.315.9397**

விளம்பரம் பத்திரிகையை இணையத்தளத்தில் வாசிப்பதற்கு

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# Education

Review Tutorials 13-15

- CHEMISTRY 11 & IB (stochiometry)

A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.

- CHEMISTRY 12

(A) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(B) Compare 3rd ionization energies of magnesium and fluorine

- Biology 12 & IB (macromolecules)

Identify and name the following compound.




- FUNCTIONS 11

(A) Determine the inverse of each linear function

(i) $f(x) = \frac{x-7}{5}$ (ii) $g(x) = -\frac{2x}{3} + 2$

(B) Simplify the following and state any restrictions on the variables

(i) $\frac{x+3}{x^2-4x-21}$ (ii) $\frac{x^2-3x--10}{x^2-2x+15}$

- ADVANCED FUNCTIONS 12

Consider the function $f(x) = \frac{3}{4x-5}$,

(i) Determine the following key features of the function (i) domain (ii) range (iii) $x$ – intercept(s)
(iv) y- intercept (s) (v) equation of the vertical asymptote: (vi) equation of the horizontal asymptote:

(ii) Sketch a graph of the function

PHYSICS (12)

Two cars A and B, move towards each other on a straight road same time from stations X and Y. The distance between X and Y is 500m. When the car A travel with a constant speed of 20m/s, then two cars crosses each other, 171 m from station X. When the speed of the car A is doubled, the two cars crosses each other 261m from station X. Determine the initial speed of car B ?

## Answer Key : 13-13

IB Biology

(A)Memory T cells are one type T-cells which provide immunity against future infections. Following an infection, some of the activated T-cells become memory cells. These memory T-cells are in a state of identifying recurrent infection (same infection) and produce many cells to fight against infection

(B)The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

(C) During exercise body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.

- BIOLOGY(Gr12) Hypothalamus controls the release of ADH (anti-diuretic hormone). ADH acting on the kidneys and increases the permeability of water in distal and collecting tubules in nephron. For example, high concentration of salts in the blood sodium signals the posterior lobe of the pituitary to release ADH. As a result more water will be reabsorbed. It leads to less urine is produced.

- PHYSICS

(A) (i) 1.1m/s² (ii) tension force acting on ropes are 130.5N and 108.5N. (iii) ? distance not given

(B) (i) 19.6 N (ii) 0.65m/s² (iii) 130.5N and 97.9N

- CHEMISTRY 12 & IB

$C_6H_6 + AlCl_3 \rightarrow C_6H_5CH_3 \rightarrow C_6H_5COOH$

$CH_3CH_2CH_2OH + H_2SO_4 \rightarrow CH_3CH(OH)CH_3 \rightarrow CH_3COCH_3$

$CH_3CHO \rightarrow CH_3CH_2OH \rightarrow CH_3COOCH_2CH_3$; $CH_3CHO \rightarrow CH_3COOH \rightarrow CH_3COOCH_2CH_3$

(ii) (a)$C_2H_5OH$ –weak base but nucleophilic $SN_1$ favour

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ major; $CH_3CHCH_2$ minor

(b) $C_2H_5O^-$ Strong base $E_2$ predominates

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ minor; $CH_3CH{=}CH_2$ major

- MATH (GR 11 &12).

$P(t) = -25t^2 + 250t - 400$

Solve for t when $P(t) = 0$; $-25(t-8)(t-2) = 0$

$t = 8$ or 2; least number of toy-cars that should be sold to breakeven is 20,000

*Answer key 13-14- next issue*

Contact: 647 341 3975
Dr. A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# நான்...

## 32ஆம் பக்கத்தொடர்ச்சி

இன்பத்தை - ஐந்து அல்லது ஆறு முறை அனுபவித் திருந்தால் பெரிய விடயம் என்கிறது ஒரு நூல்.

ஒன்று இவன் முந்தி உச்சம் தொட்டு அடங்கி விடுவான் அல்லது அவள் உச்சம் தொடும்போது இவன் ஓய்ந்திருப்பான்! உடல் பலத்தைப் பயன்படுத்தி செக்ஸில் வெற்றி பெறுவதைவிட, சாதுர்யத்தைக் கடைப் பிடித்து, பெண்ணை உச்சம் கொண்டு சென்று மகிழ்விப்பது எளிது. பூரண செக்ஸ் இன்பம் என்பது இருவரும் ஒரே சமயத்தில் உச்சநிலையை அடைவதே. அது தெய்வ நிலை.

உலகை மறந்த அற்புதக் கணம்!

அந்தக் கணங்களில்தான் ஈருடல் ஓருயிர் நிலையை இருவரும் எய்துகிறார்கள். இந்திய மண்ணில், பொதுவாக எந்தக் கணவனும் தன் மனைவியிடம் இன்று நீ சந்தோசமாய் இருந்தாயா என்று கேட்பதில்லை. பெண்ணின் திருப்தி - அவள் உடல் அசைவு களில், மயக்க நிலை முனகல்களில் வெளிப்படும். அதுபற்றி நாம் கவலைப்படு வதே இல்லை. டாய்லெட்டில் சிறுநீர் கழிக்கும் நேரமே இவன் செக்ஸுக்கு ஒதுக்குவது கொடுமை. இந்த லட்சணத்தில் விலைமாதரிடம் விளையாடி எய்ட்ஸ் வாங்கிவந்து வீட்டிலிருக்கும் மனைவிக்கும் அவள் வயிற்றில் சுமக்கும் அப்பாவிக் குழந்தைக்கும் அந்த எய்ட்ஸை தானம் செய்யும் புண்ணியவான்களும் உண்டு. எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாட்களில் செக்ஸ் கூடாது என்றுதான் பெண்கள் திங்கள், வெள்ளி தினங்களில் எண்ணெய்க் குளியல் போட வேண்டும். ஆண் சனிக்கிழமை குளிக்கவேண்டும் என்று வகுத்து வைத்தனர். தலையில் குளிர்ந்த எண்ணெய் வைத்து, அரக்கித் தேய்த்து உடம்பெல்லாம் பூசிவிடும்போது உச்சந்தலை உஷ்ணம் உடம்பின் கீழ்ப்பகுதிக்கு வந்துவிடுகிறது. அன்று மனைவியைக் கூடும்போது அதிகமாக உணர்ச்சி வசப்பட்டு சீக்கிரமே ஆட்டத்தை முடித்து விடுவான். உடல் சக்தியும் அதிகம் வீணாவதால் மறுநாள் உடல் அசதி கூடுதலாக இருக்கும்.

குடித்துவிட்டு உறவுவைத்தால், கொடிகட்டிப் பறக்கலாம் என்று பலர் நினைக்கின்றனர். மது, 'உடல் இன்ப வேட்கையை அதிகப்படுத்திவிட்டு, செயல்பாட்டைக் குறைத்துவிடும்' என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்று படித்தவர்கள்கூட பெண்களை போகப் பொருளாகவே பார்க்கின்றனர். காலையில் எழுந்து குளித்து, அடுப்பு பற்றவைத்து சிற்றுண்டி தயாரித்து, பிள்ளைகளைக் குளிப்பாட்டி, ஊட்டிவிட்டு யூனி∴பார்ம் போட்டு பள்ளிக்கு அனுப்பிய கையோடு, கணவனை கவனித்து பின் அரக்கப் பரக்க அலுவலகம் போய் ஆணாதிக்கம் மிக்க மேனேஜரிடம் அநியாயமாகத் திட்டுவாங்கி, மாலைவரை ∴பைல்களில் மூழ்கி, ஆறு மணிக்கு பஸ் பிடித்து அடித்துப் பிடித்து வீடு வந்து, கணவனுக்கு காபி போட்டுக்கொடுத்து, பிள்ளை களுக்கு பிஸ்கட் கொடுத்து, இரவு உணவு தயாரித்து எல்லோருக்கும் பரிமாறிவிட்டு உணர்ச்சி யற்ற பிணமாய்ப் படுக்கையில் சாய்பவள் - உனக்கு, ஊர்வசி ரம்பை போல் காட்சியளிக்க வேண்டும் - தாசி போல் இன்பம் தர வேண்டும் என்று நினைப்பது என்ன நியாயம்? ஓய்ந்து களைத்து உறக்கத்துக்கு ஏங்கும் உடம்பு ஒரு போதும் செக்ஸுக்குத் தயாராய் இராது. இன்றைய வாழ்க்கை அமைப்பில் கணவன் மனைவி சேர்ந்தாற்போல் இரண்டு மணிநேரம் வீட்டில் இருக்க வாய்ப்பில்லை. இருவரும் வேலைப் பார்க்கிறார்கள். பெரும்பகுதி அலுவலகத்திலும் பஸ் பயணத்திலுமே கழிந்துவிடுகின்றன. மிச்சமிருக்கிற சொற்ப நேரத்தில் பிள்ளைகள் படிப்பு, வீட்டு வாடகை, ரேஷன், பெட்ரோல் என்று பற்றாக்குறை பட்ஜெட் பற்றிப் பேசி

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# மாற்றங்கள்

## சிறுகதை

சிறுகதையை வாசிப்பதற்கு முன்பு, என் அன்பு வாசகர்களே! இந்தச் சிறுகதையின் பெயர்கள் மட்டும் பொய்யானவை. இந்தக் கதை என் நண்பரின் உறவினர் குடும்பத்தில் நடந்த உண்மைச்சம்பவமாகும். வாழ்வில் மாற்றங்கள் ஒன்றுதான் என்றும் மாறாதவை. அந்த மாற்றங்கள் நம் வாழ்வில் ஏற்படுகின்ற நல்ல மாற்றங்களாக இருக்க வேண்டும் என்ற நப்பாசையின் ஆதங்கத்தினாலும், நமது சமூகம் புலம் பெயர்ந்த நாடுகளில் சிறப்பாக வாழவேண்டும் என்பதனை இன்றைய இளைஞர், யுவதிகள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதனாலும் இந்த உண்மை சம்பவத்தை ஒரு சிறு கதையாக தந்துள்ளேன்.

அவசர.. அவசரமாக உடைமாற்றிக்கொண்டு வெளியில் வந்த நிரஞ்சனா, 'அம்மா நான் போய்ட்டு வாறன்' என்று குரல்கொடுத்தாள். மகளின் குரல்கேட்டு வெளியில் வந்த பார்வதி, பிள்ள எங்கயம்மா இந்த நேரம் போறாய் எனக் கேட்க, அம்மா நான் எத்தனை தடவை சொல்லியிருக்கின்றன் வெளியில போகேக்க இப்படி கேட்க வேண்டாமென்று சொல்லி தாயை கடிந்தவள், நான் சீக்கரம் வந்திடுவன் என சொன்னாள். அதற்கு பார்வதி புள்ள இந்த இரவு நேரத்தில உனக்கு என்ன அப்படி அவசர அலுவல் ஏதெண்டாலும் நாளைக்கு காலையிலை போவன் என்றவவை, காதில் விழுத்தாமல் கதவைத்திறந்து போனாள் நிரஞ்சனா. வாசலிலேயே மகள் போகும் திசையை பார்த்துக்கொண்டு நின்ற பார்வதிக்கு மகள் மறைந்துவிட்டாள் என்ற நினைவு வர சிறிது வினாடிகள் சென்றது.

2009 அந்த அழிவின் வடுக்கள் இன்னமும் தமிழர் நெஞ்சங்களிலிருந்து மாறாதநிலை. எப்படி மறக்கமுடியும்? எத்தனை இழப்புக்கள், எத்தனை பிரிவுகள், அங்கு ஒலித்த குழந்தைகளின் அழுகுரல் இன்றும் காதுகளில் கேட்டுக் கொண்டிருக்கின்றது. தந்தையை இழந்த குடும்பங்கள், தாயை பிரிந்த குழந்தைகள், ஏன் தாய், தந்தையை இழந்து நிற்கதியா நிற்கும் எம் வருங்காலத்தின் செல்வங்கள், அனாதையாக்கப்பட்ட கொடுமைகள். உலக நாடுகள் அனைத்துமே பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்று சொல்லி அப்பாவி மக்களை கொன்று குவித்து மகிழ்ந்த அந்த கொடுமைகள் பார்வதியின் நெஞ்சங்களில் அழியாமல் பசுமரத்தாணி போல இன்றும் இருக்கின்றது. நிறஞ்சனாவை காப்பாற்றுவதற்காக பார்வதியும், அவள் கணவனும் பட்ட துன்பங்கள், இறுதியாக தன் பூவையும், பொட்டையும் பறிகொடுத்து விட்டு, அந்த வெறிபிடித்த அரக்கர்களிடமிருந்து இவளை காப்பாற்றி இந்த நாட்டுக்கு வந்திறங்கிய வேளை பார்வதி அடைந்த மகிழ்ச்சி, இவ்வளவு விரைவாக மறையும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லை என்று எண்ணிக்கொண்ட பார்வதி என்ன இது மோட்சமென்று எண்ணி வந்த நாட்டில் இத்தனை மோசமான வாழ்க்கையா? என வெறுப்போடு இருந்தவவின் காதுகளில் தொலைபேசி மணியடிக்கும் சத்தம் கேட்டு, இது ஒரு பக்கம் இந்த நேரம் என கடிந்து கொண்டு ஹலோ சொன்னா, மறு முனையில் ஒரு ஆண் குரல் நிறஞ்சானா நிக்கிறாங்களா எனக் கேட்டது. பார்வதி நீங்கள் யார் பேசுகிறது என்று கேட்டதும் மறுமுனை தொலைபேசி துண்டிக்கப்பட்டது. தனக்குள் தானே திட்டி தீர்த்தாள் பார்வதி. இந்த நாடுகளுக்கு வந்தும் திருந்தாத ஜென்மங்கள் என்று கோபமாக திட்டினாள். சீ என்ன நாடு இது…. என்று திட்டியவவின் மனதில்…….

எப்படி இந்த நாட்டை நான் குறை கூற முடியும் என்ற கேள்வி எழுந்ததும், தன்னைத் தானே சுதாகரித்துக்கொண்டு இங்க வாழுகின்ற 3 இலட்சம் தமிழர்களில் எத்தனை பிள்ளைகள் கெட்டிக்காரராகவும் படிப்பில், வேலையில், இன்னும் எத்தனையோ சமூக விடையங்களில் முன்னேற்றமாகவும் எமது நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் இளைஞர்களாகவும் வாழ்கிறார்களே, "நான் அறிந்த மட்டத்தில் இப்படிப்பட்ட குழப்படி பிள்ளைகளை விட நல்லவர்கள் தான் அதிகம்" என்று எண்ணி தன் மகள் இப்படி ஆகிவிட்டாளே என மனம் வருந்தினாள். உன் நண்பனை தெரிந்தால் உன்னைத் தெரியும் என்பதுபோல் இங்கு கூடுகின்ற கூட்டத்தை பார்த்தால் தெரியும் தானே.

வாழ்வில் மாற்றங்கள் என்பவைதான் நிலையானவை, ஒவ்வொரு நாளும் நிகழ்கின்ற இயற்கையின் மாற்றங்கள், விஞ்ஞானத்தின் மாற்றங்கள், இப்படியாக எல்லாத்துறை மாற்றங்களால் தான் இந்த உலகம் அடுத்த கட்ட பரிமாணத்திற்கு முன்னேறிக்கொண்டிருக்கின்றது. ஆனால் சில மனிதர்கள் மட்டும் தம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தேவையான மாற்றங்களை மட்டும் தேர்வு செய்யமால் தங்கள் வாழ்வை அழிக்கும் தீய மாற்றங்களை தற்காலிக சுகத்தை, மகிழ்ச்சியை தங்கள் வாழ்வின் அவசியமாக கருதி, தேர்வு செய்து தங்களையே தாங்கள் அழித்துக்கொள்கிறார்களே இது எப்படி மாற்றமாகும். அதுவும் குறிப்பாக பின்தங்கிய நாடுகளில் இருந்து வந்த இளைஞர்களுக்கு இங்கு கிடைக்கின்ற சுதந்திரம் அவர்களின் வாழ்வை எப்படியெல்லாம் சீரழிக்கின்றது என்ற எண்ணங்களோடு இருந்த பார்வதியின் கதவு தட்டும் சத்தம் கேட்டு சுய நினைவுக்கு வந்த பார்வதி சென்று கதவை திறந்த போது இரண்டு இளைஞர்கள் தன் மகள் நிறஞ்சனாவை கை தூக்கலாக வைத்திருந்த காட்சி கண்டு ஒரு கணம் தன்னை மறந்தவவாக இது என்ன? என் பிள்ளைக்கு என்ன நடந்தது? என கத்தினார். தாயின் சத்தம் கேட்டு குடிபோதையில் இருந்த நிறஞ்சனா அம்மா கத்தாத என உளறினாள். திறந்த கதவுக்குள்ளால் அந்த இரண்டு இளைஞர்களும் அவளைக் கை தூக்காக



கொண்டு சென்று அவளின் பெட்டில் வளர்த்தி விட்டு அவசர அவசரமாக வெளியேறினார்கள். வெளிக்கதவை தாழிட்டு வந்த பார்வதி தலை தலையென அடித்து அழுது தன்னையும் வருத்தினார்.

என்ன வாழ்க்கை, இவளுக்காக தன் கணவனையும் பறிகொடுத்து இவளைக் காப்பாற்றி உலகிலேயே சிறந்த நாடாக பேசப்படும் இந்த நாட்டுக்கு தன் சொத்து பத்தெல்லாம் விற்று இங்கு வந்தால், எவ்வளவு நல்வாழ்க்கை இருக்க தீய கூட்டத்தோடு சேர்ந்து இவள் கெட்டுப் போனதை எண்ணி எண்ணி வேதனைப்பட்ட பார்வதி இதை விட இவளை அந்த சண்டையிலேயே சாக விட்டிருக்கலாம் என எண்ணி வேதனைப்பட்டார். உலகம் மாற்றங்களால் வளர்ச்சியின் எல்லையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற வேளை இந்தப்பிள்ளைகள் இப்படி கெட்டு சீரழிந்து போகிறார்களே என்ற பெருமூச்சோடு படுக்க சென்றார். துயரங்களால் சூழப்பட்டிருந்த பார்வதியின் இதயம் இன்றைய நிறஞ்சனாவின் வருகை கண்டு மேலும் மிகச் சோர்வடைந்ததை அவரால் உணர முடிந்தது. படுப்பதற்கு முன் இறைவா என் குழந்தையை காப்பாற்று என்று வேண்டிக் கொண்டார்.

இந்த உலகத்தில் வாழும் மனிதர்கள் மட்டும்தான் மாற்றங்களை புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பவர்கள். அவர்களில் கூட இந்த உலக மாற்றத்தின் நல்ல விடையங்களை விடவும் அதிகமாக கெட்ட மாற்றங்களையே சிலர் விரும்புபவர்களாகவும், எம்மில் சிலர் தங்களின் பிள்ளைகள் இந்த நாட்டுக்கு வந்தால் தான் கெட்டு விட்டதாகவும் எண்ணுகின்றார்கள். இப்படியாக கெட்டுப்போறவர்கள் எங்கிருந்தாலும் கெட்டுப்போவார்கள் என்பதனை, நாம் உணர மறுக்கின்றோம். இப்படியானவர்களில் தங்கள் வாழ்வில் ஏற்படுகின்ற பெரும் தாக்கத்தினூடாகவே மாற்றம் பெறுவர்கள். இவர்களுக்கு பெற்றோர், உறவினர்களின் அறிவுரைகள் எப்போதும் வேண்டாததாகவே இருக்கும். இந்த வளர்ச்சி கண்ட நாடுகளில் தனி மனித சுதந்திரம் நிறைவாக கிடைப்பதனால் தான் இவர்கள் இப்படியாக மாறுகின்றனர் என்ற வாதம் தவறானது என்பது மட்டும் உண்மை.

விடியலின் ஒளித்தெறிக்கைகள் யன்னல் வழியே தன்னை திணித்துக் கொண்டு சோர்வோடு படுத்திருந்த நிறஞ்சனாவின் கண்களைத் துளைத்தது. கண்ணில் பட்ட சூடு தாங்காமல் அசதியாக இன்னமும் போதை முறியாதவளாக சிணுங்கிக்கொண்டு கண் திறக்க முயற்சித்தவளை ஒளித் தெறிக்கைகள் விடாமல் தடுத்தது. சற்று அசைந்து ஒளித்தெறிக்கையை விலகி கண்ணைத்திறந்தவவுக்கு அட நன்றாக விடிந்து விட்டதே என எண்ணிக்கொண்டு எழும்ப முயற்சித்தவேளை அவளால் தன் தலையை தூக்க முடியாமல் பாரமாக இருந்தது. தனக்கு இரவு என்ன நடந்தது என்றே தெரிந்து கொள்ள முடியாதவளாக மீண்டும் படுத்தாள். பூமி சுற்றுகின்றது என்பதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக ஒளித்தெறிக்கையிலிருந்து விலகி சென்ற நிறஞ்சனாவை மீண்டும் வெயில் சுட்டது. முன்பை விட அதிகமாக சுட்டதனால் பாய்ந்து எழும்பினாள். இப்போது போதையும் சற்று குறைந்து இருந்ததை உணர்ந்தாள்.

அம்மா… அம்மா என கூப்பிட்டுக்கொண்டு ஹால், மற்றும் குசினி என தேடினாள். ஒரு இடமும் அம்மாவைக் காணாதது சற்று பயத்தினை கொடுத்தது. என்ன இது என்று தன்னைத்தானே கேள்வி கேட்டவள் தாயின் அறையை நோக்கி போனாள், அப்போது கூட அம்மா இவ்வளவு நேரம் தூங்க மாட்டாங்களே என எண்ணிக்கொண்டு கதவைத் திறந்தவளுக்கு மேலும் அதிர்ச்சி அதிகரித்தது. காரணம் அங்கு தாயார் தூங்கிக்கொண்டிருந்தமை கண்டு. என்ன இது இவ்வளவு நேரமாகியும் அம்மா எழும்பவில்லையே என பயந்தவளாக கிட்டே போய் கூப்பிட்டதற்கு எந்தவித பதிலும் இல்லாமை மேலும் பயத்தை அதிகரிக்க செய்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தொட்டு எழுப்பிய நிறஞ்சனாவின் பயம் உண்மையாகிப் போனது. ஐயோ! என் அம்மா என்னை விட்டு போய்ட்டாங்களே என கத்தினாள். இது தான் நம்மட ஊர் இல்லையே கத்திய சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வாறதற்கு. நிறஞ்சனா தனிமையிலேயே கதறினாள். அந்த கதறல் யாரையும் வரவழைக்கவில்லை. என்ன செய்வதென்றே தெரியாமல் உறவினர்களுக்கு தொலைபேசியில் தாயின் இழப்பை பற்றி சொல்லி அவர்கள் வந்துதான் என்ன செய்ய வேண்டுமோ அவற்றை செய்தனர். தாயின் இழப்பின் கொடுமையை



- ஆசீர் அன்ரனி -
ஸ்காபரோ, கனடா

தொடர்ச்சி 37ஆம் பக்கம்


**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிக்கு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: *Scarborough - Markham* - செல்வ சோதி - *416.289.2033*


Niru BRAND ®
FOOD PRODUCTS
நிரு பிரண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
Pure Gingelly Oil
(Sesame Oil)
Kitul Treacle
CHILLI SAUCE
COW GHEE
SPICY COFFEE
CONDENSED
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# நான்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

டென்ஷனாகவே இருக்கிறோம்.

கணவன் மனைவி வாரத்தில் கடைசி ஒருநாளாவது வீட்டைவிட்டு எங்காவது வெளியில் சென்றுவர வேண்டும். வசதி இல்லாதவர்களுக்கு சென்னையில் கடற்கரை இருக்கிறது. பாம்புப் பண்ணை, மிருகக் காட்சி சாலை இருக்கின்றன. வெளியூர் தம்பதிக்கு இருக்கவே இருக்கிறது சினிமா. அதை விட்டால் அருகில் ஏதாவது ஒரு கோயில். இப்படி அன்றாடப் பிரச்சினைகளை மறக்க ஒரு நாளையாவது ஒதுக்குங்கள். கணவன் மனைவியரிடையே விரிசல் ஏற்பட புறக்காரணங்களை விட, உடல் ரீதியான உறவில் ஏற்படும் குறைபாடு மற்றும் விரக்தியே அடிப்படைக் காரணம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு அனுசரித்து வாழவேண்டும் போகப்பொருளாக - துய்த்தபின் தூக்கி எறியும் வஸ்துவாக, பெண்களை நினைப்பதை நாம் மறந்து, அவளும் நம்மைப்போல் ஒரு ஜீவன். நமக்கு இருக்கும் விருப்பு, பொறுப்பு, ஆசாபாசம் அவளுக்கும் உண்டு. அவளில்லாமல் குடும்பத்தை ஒரு ஆண் உருவாக்கிவிட முடியாது. பரம்பரை தழைக்க முடியாது. நம்மைப் பெற்று வளர்ப்பவள் பெண். நம் வெற்றிக்குத் துணை நிற்பவள் பெண். நம் வயோதிகக் காலத்தில் பாசத்தைப் பொழிபவள் பெண்'. என்பதை உணர்ந்து நடந்தால் பூமியில் சொர்க்கத்தை அனுபவிக்கலாம்.



நன்றி : ராணி வார இதழ்.

# மாற்றங்கள்

35ஆம் பக்கத்தொடர்ச்சி

நிறஞ்சனாவின் தனிமை உணர்த்தியது. யார் அம்மாவின் இறப்பிற்கு காரணம் என யோசித்தாள்.

தன்னைப்போன்ற பெண்களின் மாற்றங்கள் எத்தனை அம்மாக்களை கொலை செய்திருக்கிறது என்று எண்ணிப்பார்த்தாள். நாங்கள் மூத்த குடிமக்கள் என்று உலகம் முழுவதும் சொல்லிக் கொண்டு வாழ்பவர் களுக்கு, வளர்ச்சி கண்ட நாடுகளுக்கு வந்ததும் நமது கலாச்சாரம், பண்பாடு எல்லாவற்றையும் மறந்து விடுகிறோமே ஏன்? என தன்னைத்தானே கேள்வி கேட்டாள். தனது தவறான நட்பு தான் காரணம் என்பதனை உணர்ந்தாள். இந்த நாடு எங்களுக்கு எவ்வளவு சுதந்திரம் தந்துள்ளது. அந்த சுதந்திரத்தினை நாங்கள் தவறாக பாவித்து கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகின்றதனால் தானே எங்கள் அம்மாக்கள் இறக்கிறார்கள் என்று எண்ணிய நிறஞ்சனாவின் மனதில் தனக்காக தன் அம்மா பட்ட கஸ்ரங்களை எண்ணி, அந்த அம்மாவின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணினாள். அதற்காக தனது அத்தனை கெட்ட பழக்கங்களையும் விடவேண்டுமென்று சபதம் எடுத்த நிறஞ்சனா தாயின் படத்திற்கு முன் மௌ-னமாக நின்றாள். அப்போது நிறஞ்சனாவின் உள்உணர்வில், தாயின் குரல்... நிறஞ்சனா எனக் கூப்பிட்டது. என் மகளே உன்னில் என் மரணம் மாற்றத்தை தந்ததென்றால் அதற்காக நான் இந்த மரணத்தை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளு கின்றேன். இந்த சத்தம் கேட்டு கண் திறந்த நிறஞ்சனாவிற்கு அங்கு யாருமே இல்லாததும், அம்மா தன்னோடு தான் இருக்கிறார் என்ற உணர்வுகளோடு புதுப் பெண்ணாக மாற்றம் கண்டாள், இப்படி எத்தனை நிறஞ்சானக்கள் வாழ்கிறீர்கள்? நிறஞ்சனாக்கள் மட்டுமல்ல எத்தனை ஆண்கள் உங்கள் வாழ்கையை இழந்திருக்கிறீர்கள் என்பதனை உணர்ந்து தாயின் இழப்பில் நிறஞ்சனா மட்டுமே மாறிய வளாக



இருக்கட்டும். இனிவரும் மாற்றங்கள் எந்த இழப்பையும் பரிசளிக்காது இருக்க நாங்கள் மாற்றம் காண்போம்... மாற்றங்கள் நம் வாழ்வை, நம் சமூகத்தை உயர்த்துவதாக அமையட்டும்.

• • •


Train to be a ...
Community Service Worker With CO-OP



Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER
ontario association of career colleges

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

citi COLLEGE
www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify






தெரிந்து கொள்ளுங்கள்!



> வாகனமோட்டியபடி செல்போன் பாவனை, பேசுதல், ரெக்ஸ்ற், ஈமெயில் பண்ணுதலுக்கான குற்றப்பணம் அதிகரிக்கிறது.



> மலேசிய விமானம் வானிலிருந்து மறைந்த செய்தி ஓய்ந்தபாடில்லை.



> ஐ.நா.சபையில் இலங்கைப்பிரச்சினை சூடு பிடிக்குமென்றால் அதுவும் இழுபடுகிறது.

> மக்களின் போர்க்கால கூக்குரலும் அழுகுரலும் ஒருவருக்கும் கேட்கவில்லை.



> புகைப்படங்கள் வீடியோப்படங்கள் திரையிடப்பட்ட ஆவணங்கள் உண்மையானதா பொய்யானதா என ஆராய தனிக்குழுக்கள்.

> புதைத்த உடல்கள் எலும்புகளாக வருகின்றன, விசாரணைகள் தொடர்கின்றன….



நீதியே உன் விலையென்ன என மக்கள் கேள்விக்குறியுடன் ஐ.நா.வின் நடவடிக்கையை பார்த்த வண்ணம் உள்ளனர். பனியும் குளிரும் பாராமல் சர்வதேச ரீதியில் மக்கள் தங்கள் கவன ஈர்ப்பை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கின்றனர்.

உலகர் ரெலிபோனை எடுத்து ஓம் உலகுதான் என்று சொல்லும்போது தெரியும் முருகேசருடன்தான் கதைக்கத் தொடங்கியுள்ளாரென்று. இனி மலேசியாவிலிருந்து மல்லாகம், மல்லாவி, மானிப்பாய் மருதடி தேருக்கு அந்தக்காலம் நடந்துசென்ற செய்தியெல்லாம் கதைத்து விட்டுத்தான் ரெலிபோன் வைப்பார். செக்கண்ட்புளோ செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் இலவச இணைப்பாக இணைந்துள்ள ஐ பொட் அகிலாவும் ரி.வி பார்த்தாலும் (வேலியில் நின்று பக்கத்து வீட்டுப்பிரச்சினை ஒட்டுக்கேட்பது போல) உலகர் கதைப்பதையே அவதானித்துக்கொண்டிருந்தனர்.




ஊசியோ உலக்கையோ ஒளிச்சு வைக்க?
பெரிய பிளேன் இண்டைக்கு கிட்டத்தட்ட விழுந்த இடமும் தெரியேல்லை, மறைஞ்ச இடமும் தெரியேல்லை?
இல்லை முருகேசு....
தேவையென்றால் அடிபடுவோம். தேவையென்றால் அணைத்துக் கொள்வோம் என.. தமிழக அரசியல் மேடைகளில் கேட்டுச் சலித்த வசனம் போல கிடக்கு. என்னதான் இடையிடை மண்ணுக்கும் எண்ணைக்கும் அதிகாரத்துக்கும் சண்டைப்பிடிக்கும் நாடுகள் சில விடயங்களில் ஒண்டுசேர்ந்ததைப் பாத்தியே முருகேசு எண்டு சிரித்துக்கொண்டு சொன்னார் உலகர்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, தைவான், பிலிப்பைன்ஸ், இப்பொழுது இணைந்துள்ள இந்தியா மேலும் பல நாடுகள் வான் தரை கடல் கடலின் கீழ் மட்டத்தில் (நீர் மூழ்கிக்கப்பல்மூலம்) இரவு பகலாக பிளேனைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். தேடுதல் நடைபெறுகிறது. சர்வதேச ரீதியில் உளவுப் பிரிவினர் இது பயங்கரவாத கடத்தலா என மூளையைக்குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

மேக்கப் இல்லாமல் வந்தது மட்டுமல்ல சோகத்திலும் வந்த ஐ பொட் அகிலாண்டேஸ்வரியை என்ன அகிலாண்ட்…என இழுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா. என்னதான் சிலர் எண் சாஸ்த்திரத்திற்கும் மற்றையோர் கேலி செய்வார்கள் என பெற்றோர் எத்தனை தவமிருந்து கடவுளை வேண்டி வைக்கும் பெயரைச் சுத்தமாக மாற்றிவைப்பதால் உறவினருக்கும் நண்பர்களுக்கும் எவ்வளவு கஸ்டமாக இருக்கும்?
(தன்னை மறந்தான் தன்நாமம் கெட்டான்)
சிலருக்குத்தான் பெயர் மாற்றம் அதிஸ்டத்தைக் கொடுக்கிறது?



வி.சி.கணேசன் - சிவாஜி கணேசன்
சிவாஜிராவ் - ரஜினி காந்த்
நகற்கான் - குஸ்பு
டயானா மரியா சூரியன் - நயன்தாரா
விஜயலக்சுமி - சில்க் சிமிதா
பெயரை மாற்றினால் போதாது அதற்கேற்ப அவர்களும் மாறவேண்டும்.

தனது பிறந்தநாளை (எத்தனையாவது என்று சொல்ல விரும்பாத) பிரமாண்டமாக கொண்டாட இருந்த ஐ பொட் அகிலாண்டேஸ்வரி மலேசியா, சிங்கப்பூர், இந்தியாவுக்கு சொப்பிங் போறதெண்டு பிளான் போட்டு ஒரு வாரமாகவில்லை மலேசியா பிளேன் மர்ம மறைவு ஐ பொட் அகிலாண்டேஸ்வரியின் திட்டத்தை குழப்பிவிட்டது.

அது மட்டுமல்ல செக்கண்ட்புளோர் செல்லம்மா, ஆட்டிலறி அன்னம்மா, உலகர், ராசம்மா ஆகியோரிடம் என்ன வாங்கி வருவது என பெரிய லிஸ்ற்ரே போட்டுவிட்டா. மலேசியா பிரயாணம் மயக்க நிலையில் இருப்பது ஒரு பக்கம்....




இங்கு தெரிந்த குடும்பங்களுடன் அவர்கள் பிள்ளைகளை மார்ச் பிறேக்குக்கு கூட்டிச்செல்லும்போது செக்கண்ட்புளோர் செல்லம்மாவையும் ஆட்டிலறி அன்னம்மாவையும் அழைத்துச்செல்வது வழக்கம். ஆனால் இந்த வருடம் பனிப்புயல் விட்டபாடில்லை. பெரிய வீதிகளில் ஒன்றோடொன்றாக எத்தனை வாகன விபத்துக்கள்? இந்தப் பனிச்சறுக்கலிலும் செல்போன் பாவித்து விபத்துக்குள்ளானவர்களைப் பற்றி பொலிசார் கூறிக்கொண்டுதான் இருக்கின்றனர்.
யார் கேட்கிறார்கள்?




மார்ச் 15 - 30.
மார்ச் பிறேக் மார்ச் 8…….16

16. பங்குனி உத்தரம்




20. வசந்தகாலம் ஆரம்பம்.

20. சேர். ஐசாக் நியூட்டன் நினைவுதினம்.
(வீழ்ந்த அப்பிளில் விடாமுயற்சி ஆராச்சி)



21. உலக கவிதை நாள்
23. 1752ல் கனடாவின் முதலாவது பத்திரிகை கலிபாக்ஸ் கசெட் வெளியிடப்பட்டது.
23. யாழ். சித்தர் யோகசுவாமிகள் நினைவு தினம். (1872 - 1964)
(என்னை யெனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்)



24. ரி.எம்.எஸ். …..ரி.எம்.சவுந்தரராஜன் பிறந்த தினம்
(எல்லோரும் நலம் வாழநான் பாடுவேன் நான் வாழ யார் பாடுவார்.)
24. டாக்டர்.சீர்காழி கோவிந்தராஜன் நினைவுதினம்.
(உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது வல்லவன் வகுத்ததடா)
27.சுவாமி விபுலாநந்தர் நினைவு தினம் (1892)…யாழ். நூல் எழுதியவர்.
29. மானிப்பாய் மருதடி விநாயகர் கொடி

Ontario Association of Certified Engineering Technicians and Technologists இன் யோர்க் பிராந்திய (YORK CHAPTER) தலைவராக திரு. கதிரவேல் கருணானந்தன் அவர்கள் 2013 ஆம் ஆண்டில் இருந்து மிகவும் அர்பணிப்புடன் செயலாற்றி வருகிறார். இவரோடு இணைந்து திரு. ரட்ணம் சிவரட்ணம் பொருளாளராகவும், திரு. ரகுராம் சோமசுந்தரம் நிர்வாக இயக்குனராகவும் தமிழ் சமூகத்திற்கு மூவரும் பெருமை சேர்க்கும் வரையில் செயலாற்றி வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இவர்கள் எமது சமூகத்தில் உள்ள பலருக்கும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும், தொழில் நுட்பத் தொழில் ரீதியான தொடர்புகளை மேம்படுத்தவும் உதவி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. OACETT இல் இணைவது பற்றிய மேலதிகவிபரங்களுக்கும் இவர்களை நாடலாம். YORK CHAPTER க்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் 2014 பங்குனி மாதம் (March) 29 ம் திகதி காலை 11:00 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நடைபெறவுள்ளது.




இடம் : York Region Polive Headquarters,
2700, Rutherford Road, Vaughhan
தொடர்புகளுக்கு: ரகு: 416.833.1817 / கருணா: 416.707.4382 / சிவா: 416.995.3662

# கும்மி



அப்பனும் ஆத்தாளும் ஆக்கிய
ஆக்கைக்குள்
ஆண்டவன் தானையா மூச்சுவைச்சான்
எப்போது வந்ததோ எப்போது போகுமோ
எத்தனை கூத்துகள் ஆடுகிறாய்!

என்றும் துடிக்குது என்பு மசையுது
என்றது நிற்குமோ யாரறிவான்
குன்றென ஓங்கும் கணித விழைவினால்
கூற்றுவன் செய்தொழில் காத்தனரோ?

உன்னுள் இருக்கிறான் உன்னை
அசைக்கிறான்
உண்மைப் பரம்பொருள்
உன்னுள்ளேதான்
பன்றியு மன்னமும் பாரெங்கும் தேடியும்
பார்த்தனரோ அந்தப் பரம்பொருளை?
பூத மடக்கியே பொய்யுடல் தன்னிலே
பூத்த இறைவனைத் தேடிடுவாய்
வாதமும் பேதமும் வேண்டாம் எமக்கையா
வாயாரப் பாடியே வென்றிடுவாய்!

- அருட்கவி தம்பிஜயா ஞானகணேசன

# தமிழ்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

அதன் பக்க விளைவுகளைக் கருத்தில் கொண்டு அவற்றைத் தவிர்த்து வந்தவர்.

வீடு தயாரிப்பாளர் நாரயணதாஸ் இவருடன் தனக்கு ஏற்பட்டடிருந்த நட்பு மற்றும் நெறி யாள்கையின் போது இவரது துல்லியத்தையும் சிலாகித்துப் பேசினார். இவரிடம் வீடு படம் தம்பாப்பிள்ளையின் பணத்தில் எடுக்கப்படுவ தாக இணையத்தளங்களில் கூறப்படுகின்றது. உண்மையா? எனக் கேள்வி எழுப்பட்டது. அதற்கு அவர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் வங்கிக் கொள்ளையில் எடுத்த பணத்தை ரெலோ இயக்கம் நெல்லியடியில் வைத்து பறிமுதல் செய்து விட்டது. இது இயக்கத்தின் ஆரம்ப கால வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும். அப்படி இருக்க தம்பாவிடம் ஏது காசு? என பதிலளித்தார். இவரது பதிலை சபையில் இருந்த பலர் ஆமோதித்தனர். 'நீங்கள் போட்ட பணம் உங்களுக்கு மீளக் கிடைத்ததா?' என்ற சபையில் இருந்தவரின் கேள்விக்கு சினிமாத் தயாரிப்பில் பணம் இழப்பும் பெரு வெற்றியும் சகஜம். முதலீடு செய்யும் போதே இழப்பைப்பற்றியும் அறிவேன் என்றார். டேவிற்சன் பேசத் தொடங்கும் பொழுது விழா அமைப்பினருக்கு நன்றி தெரி வித்து பேசினார். நான் நன்றி சொல்வதற்கு அவர் எனது குடும்பத்தினர் என்பதே காரணம் என்றார். எனது மாமா பாலு மகேந்திரா என்றார். பாலு மகேந்திரா யாழ். மாவட்டம் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவார். பின்னர் மட்டக் களப்பில் கல்வி கற்றார். உயர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றார். இவரது படங்களில் இடம் பெற்ற காட்சிகள் பல இவரது வாழ்க்கையில் இடம் பெற்றவை.. நவாலியில் உள்ள தேவாலயத்தில் இவரது சகோதரியின் திருமணம் மிகப் பெரியளவில் நடைபெற்றது. அப்போது பாதிரியார் இவரது சகோதரியைப் பார்த்து 'நீங்கள் மணமகனை திருமணம் செய்ய உங்களது வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொள்ள சம்மதிக்கின்றீர்களா?' எனக் கேட்டார். அதற்கு மணமகள் 'இல்லை' எனத் தெரிவித்தார். அத்துடன் திருமணம் நின்று விட்டது. இவ்வாறு பாலு மகேந்திராவின் வாழ்வில் இடம் பெற்ற சம்பவங்கள் சிலவற்றை நினைத்துப் பேசினார். இவரைத் தொடர்ந்த காலம் செல்வமும் பாலு மகேந்திராவிற்கும் தனக்குமான நெருக்கத்தை வெளிப்படுத்தினார். அதன் பின்னர் கலந்துரையாடலுடன் கூட்டம் நிறைவுக்கு வந்தது. பாலு மகேந்திராவின் பன்முகத்தன்மைகளும் அவரது வாழ்வியல் அவலங்களையும் பிராந்திய வல்லரசான இந்தியா அவர் மீது ஏற்படுத்திய படைப்புத் திறன் அராஜகத்தையும் பேச்சாளர்கள் சிறப்பாக வெளிப்படுத்தினர். தமிழ் மக்களின் பேசாப் பொருளாக இருந்த காமத்தை தனது படங்களின் ஊடாக அழகாக இயல்பாக வெளிப்படுத்தியதையும் பேச்சாளர்கள் வியந்து வெளிப்படுத்தினர். கூட்டத்தின் ஆரம்பத்தில் மூர்த்தி அவரது படங்களில் இருந்து சில காட்சிகளை தொகுத்து 15 நிமிட தொகுப்பாக வெளிப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து கதை நேரம் குறும்படத்தொகுப்பில் இருந்து சுந்தரராமசாமியின் பிரசாதம் சிறுகதை திரையிடப்பட்டது.



















**Free Real Estate Class - Call: 416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com www.tamilvanakkam.com**

